பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

கண்கவர் ஆடைத் தெரிவுகளுக்கு
சரவணா றெக்ஸ்
இல.526,529 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0778448045
இல.171, பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 சித்திரை 30, சனிக்கிழமை 13.05.2017 கதிர் 188

# தீர்வு தாமதிக்குமானால் சர்வதேச அழுத்தம் வரும்

## சம்பந்தனின் தலைமைத்துவம்: இந்தியப் பிரதமர் புகழாரம்!

கொழும்பு, மே 13

எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனின்அரசியல்தலைமைத்துவத்தை தமது மனம் நெகிழப் பாராட்டி, புகழாரம் சூட்டினார் இந்தியப்

பக்கம் 18 >>>

## இணைப்பும் சமஷ்டியும் கட்டாயம் மோடியிடம் சம்பந்தன் வற்புறுத்து



* வடக்கும், கிழக்கும் தமிழர்களின்பூர்வீகத்தாயகம். அதனைப்பிரிப்பதற்கு அனுமதிக்க முடியாது.

*சமஷ்டி முறையிலான தீர்வே நின்று, நிலைத்து, நீடிக்கக்கூடியது. தமிழருக்குநியாயம்சொல்லவல்லது.

பக்கம் 18 >>>

## இலங்கை அரசை எச்சரித்தாராம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி

கொழும்பு, மே 13

**இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் மேலும் தாமதம் ஏற்படுமானால் இலங்கை சர்வதேச அழுத்தத்தை எதிர்கொள்ள நேரிடும். அதனை இலங்கைத் தலைவர்களுக்குஎடுத்துத்துரைத்துள்ளோம்.**

**- இவ்வாறு தம்மைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளிடம் நேரில் தெரிவித்திருக்கின்றார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.**

பக்கம் 18 >>>



விடைபெற்றார் மோடி

## டிக்கோயா மருத்துவமனை; கையளித்தார் பிரதமர் மோடி

ஹட்டன், மே 13

இந்திய அரசின் அன்பளிப்பாக 120 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட - பூரண உபகரண வசதிகளுடன்கூடிய - ஹட்டன் டிக்கோயா ஆதார மருத்துவமனை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் நேற்று நண்பகல் மக்களிடம் கையளிக்கப்பட்டது.

பக்கம் 18 >>>





## மோடியுடன் கூட்டமைப்பு சந்திப்பு: முதல்வர் விக்கிக்கு அழைப்பில்லை

### தாம் வேண்டாத ஆள்தானே என்று அவர் விசனம்



யாழ்ப்பாணம், மே 13

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் நடத்திய சந்திப்புக்கு வடக்கு முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் அழைக்கப்படாத

பக்கம் 18 >>>

## மலையகத்தில் தமிழிலும் பேசிய மோடி



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மலையகத்தில் தமிழ் மக்கள் முன்னிலையில்தமிழில்உரையாற்றிஅனைவருடைய கவனத்தையும் ஈர்த்துள்ளார்.

ஹட்டன் -டிக்கோயா, கிளங்கன் வைத்தியசாலையை திறந்துவைத்து, நோர்வூட் மைதானத்தில் நடை

பக்கம் 18 >>>

## பின்னிரவில் மோடி - மஹிந்த சந்திப்பு



கொழும்பு, மே 13

கடைசி நேரத்தில் - அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாட்டின்படி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் சுமார் ஒரு மணி நேரம் சந்தித்து உரையாடினார் இலங்கைக்கு வருகை தந்திருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.

பக்கம் 18 >>>

## வாகனம் குடைசாய்ந்து ஒருவர் பலி ஒட்டுசுட்டானில் நேற்றுச் சம்பவம்



முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான், பெரிய இத்திமடுப் பகுதியில் சிறிய ரக வாகனம் ஒன்று நேற்றுப் பகல் வேகக்கட்டுப்பாட்டை இழந்து குடைசாய்ந்ததில்சம்பவ இடத்திலேயே ஒருவர் உயிரிழந்தார். படுகாயமடைந்த இருவர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். ஒட்டுசுட்டான் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## மோடியின் ஹெலி தரையிறங்கியபோது வீடுகள் சேதம்; பெண்ணொருவர் காயம்

### ஹட்டன் டன்பார் விளையாட்டு மைதானத்தில்

கொழும்பு, மே 13

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி பயணித்த ஹெலிகொப்டர் ஹட்டன் டன்பார் விளையாட்டு மைதானத்தில் தரையிறங்கியபோது மைதானத்துக்கு அருகிலிருந்த 3 வீடுகள் சேதமடைந்து துள்

பக்கம் 18 >>>

## பஸ் - மோ.சைக்கிள் மோதி விபத்து பொலன்னறுவையில் நால்வர் பலி!

மோட்டார்சைக்கிளும் பஸ்ஸும் நேருக்கு நேர் மோதியதில் மோட்டார் சைக்கிளில் வந்த நால்வர் உயிரிழந்தனர்.

மட்டக்களப்பு - ஹபரண பிரதான வீதி

பக்கம் 18 >>>

## கீதா குமாரசிங்கவின் எம்.பி. பதவி பறிப்பு: நீதிமன்றத் தீர்ப்பு திங்கள் வரை நிறுத்தம்

கொழும்பு, மே 13

காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் கீதா குமாரசிங்க தெரிவு செய்யப்பட்டமையை முறையற்றது எனத் தெரிவித்து மேன் முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நாளை மறுதினம்திங்கட்கிழமை வரை உயர் நீதிமன்றம் இடை

பக்கம் 18 >>>

## காங்கேசன் கடற்பரப்பில் ரூ. 9 கோடி மதிப்புள்ள ஹெரோயின் மீட்பு



யாழ்ப்பாணம், மே 13

காங்கேசன்துறை கடற்படைத்தலைமையகத்தில் இருந்து 10 மைல் கடல் தொலைவில், கடலில் வீசப்பட்டிருந்த ஹெரோயின் போதைப் பொருள் கடற்படையினரால்மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட போதைப் பொருளின் பெறுமதி இலங்கை மதிப்பீட்டில் 9 கோடி ரூபாய் என கணக்கிடப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை

பக்கம் 18 >>>

அசப்பு அருணாசலம்



நீதியரசருக்கு இப்பதான் உது விளங்குதோ..?

### கீதா குமாரசிங்கவின் பெயர் இடம்பெற்றிருந்தால்

## காலி மாவட்ட ஐ.ம.சு.மு. வேட்பாளர்களின் பட்டியலை நிராகரிக்கக் கோரி வழக்கு!

### தாக்கல் செய்ய தயாராகிறது ஐ.தே.க.

கொழும்பு, மே 13

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் காலி மாவட்டத்தில்தாக்கல்செய்யப்பட்ட வேட்பாளர் பட்டியலை

பக்கம் 18 >>>

# யாரையும் திருப்திப்படுத்த வேண்டிய தேவை இல்லை என்கிறார் விஜயதாஸ!

## இலங்கையில் சர்வதேச விசாரணைக்கு ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்றும் தெரிவிப்பு



கொழும்பு, மே 13

எவரையும்தனிப்பட்ட முறையில் திருப்திப்படுத்த சர்வதேச விசாரணைகளை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கையை கருத்தில் கொண்டு சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காகுமாரதுங்க கருத்து முன்வைத்துள்ள நிலையிலேயே நீதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தரப்பு முன்வைக்கும் காரணிகள் நியாயமான காரணிகளாகும்.

யுத்தத்தில் பாதிக்கப்பட்டு, அகதியாக்கப்பட்ட மக்கள் மீண்டும் சொந்தப் பகுதியில் குடியமர்த்தப்படல் வேண்டும், காணாமல் ஆக்கப்பட்ட மக்கள் தொடர்பில் உண்மைகளைக் கண்டறிதல், ஏனைய யுத்த குற்றங்கள் தொடர்பில் சரியான வகையில் அரசு செயற்பட வேண்டும் என்று தமிழர் தரப்பு முன்வைக்கும் காரணிகள் நிராகரிக்க முடியாது. ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயங்களாகும்.

யுத்தத்தின் பின்னர் தொடர்ச்சியாக இந்த காரணிகள்முன்வைக்கப்பட்டு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்றது. எனினும் முன்னைய ஆட்சியில் நல்லிணக்கம் மற்றும் மீள்குடியேற்ற நகர்வுகள் கவனத்தில் கொள்ளப்படாத நிலைமையில் சர்வதேச அழுத்தம் பலமடைய ஆரம்பித்தது.

எனினும் நாம் ஆட்சிக்கு வந்து இரண்டு ஆண்டுகளில் நல்லிணக்கத்தைப் பலப்படுத்தும் வேலைத் திட்டத்தை பலமாக முன்னெடுத்து வருகின்றோம். கடந்த 2 ஆண்டுகளில் வடக்கு கிழக்கு பகுதிகளில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

படைகளின் வசம் இருந்த பொது மக்களின் காணிகள் பெரும்பாலும் விடுவிக்கப்பட்டு வருகின்றன. அரசு நல்லிணக்கத்தை உருவாக்கும் வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்ற போதிலும் மறுபுறம் புலம்பெயர் அமைப்புகள் நாட்டில் சர்வதேச தலையீடுகளை ஏற்படுத்தி, அதன் மூலம் தமது தேவைகளை நிறைவேற்றும் வகையில் செயற்பட்டு வருகின்றனர்.

இலங்கையில் ஒரு தரப்பினர் சர்வதேச தலையீடுகள், கலப்பு விசாரணை பொறிமுறை என்பன தொடர்பில் கருத்துக்களை முன்வைத்த போதிலும் இவர்களின் கோரிக்கையை சாதகமாக பயன்படுத்தி நாட்டில் மீண்டும் குழப்பங்களை ஏற்படுத்த சர்வதேச தரப்பு அமைப்புகள் எதிர்பார்த்து உள்ளன. ஆனால், அந்தக் காரணிகளுக்கு ஒருபோதும் எம்மால் இடமளிக்க முடியாது.-என்றார். (ஐ)

## முள்ளிவாய்க்கால் இன அழிப்பு வாரம் செம்மணியில் நேற்று ஆரம்பித்து வைப்பு





முள்ளிவாய்க்கால் இன அழிப்பு வாரம் செம்மணி படுகொலை நடந்த மண்ணில் நேற்றுக் காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நினைவுதின அனுஷ்டிப்பில் மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், திருமதி அனந்தி சசிதரன், ஆ.பரஞ்சோதி, க.விந்தன், வடமாகாண எதிர்க் கட்சி தலைவர் தவராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது முள்ளிவாய்க்கால் மண்ணில் படுகொலை செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களையும், செம்மணியில் படுகொலை செய்யப்பட்ட மக்களையும் தீபம் ஏற்றி நினைவு கூர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாதுகாப்பான ரயில்வே கடவை அமைக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

தென்மராட்சி, மே 13

சாவகச்சேரி புளியடி ரயில்வே கடவையை மீண்டும் பாதுகாப்பான ரயில்வே கடவையாக்குமாறு கோரி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். முன்பு டக்ளஸ் தேவானந்தாவிடம் மகஜர் கையளிக்கப்பட்ட நிலையில் அதற்கான காவலாளி நியமிக்கப்பட்டிருந்தார்.



தற்போது காவலாளி இன்மையால் தாங்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

பல கிராம மக்கள், மாணவர்கள் பயன்படுத்தும் இந்த வீதிக்குப் பாதுகாப்புக் கடவை அமைத்துப் போக்குவரத்துக்கு வசதி செய்யப்பட வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

அங்கு வருகை தந்த வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் -

அரச அதிபர், தென்மராட்சி பிரதேச செயலர், சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினர், ரயில்வே திணைக்களத்தினர் பங்குபற்றும் கூட்டமொன்றை ஒழுங்கமைத்து இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (ஐ)

## அதிபர் பதவி உயர்வு தொடர்பில் கொழும்பில் ஒன்று கூட முடிவு!

அதிபர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொடுப்பதற்கு அதிகாரிகள் தவறியுள்ளமைக்கு எதிராக எதிர்வரும் 24 ஆம் திகதி நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளின் அதிபர்களையும் கொழும்புக்கு அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கூறியுள்ளது.

2009 ஆம் ஆண்டு அதிபர்களாக நியமிக்கப்பட்ட சுமார் 4 ஆயிரத்து 200 பேருக்கு இதுவரை பதவியுயர்வு வழங்கப்படவில்லை என்று அந்தச் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கூறினார்.

அத்துடன், சுமார் 3 ஆயிரம் அதிபர்களுக்கு நியமனம் வழங்க கல்வித்துறை அதிகாரிகள் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று ஜோசப் ஸ்டாலின் கூறியுள்ளார். (ஐ)

## ரணில் இன்று சீனாவுக்கு!

கொழும்பு, மே 13

சீனாவில் இடம்பெறவுள்ள மாநாடொன்றில் கலந்து கொள்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று சீனாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

30 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ள உள்ள இந்த வட்ட மேசை கலந்துரையாடல் சீனாவின் பீஜிங் நகரில் இடம்பெறவுள்ளது.

சீன ஜனாதிபதியின் எண்ணக் கருவில் உருவான ''ஒரே பிராந்தியம்; ஒரே பாதை'' என்ற தொனிப் பொருளில் இந்த மாநாடு இடம்பெறவுள்ளது.

சிறப்பு பொறுப்பு அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம, நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம், சட்டம் மற்றும் ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க, சர்வதேச வர்த்தகம் மற்றும் மூலோபாய அமைச்சர் மலிக் சமரவிக்ரம, பிரதமரின் செயலாளர் சமன் எக்கநாயக்க உள்ளிட்டவர்கள் பிரதமரின் இந்த விஜயத்தில் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

## புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் மாற்றம் செய்யுமாறு சர்வதேசம் அழுத்தம்

அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் மாற்றங்களை மேற்கொள்ளுமாறு, சர்வதேச இராஜதந்திரிகள் ஊடாக இலங்கை அரசுக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் கடந்த மாதம் 25ஆம் திகதி அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

இந்த சட்டவரைவை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடுமையாக எதிர்த்துள்ளது. நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தைவிட மிக் மோசமான வரைவாக இது அமைந்துள்ளது எனவும் அது சாடியுள்ளது.

மேலும், பயங்கரவாதச் சட்டவரைவு கடந்த வருடம் வெளியாகிய போது அதில் 4 திருத்தங்களைக் கூட்டமைப்பு முன்வைத்திருந்தது.

அவற்றில் ஒரு திருத்தம் மாத்திரமே உள்வாங்கப்பட்டுள்ள நிலையில், எஞ்சிய திருத்தங்கள் புறந்தள்ளப்பட்டுள்ளன. இந்த நிலையில், புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் வெளிநாடுகளால் அங்கீகரிக்கக் கூடிய வகையில் இல்லை.

உலக நாடுகளில் உள்ள பயங்கரவாதம் தொடர்பான சட்டங்களை மீறிய வகையில், மக்கள் சுதந்திரத்தை ஒடுக்கும் விதத்தில் இலங்கை அரசு தயாரித்துள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொழும்பில் உள்ள இராஜதந்திரிகள் கண்டித்துள்ளனர்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறும், இராஜதந்திரிகள் அழுத்தங்களைக் கொடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பொருத்து வீடுகள் கட்டப்பட்டால் கடும் எதிர்ப்பு வெளிப்படுத்தப்படும்

## வடக்கு முதல்வர் மீள்குடியேற்ற அமைச்சருக்கு எச்சரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாண சபையினதும் மக்களதும் கருத்துக்களைப் புறந்தள்ளி வடக்கில் 6 ஆயிரம் பொருத்து வீடுகள் அமைக்க எடுக்கப்படும் திட்டத்திற்கு கடும் எதிர்ப்புவெளிப்படுத்தப்படும்என மீள்குடியேற்றஅமைச்சர்சுவாமிநாதனிடம் தாம் சுட்டிக்காட்டினார் என வடமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக வடக்கு முதலமைச்சர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கில்6ஆயிரம்பொருத்து வீடுகள் கட்டுவதற்கு அமைச்சரவையில்தீர்மானம்நிறைவேற்றப்பட்டுள்ளது. பொருத்துவீடுகள் அமைக்க எடுக்கப்படும் நடவடிக்கைக்குகடந்தகாலங்களில்கடும் எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டன. ஆனாலும் அந்த வீடுகளையே கட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

6 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்கு மத்திய அரசாங்கத்தின் அமைச்சரவை தீர்மானித்துள்ளது என மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் கொழும்பில் உள்ள எனது வீட்டில் என்னைச் சந்தித்துக் கூறினார்.

எமது மாகாண மக்களுடன் கலந்துரையாடாமல்இவ்வாறான தீர்மானங்களை எடுப்பது எமது மாகாண மக்களைப் புறக்கணிக்கும்செயல்எனசுட்டிக்காட்டினேன்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவமோகன் மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் தமது மக்களுக்கு உடனடியாக வீடுகள் தேவையாக இருக்கின்றதெனகேட்கின்றார்கள். எனவே, அவர்களுக்காக இந்த வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கின்றது என்றார் சுவாமிநாதன்.

3 அல்லது 4 இடங்களில் இருந்துவீடுகள்எவ்வாறுகட்டப்பட வேண்டுமென்ற திட்டங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்தத் திட்டங்களை பரிசீலனை செய்து முடிவுக்கு வர வேண்டுமே தவிர, தான்தோன்றித்தனமாக தீர்மானங்களை எடுப்பது முறையாகாது என சுட்டிக்காட்டினேன். அமைச்சரவையின் கட்டளையையேதாம்நடைமுறைப்படுத்துகிறார் என சுவாமிநாதன் குறிப்பிட்டார்.

மேலும், எமது அமைச்சர்களுடன்கலந்துரையாடிவிட்டுஇவ்வாறான தான் தோன்றித்தனமாக கட்டப்படும் வீட்டுத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பேன் என அமைச்சர் சுவாமிநாதனுக்கு நான் கூறினேன். – என வடக்கு முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம–07)

# நீர் வீண் விரயமாவதைத் தடுப்பது மத்திய, மாகாண அரசுகளின் கடமை

## யாழில் ஆஸ்திரேலிய அதிகாரிகள் வலியுறுத்தல்

(எஸ்.நிதர்ஷன்)

நீரை வீண் விரயமாக்காமல் தடுப்பது தொடர்பாக மத்திய, மாகாண அரசுகள் தனித் தனியாகச் செயற்படுகின்றன. இதனால் எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை. அதனால், இரு தரப்பையும் உள்ளடக்கி அதிகாரபூர்வ அமைப்பு ஒன்றை ஸ்தாபிக்க வேண்டும் எனஆஸ்திரேலியாவில்இருந்து வருகை தந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச நீர் மையத்தில் இருந்து ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கைலி மிலிகன், பாப் பலோ போரன்ஸ் ஆகிய இரு அதிகாரிகளும் நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்து வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரனைச் சந்தித்து வடக்கில் நீர் விரயமாவதைத் தடுப்பதுதொடர்பாக கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பான வடக்கு முதல்வர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் –

வடமாகாண சபையின் உறுப்பினர்கள் சிலரும் பொறியியலாளர்களும் கடந்த சில மாதங்களுக்குமுன்னர்ஆஸ்திரேலியாவில் இடம்பெற்ற நீர் தொடர்பாக கருத்தரங்கு ஒன்றுக்குச் சென்றிருந்தனர்.

அந்த கருத்தரங்கின் அடிப்படையில் இங்கு என்ன நடைபெறுகின்றது, மேலதிகமாக என்ன செய்யப்பட வேண்டும் என்பவற்றை அறிந்து கொள்வதற்காக ஆஸ்திரேலிய அதிகாரிகள் வந்திருந்தார்கள்.

அவர்களுடன் இது தொடர்பாகக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போது, கருத்தரங்குகளில் ஆராயப்படும் விடயங்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினார்கள்.

குறிப்பாக நாங்கள் ஒரு மட்டத்தில் பேசி முடிவெடுக்கும் விடயங்களை மக்கள் அறிந்து கொள்வதில்லை. மக்களின் பங்கேற்பு இருந்தால் மட்டுமே நீர் பாவிப்பு முறைகளில் மாற்றங்களைக் கொண்டுவர முடியும் என்றனர்.

நீர்விரயமாவதைத்தடுக்கும் பொறிமுறைக்கு மாறாகமக்கள் செயற்பட்டால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர். – என வடக்கு முதல்வர் கூறினார். (ம–07)

# கொழும்பு - வாரணாசி நேரடி விமான சேவை மோடியின் அறிவிப்புக்கு சிவசேனை வரவேற்பு

## காங்கேசன்துறை - காரைக்கால் கப்பல் சேவைக்கும் கோரிக்கை

இலங்கையின் இந்துக்கள் தங்கள் வழிபாட்டுக்கடமையைச் செய்ய காசிக்குச் (வாரண்ாசி) செல்வதற்குக் கொழும்பில் இருந்துவிமானசேவைஒழுங்கு செய்யப்படும்என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்தமைக்கு இலங்கைசிவசேனை வரவேற்பைவெளியிட்டுள்ளது.

பாரதப் பிரதமரின் இந்த நடவடிக்கையைத்தாங்கள்பாராட்டி வரவேற்கின்றனர்என இலங்கை சிவசேனைத் தலைவர் மறவன் புலவுக.சச்சிதானந்தன்தெரிவித்துள்ளார். இதேபோன்று, ஈழத்து சைவ மக்கள் சிதம்பரம் ஆலயத்தை தரிசிப்பதற்காக காங்கேசன் துறையில் இருந்து காரைக்காலுக்குப் படகுச் சேவையை நடத்தநடவடிக்கைஎடுக்கவேண்டும் என வும் அவர் பிரதமர் மோடியிடம்கோரிக்கைவிடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக இலங்கை சிவசேனைத் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் நேற்றிரவு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை இந்துக்களுக்கும் காசிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இதற்கு நல்லூரில் சங்கிலியன் தோப்பில் இருக்கும் யமுனை ஏரி ஒரு சான்று. யமுனையில் இருந்து ஆரியச்சக்கரவர்த்திகள் கொணர்ந்த நீரால் அமைந்த ஏரியே யமுனை ஏரி.

யாழ்ப்பாணம் குரும்பசிட்டியில் பிறந்து காசிக்குச் சென்று வாழ்ந்து வடமொழிதமிழ் இரண்டிலும் புலமைபெற்ற பெருமகனாரின் பெயரே காசிவாசி செந்திநாதய்யர். அண்மைக் காலமாக இலங்கையருக்குச் சொந்தமான திருமடத்தைக் காசியில் நிறுவி, இலங்கையில் இருந்து போவோர் வருவோருக்கு வசதி செய்துள்ளனர் ஐரோப்பா வாழ் தமிழர்.

ஒருவர் இறக்கும் நேரத்தில் காசித்தீர்த்தம் பருக்கும் வழமை ஈழத் தமிழர் மரபு. அவர் இறந்த பின் உடலை எரித்து, சாம்பலை பிரயாகையில்யமுனை, கங்கை, சரசுவதிகலக்கும் இடத்தில்கரைப்பதும் நீத்தார்கடன் ஆற்றுவதும் பின்னர் காசிக்கு வந்து கங்கையில் மூழ்கி நீத்தார் கடன் செய்வதும் ஈழத் தமிழர் மரபு.

காசிக்குவழிபாட்டுப்பயணம் மேற்கொண்டு ஈழம் திரும்பியதும்அடியவர்களைஅழைத்து, திருநீறு கொடுத்து, காசிக் கயிறு கட்டி, திருமுறைகள் ஓதி, அன்னம் பாலித்து விழாக்காணலும் ஈழத் தமிழரின் பண்டைய மரபு.

எதிர்பார்க்காதபெருங்கொடையாகப் பிரதமர் மோடி காசிக்கு விமானசேவையைஅறிவித்துள்ளார். இலங்கைஇந்துக்களாகிய நாம் வாழ்த்துகிறோம், பாராட்டுகிறோம், போற்றுகிறோம். காங் கேசன்துறையில் இருந்துகாரைக்கால்சிதம்பரம் திருக்கோயில் வழி பாட்டுப் பயணத்துக்கு இலங்கை அரசு அனைத்து உரிமங்களையும் வழங்கி உள்ளது. இந்திய அர ன் ஒத்துழைப்புக் கேட்டுக் கடிதம் எழுதியுள்ளது. பிரதமர் மோடி இந்திய அரசின் அனுமதியை வழங்குவதுடன் வழிபாட்டுப் பயணத்துக்காக அந்தமான் தீவுப்பகுதியில் உள்ள பயணக் கப்பல் ஒன்றையும்தந்துதவவேண்டும் என சிவசேனை சார்பில் விண்ணப்பிக்கிறோம்.– என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## இணைப்பும்...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்திப்பு நேற்று மாலை 4.20 க்கு இடம் பெறுவதாக இருந்தது.

எனினும் மலையகத்தில் ஹட்டன் – டிக்கோயா நிகழ்வுகள், கண்டி தலதா மாளிகை வழிபாடு ஆகியவற்றைமுடித்துக்கொண்டு இந்தியப் பிரதமர் கட்டுநாயக்காவந்துசேர்ந்தபோது 5.45 மணியாகி விட்டது.

அந்தச் சூழலில் கூட்டமைப்பினருடனான சந்திப்பு சுமார் 25 நிமிட நேரமே நீடித்தது.

கூட்டமைப்பு பக்கக் கருத்துக்களைசம்பந்தன் இறுக்கமா கவும், சுருக்கமாகவும் எடுத்து ரைத்தார்.

அவர் அச்சயம் கூறிய விட யங்கள் வருமாறு :-

தீர்வை உள்ளடக்கிய அரசமைப்புத் திருத்தம் 2016 இல் நிறைவேற்றப்படும்எனஎதிர்பார்த்தோம். நடக்கவில்லை. 2017 இலும் இப்போதுமே மாதம் கடக்கின்றது.

அரசுத் தரப்புக்குள் – இரு பிரதான கட்சிகளுக்குள்ளும் முரண்பாடு. அதனால் விடயங்கள் இழுபறியில் உள்ளன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையைக் கொண்டு வந்த ஐ.தே.க. அதை நீக்க முனைகின்றது. அதை நீக்குவேன் என்று கூறி பதவிக்கு வந்தார் ஜனாதிபதிமைத்திரிபால. ஆனால் அவரது கட்சியோ நீக்க முடியாதுஎன்கின்றது. இந்த முரண்பாட்டால்எல்லாவிடயங்களும்இழுபடுகின்றன.

ஒற்றையாட்சிக்குள் தீர்வு காணமுடியாது. அதனால்தான் சமஷ்டி கேட்கிறோம். வடக்கும், கிழக்கும் நமது பூர்வீகத் தாயகம். அதைப் பிரிப்பதற்கு நாம் அனுமதிக்க முடியாது.

குறைந்த பட்சம் இந்தியாவில்உள்ளமைபோன்ற காணி, பொலிஸ், சட்டம் – ஒழுங்கு ஏற்பாடுகளுடனான அதிகாரப் பரவலாக்கல் எமக்கு வேண்டும்.

யுத்தம் முடிந்துவிட்டது. ஆக்கிரமிக்கப்பட்ட எமது மக்களின் காணிகள் விடுவிக்கப்படவில்லை. விடுவிக்கப்படும் போக்கு திருப்திதருவதாக இல்லை.

காணாமல் போன எமது மக்களின் உறவுகளுக்கு சரியான தீர்வு இன்னும்முன்வைக்கப்படவில்லை.

நடைமுறையில்உள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்தவறானதுஎன்பதை அரசு ஒப்புக்கொண்டு, அதைமாற்றப்போவதாகக் கூறுகின்றது.

ஆனால், அந்தச் சட்டத்தின் கீழ் கைதாகி, தவறான சட்டத்தினால் தண்டிக்கப்பட்ட – தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற – எமது அரசியல்கைதிகளின்பிரச்சினை இன்னும் முழுமையாகத்தீர்க்கப்படவில்லை.

தீர்வு முயற்சிகள் மிக மந்தகதியில்இடம்பெறுவது வேதனையளிக்கின்றது.

தீர்வு எட்டப்பட்டாலும், அதன் மூலம் எட்டப்படும் அடைவுகளை மத்திய அரசுபிடுங்கிக்கொள்ளாத முறையில் அது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

வடக்கு – கிழக்கில் பொருளாதார மேம்பாட்டுக்காக விசேட அபிவிருத்தித் திட்டங்களை இந்தியா இங்கு முன்னெடுக்க வேண்டும். – என்று குறிப்பிட்டார் சம்பந்தன். (உ)




**இந்தியப் பிரதமர் அவர்களின் இலங்கைக்கான விஜயத்தை இலங்கை வாழ் தமிழ் மக்கள் வரவேற்கின்றோம்**

அவரது வழிகாட்டலில் எம் மக்களில் அக்கறையாய் இருக்கும் இந்திய உயர்ஸ்தானிகர், வடமாகாண துணைத்தூதுவர், கண்டி துணைத்தூதுவர் மற்றும் அம்பாந்தோட்டை துணைத்தூதுவர்களிற்கு எமது நன்றிகள்.

இவ் இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயமானது எமக்கான ஓர் உறவுப் பாலமாக அமைந்திட எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாடாளுமன்ற உறுப்பினர்
அங்கஜன் இராமநாதன்.

(R/061)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மோடி - மஹிந்த சந்திப்பு

இலங்கைக்கு இரண்டு நாள் விஜயமாக வருகை தந்த இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இங்கு ஆக 24 மணி நேரமே தங்கியிருந்தார். அதற்குள் சூறாவளிப் பயணமாகப் பல இடங்களுக்குச் சென்றார்; நிழ்வுகளில் பங்குபற்றினார்; பலரையும் சந்தித்தார்.

அவற்றுள் முன்னர் அறிவிக்கப்படாமல் திடீரென இடம்பெற்ற - அல்லது முன்னர் திட்டமிடப்படாதது போலக் காட்டப்பட்ட - ஒரு சந்திப்பு மிக முக்கியத்துவம் பெறுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இந்தியப் பிரதமர் மோடிக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்புத்தான் அது.

கொழும்பில் இந்தியத் தூதுவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் - 'இந்திய இல்லத்தில்' - நேற்றுமுன்தினம் பின்னிரவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றிருக்கின்றது.

இந்தச் சந்திப்பில் மேற்படி இரு தலைவர்களும் மட்டும் கலந்து கொள்ளவில்லை. இரு தரப்பிலும் முக்கிய உதவியாளர்களும் கலந்துகொண்டமை கவனிக்கப்பட வேண்டிய அம்சமாகும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தரப்பில், அவர் ஜனாதிபதியாக இருந்தபோது அவரது அரசில் வெளிவிவகார அமைச்சராக இருந்த பேராசிரியர் ஜி.எல்.பீரிஸும் மற்றும் பாதுகாப்பு விவகாரங்களில் மஹிந்த ராஜபக்ஷவின் வலதுகரமாக விளங்கிய அவரது சகோதரரும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளருமான கோட்டாபய ராஜபக்ஷவும் கலந்து கொண்டிருந்தனர்.

அதேபோல, இந்தியப் பிரதமர் மோடி, இந்தச் சந்திப்பின்போது தமது தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலையும், கொழும்புக்கான இந்தியத் தூதுவர் தரஞ்சித் சிங் சந்துவையும் தனது பக்கத்தில் வைத்திருந்தார்.

இரு தலைவர்கள் தனித்துப் பேசியமைக்கு அப்பால், இப்படி தங்கள் தரப்பில் முக்கிய பிரமுகர்களையும் கூட வைத்துச் சந்தித்திருக்கின்றமை இது வெறும் முகமனுக்கான சாதாரண சந்திப்பல்ல, ஆழமான விடயங்கள் அதற்குள் பொதிந்து கிடக்கின்றன என்ற நிலையை எடுத்தியம்பப் போதுமானதாகும்.

"இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இந்த விஜயம் பொருளாதார அல்லது அரசியல் நோக்கம் எதுவும் கொண்டதல்ல. அவர் சர்வதேச வெசாக் நிகழ்வில் பங்குபற்றுவதற்காக மட்டுமே வருகை தருகின்றார். உத்தியோக ரீதியில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுடன் மட்டுமே அவர் பேசுவார். இலங்கை ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசுத் தரப்பினருடன் கூட உத்தியோகபூர்வ பேச்சுகள் கிடையா" - என்று கொழும்புக்கான இந்தியத் தூதர் அறிவித்திருந்தார்.

ஆனால், மோடி - மஹிந்த சந்திப்பு திட்டமிடப்படாத வகையிலும் - முன்னேற்பாடுகள் ஏதும் செய்யப்படாத நிலையிலும் - இந்த அறிவிப்புகளை மீறி திடீரென நடந்திருக்கின்றது. அதுவும் முக்கிய ஆளணி, பரிவாரத்தை பக்கத்தில் வைத்துக்கொண்டு இந்தத் தலைவர்கள் இருவரும் சந்தித்திருக்கின்றார்கள்.

அதுபோலவே, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வருகையை எதிர்க்கும் சைகைகளே மஹிந்த தரப்பில் - கூட்டு எதிரணிப் பக்கத்தில் - இருந்தும் கூட நேற்று வரை வந்து கொண்டிருந்தன.

மஹிந்த ராஜபக்ஷவின் தீவிர ஆதரவாளரும், அவருடைய மற்றொரு முகம் என்று கூறப்படுபவருமான - தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் - விமல் வீரவன்ஸ, கூட்டு எதிரணியின் பெரிய மேதினக் கூட்டத்தில் - மஹிந்த ராஜபக்ஷவையும் வைத்துக் கொண்டு - மோடி விஜயத்துக்கு ஆட்சேபனை தெரிவித்து வீடுகளில் கறுப்புக் கொடிகளைக் கட்டி எதிர்ப்புக் காட்டுவோம் என்று தெரிவித்து, அதற்குப் பகிரங்க அழைப்பும் விடுத்திருந்தார்.

"சர்வதேச வெசாக் மாநாட்டில் பங்கு கொள்ள இந்தியப் பிரதமர் மோடி இங்கு வரலாம். ஆனால், இலங்கையுடன் ஒப்பந்தம் செய்வதற்காக அவர் வந்தால் நாம் அதை எதிர்ப்போம்" - என்று மஹிந்த ராஜபக்ஷ தாமே அறிவித்திருந்தார்.

அத்தகைய மஹிந்த ராஜபக்ஷவின் கோரிக்கையின் பேரிலேயே இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் இப்போது தெரிவிக்கின்றார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தனது தோல்விக்கு இந்தியத் தரப்பின் திட்டமிட்ட ஊடுருவல் செயற்பாடே பிரதான காரணம் என்று தேர்தல் தோல்விக்குப் பின்னர் இந்திய அரசை - குறிப்பாக மோடி அரசை - கடுமையாகவும் நேரடியாகவும் விமர்சித்து வந்தவர் மஹிந்த ராஜபக்ஷ.

இப்போது அந்த விமர்சனங்களை எல்லாம் மூடை கட்டி ஒதுக்கி, அப்பால் வைத்துவிட்டு தாமே விரும்பிக் கேட்டு, தேடிப் போய் இந்தியப் பிர தமர் நரேந்திர மோடியைச் சந்தித்திருக்கின்றார் மஹிந்த ராஜபக்ஷ.

'சோழியன் குடுமி சும்மா ஆடாது' என்பார்கள். மஹிந்தவின் இந்த நகர்வும் சாதாரணமானது அல்ல என்பது திண்ணம்.

'அரசியலில் நிரந்தர நட்பும் கிடையாது; நிரந்தரப் பகையும் கிடையாது' - என்று கூறுவார்கள்.

சர்வதேச உறவு விவகாரங்களில் கூட இத்தகைய கூற்று உண்மை என்பது அவ்வப்போது வெளிப்பட்டே வந்திருக்கின்றது.

சீனா பக்கம் அதிகம் நெருங்கிச் சென்ற மஹிந்தவை அதற்காக அப்போது புதுடில்லி வெறுத்தது ; அவருக்கு மாற்றுத் தேடியது. அந்த முயற்சியில் வென்றது. ஆனால், சீனப் பக்கம் அதிகம் சாயும் கொழும்பு அரசின் போக்கில் இந்தியா எதிர்பார்த்த மாற்றம் நேரவில்லை.

இந்தச் சூழலில்தான், தெற்கில் மஹிந்தவுக்கு ஆதரவு பெருகுகின்றது என்று கூறப்படுகின்றது. அந்தப் பின்புலத்தில் இந்தச் சந்திப்பு மிக முக்கியத்துவமானதுதான்.

# மலையகத் தமிழ் மக்களுக்குரிய அடையாளம் கட்டாயம் பெறுவோம்

## அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ தெரிவிப்பு

ஏனைய சமூக மக்களுக்கு இணையாக மலையகத் தமிழ் மக்களுக்குரிய அடையாளங்களையும் பெற்றே தீருவோம் என தேசிய சகவாழ்வு மற் றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையைத் திறந்துவைப்பதற்காக, நேற்று அங்கு சென்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை வரவேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் புதியதொரு வரலாறு படைக்கப்பட்டுள்ளது. நாங்கள் அனைவரும் இந்திய வம்சாவளியினர். மகாவம்சமும் அதனையே சொல்கின்றது.

1800ஆம் ஆண்டுக்குப் பின்னர் சமீபத்திய இந்திய வம்சாவளி மக்களாக நாங்கள் இங்கு இருக்கின்றோம். அதனால்தான் பாரத பிரதமர் எங்களை வந்து சந்தித்துள்ளார்.

இன்று ஜனாதிபதி மைத்திரி மற்றும் பிரதமர் ரணில் தலைமையிலான நல்லாட்சியில், புதியதோர் அந்தஸ்தையும் அடையாளத்தையும் நாம் பெற்றுள்ளோம்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி அதனை தக்கவைத்துக் கொள்ளப் பெரும்பாடுபடுகின்றது. தற்போது மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளது. அந்த மாற்றத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில், பாரத அன்னையின் தவப்புதல்வர் நரேந்திர மோடி இங்கு வந்து எம்மைச் சந்தித்துள்ளார். அவரை நாம் அனைவரும் கைகோத்து வரவேற்க வேண்டும்.

இந்தநாட்டில், சிங்கள மக்கள், முஸ்லிம் மக்கள் மற்றும் வடக்கு, கிழக்கு மக்களுக்கு இணையாக சகல அந்தஸ்தும் பெற்று தலைநிமிர்ந்து, தன்மானத் தமிழர்களாக மலையகத் தமிழர்கள் வாழவேண்டும். ஏனைய சமூகங்களுக்கு இணையாக மலையக மக்களும் தமது அடையாளங்களைப் பெற்றே தீர வேண் டும். அந்த மாற்றத்தை பெற்றே தீருவோம். - என்றார்.

(எ)

# மூன்றரை கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருள் கொழும்பில் மீட்பு!

## மருதானைப் பொலிஸார் அதிரடி



கொழும்பு, மே 13

மருதானை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கோட்டை டி.ஆர். விஜேவர்தன மாவத்தையில் மூன்றரை கோடி ரூபா பெறுமதியான 3.5 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருள் குப்பையில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து மருதானை பொலிஸார் நேற்று முன்தினம் இந்த ஹெரோயின் தொகையைக் கைப்பற்றியுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரியந்த ஜயகொடி தெரிவித்தார்.

இதன் பெறுமதி மூன்றரை கோடி ரூபா என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில், மருதானை பொலிஸார் இதுதொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, இலங்கை போதைப் பொருள் விநியோகத்தின் மத்திய நிலையமாக மாறியுள்ளதை அண்மைய காலமாகக் கைப்பற்றப்பட்ட பெருந் தொகையான ஹெரோயின், கொகேயின் மற்றும் கேரளா கஞ்சா என்பன எடுத்து காட்டுவனவாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு கடத்தி வரப்படும் போதைப் பொருள்கள் இங்கிருந்து வெளிநாடுகளுக்குக் கடத்திச் செல்லப்படு கின்றன என்று ஏற்கனவே தகவல்கள் வெளியாகி இருந்தன.

# வீட்டின் மீது கைக்குண்டுத் தாக்குதல்: ஒருவர் சாவு; பெண் காயம்!

மஹியங்கனை, தொடம்வத்த பகுதியில் வீடொன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் 64 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்தார். அத்துடன், பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று அதிகாலை 1.15 மணியளவில் இந்தக் கைக்குண்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான நபர் மஹியங்கனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, தாக்குதலை மேற்கொண்ட சந்தேக நபரை கைது செய்ய மஹியங்கனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பல்வேறு நெருக்கடிகளில் தாதியர் சேவை!

## அகில இலங்கை தாதியர்கள் சங்கம் கூறுகிறது

நாட்டின் தாதியர் சேவை பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளதாக அகில இலங்கை தாதியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது தாதியர் சேவையில் பெரியளவில் தாதியர் பற்றாக்குறை உள்ளதுடன், சேவையின் தரம் வீழ்ச்சி யடைந்துள்ளது என்று அந்தச் சங்கத்தின் தலைவர் காமினி குமாரசிங்க கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தாதியர் சேவையின் தொழில் உரிமை ஊடாக அந்த சேவையின் தரத்தை மேலும் விருத்தி செய்வதற்கு அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும்.

தேசிய தாதியர் தினத்தை முன்னிட்டு இது தொடர்பில் அதிகாரிகளைத் தெளிவூட்டுவதற்கு தேசிய வைத்தியசாலைகளில் பல வேலைத் திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. -என் றார்.

(எ)

விலங்கு விசர் நோயிலிருந்து எம்மைக் பாதுகாப்போம்!
பெண் நாய்க் குட்டிகளை தெரு வீதிகளிலோ, கோவில் வீதிகளோ,
பாடசாலை மைதானங்களிலோ கொண்டு சென்று விடுவதனை
தவிர்ப்போம்!



நாய்களை பாதுப்பாக பராமரிப்போம்.
தொற்று ஏற்படாதவாறு கரிசனை கொள்வோம்!
தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை.
யாழ்.மாநகரசபை.

## நாளை

14.05.2017
ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம் : மூலம் பி.இ 12.43 வரை
திதி : திருதியை மு.ப 9.04 வரை
சுபநேரம் : 8.53 – 10.23 வரை
இராகுகாலம் : 4.23 – 5.53 வரை

இலங்கைவேந்தன் கலைக் கல்லூரி நடத்தும்
**இயல் இசை நாடக அரங்கு -2017**

நான்காம் நாள் நிகழ்வுகள்



இடம்:
இலங்கைவேந்தன் கலைக் கல்லூரி கலையரங்கம்
நாள்:
இன்று (13.05.2017)
சனிக்கிழமை
நேரம்: மாலை 4.30 மணி
தலைவர்
திரு. இ. சர்வேஸ்வரா
(உதவி பதிவாளர் - மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்)
பிரதம விருந்தினர்
பேராசிரியர் த.ஜெயசிங்கம்
(துணைவேந்தர், கிழக்குப் பல்கலைக்கழகம்)
பி.எஸ்.பிச்சையப்பா ரஜீந்திரன் குழுவினர் வழங்கும்
மங்கல இசை
நாதஸ்வரம்: P.S.சுரசாகித்தியன், M.சாரகேசவன்
தவில்: சூலூர் K.ராமகிருஷ்ணா, திருச்செங்கோடு S.அஜய்
மங்கல விளக்கேற்றல்
திருமுறை ஓதுதல் : செல்வி கஸ்தூரி கணேஷமூர்த்தி (தற்காலிக விரிவுரையாளர்- கிழக்குப் பல் கலைக்கழகம்)
ஆசியுரை : சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள் (நிறுவுநர் - வீனாகாண குருபீடம்)
வாழ்த்துரை : திரு.ந.வித்தியாதரன் (ஆசிரியர் - காலைக்கதிர் நாளிதழ்)
தலைமையுரை : தலைவர்
சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவனம் தயாரித்து வழங்கும்
நடனம் : "மல்லாரி காளி கௌத்துவம்"
நெறியாள்கை : கலாநிதி ஷர்மிளா ரஞ்சித்குமார் (சிரேஷ்ட விரிவுரையாளர்)
இசையரங்கம் "லயநாத கதம்பம்"
வயலின் : திருமதி பிரவீனா மாதவன் (விரிவுரையாளர்), செல்வி பிறிசில்லா ஜோர்ஜ் (விரிவுரையாளர்)
மிருதங்கம் : திரு.நாகரட்ணம் மாதவன் (விரிவுரையாளர்), திரு.திருமலை ப.திவ்யரூபசர்மா (விரிவுரையாளர்)
நடனம் "கீர்த்தனை"
நெறியாள்கை : கலாநிதி உஷாந்தி நேசகாந்தன் (சிரேஷ்ட விரிவுரையாளர்)
இசைக்கச்சேரி "குரலிசை"
திரு.தெட்சணாமூர்த்தி பிரதீபன் (விரிவுரையாளர்)
திருமதி நிர்மலேஸ்வரி பிரஷாந்த் (விரிவுரையாளர்)
நடனம் "தில்லானா"
நெறியாள்கை: திரு.கணேசராஜா துவாஸ்கர் (விரிவுரையாளர்)
கலைஞர்கள் கௌரவிப்பு
பிரதம விருந்தினர் உரை
நாடகம் "சவால்"
நெறியாள்கை : திரு.த.விவானந்தராஜா (விரிவுரையாளர்)
பாட்டு : திருமதி பிரியதர்ஷினி ஜெகதீஸ்வரன் (விரிவுரையாளர்), திரு.தெட்சணாமூர்த்தி பிரதீபன் (விரிவுரையாளர்)
வயலின் : திருமதி பிரவீனா மாதவன் (விரிவுரையாளர்), செல்வி பிறிசில்லா ஜோர்ஜ் (விரிவுரையாளர்)
மிருதங்கம் : திரு.நாகரட்ணம் மாதவன்(விரிவுரையாளர்), திரு.திருமலை ப.திவ்யரூபசர்மா (விரிவுரையாளர்)
நன்றியுரை
அனுசரணை:
கோல்டன் ஈகிள் K.T
பிறைவேற் லிமிட்டெட்


# இந்திய மீனவப் படகுகளை விடுவிக்க இலங்கை மீனவர் விருப்பம் தெரிவிப்பு



கொழும்பு, மே 13

இலங்கையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்திய மீனவப் படகுகளில் ஒரு தொகுதியை மீள ஒப்படைப்பதற்கு வட பகுதி மீனவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

நிபந்தனைகளின் அடிப்படையில் இந்தப் படகுகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டார்.

கடந்த முறை இடம்பெற்ற பேச்சுகளை அடுத்து இந்திய மீனவப் படகுகளின் அத்து மீறல்கள் குறைவடைந்துள்ளன என்றும் அதற்கான மாற்று நடவடிக்கைகளை இந்தியத் தரப்பு நடைமுறைப்படுத்தியுள்ளது எனவும் அமைச்சர் கூறினார்.

இதற்கமைய ஆரம்பத்தில் பறிமுதல் செய்யப்பட்ட ஒரு தொகுதி படகுகளை விடுவிப்பதற்கு வட பகுதி மீனவர்கள் இணங்கியுள்ளனர் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இதுதொடர்பாக இந்திய அரசுக்கு தாங்கள் அறிவித்துள்ளனர் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

# அரசிலிருந்து விலகவேண்டிய அவசியம் எனக்கு இல்லை!

## அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவிப்பு



கொழும்பு, மே 13

அரசைவிட்டு வெளியேறுவதற்கு எந்தவித தேவையும் எனக்கும் கிடையாது என்று அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நான் அரசை விட்டு வெளியேறுகிறேன் எனவும், வெளியேறினால் தனியாக வெளியேறுமாறும் ஜனாதிபதி கூறினார் எனவும் செய்யப்படும் பிரசாரங்களில் உண்மையில்லை.

அரசைவிட்டு வெளியேற வேண்டிய அவசியம் எனக்கு இல்லை.

அரசைவிட்டு வெளியேற வேண்டுமெனக் கட்சி தீர்மானித்தால் அந்தத் தீர்மானத்துக்கு அடிபணிந்து வெளியேறுவேன். கட்சியின் தீர்மானமே எனது தீர்மானம்.- என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் ஜோன் செனவிரட்ன ஆளும் கட்சியில் இருந்து விலகப் போகிறார் என்று அண்மையில் ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இராணுவ உதவிகள் இலங்கைக்கு நிறுத்தம்!

## பிரிட்டன் தொழிற்கட்சி உறுதி என்கிறது கொழும்பு ஊடகம்

கொழும்பு, மே 13

இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் இராணுவ உதவிகள் இடைநிறுத்தப்படும் என்று பிரிட்டன் தொழிற்கட்சி உறுதியளித்துள்ளது என்று கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

பிரிட்டனில் விரைவில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இந்த செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

பிரிட்டன் தொழிற் கட்சியின் தலைவர் ஜெரொமி கோர்பின், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான புலம்பெயர் சமூகத்துடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வருகிறார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நெருங்கிய தொடர்பு காரணமாக இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் இராணுவ உதவிகளைத் தாம் ஆட்சிக்கு வந்தால் இடைநிறுத்துவார் என்று கோர்பிக் உறுதியளித்துள்ளார்.

இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு சுயாட்சி அதிகாரங்களை வழங்கும் வகையில் பிரிட்டன் செயற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார் என அந்த ஊடகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# திறப்பு விழா

கோப்பாய், மே 13

புனரமைப்புச் செய்யப்பட்ட கோப்பாய் அரசினர் வைத்தியசாலை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்தியர் ப.சத்தியலிங்கத்தால் திறந்து வைக்கப்படும்.

கோப்பாய் நவமங்கை நிவாச நிறுவுநர் சுவர்ணாநவரட்ணத்தின் அனுசரணையில் பத்து லட்சம் ரூபா செலவில் இந்த வைத்தியசாலை புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# இரு நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 13

கொற்றை பி.கிருஷ்ணானந்தனின் 'சாம்பல் பூத்த வானமும் சில நட்சத்திரங்களும்' சிறுகதைத் தொகுதி மற்றும் 'கொற்றாவத்தையில் உலாவும் குட்டிக் கதைகள்' ஆகிய இரண்டு நூல்களின் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொற்றாவத்தை செட்டித்துறை சித்திவிநாயகர் திருமண மண்டபத்தில் சாகித்திய ரத்னா தெணியான் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் த.ஜெயசீலன் கலந்து கொள்வர். (ச)

# நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், மே 13

போர்த்துக்கல் நாட்டு பற்றிமா அன்னையின் காட்சிகளின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம், யாழ். மறைமாவட்ட பண்டத்தரிப்பு பற்றிமா அன்னையின் யாத்திரைத் தலத்தில் இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு யாழ். ஆயர் மேதகு பேர்னாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் இடம்பெறவுள்ளது. (ச)

# நுண்கலைப் பட்டதாரிகளுக்கான வெற்றிடங்களை உருவாக்க வேண்டியது அரசின் பொறுப்பாகும்!

மட்டக்களப்பு,மே 13

நுண்கலைபட்டதாரிகளுக்கான வெற்றிடங்களை உருவாக்க வேண்டியது அரசின் கடமை ஆகும்.

நாட்டில் உள்ள பல்வேறு முக்கிய பிரச்சினைகளுள் ஒன்றாக வேலையற்ற பட்ட தாரிகள் பிரச்சினையும் வெளிக்கிளம்பியுள்ளது. இந்த அரசு பட்டதாரிகளின் நியாயமான கோரிக்கைகளை ஏற்கவேண்டும்.

-இவ்வாறு பேராசிரியர் சி.மௌனகுரு தெரிவித்துள்ளார்.





பேராசிரியர் சி.மௌனகுரு தெரிவிப்பு

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் உள்ள நுண்கலை பட்டதாரிகள் பேராசிரியரை அவரது இல்லத்தில் சந்தித்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கலந்துரையாடினர். அண்மைக் காலமாக நுண்கலைத்துறை தொடர்பில் அரசியல்வாதிகள் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்து வரும் நிலையில், அது தொடர்பில் தெளிவுபடுத்தும் வகையிலேயே இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நுண்கலை பட்டதாரிகளுக்கான எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டிய கடமை அனைவருக்கும் உள்ளது. அவர்களை எழுந்தமானமாகத் தூக்கியெறிந்து விடமுடியாது. நுண்கலைபட்டதாரிகளின் திறமை தொடர்பிலான சந்தேகம் கடுமையான மனவருத்ததை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் கல்வி இராஜாங்க அமைச்சர் நுண்கலை பட்டதாரிகளுக்கான வெற்றிடங்கள் இல்லை. நுண்கலைப் பட்டதாரிகள் திறமை குறைந்தவர்கள் எனக் கருத்து வெளியிட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனைச் சாதாரணநபர்கள்கூறியிருப்பார்களாயின் அதனைக் கவனத்தில் கொள்ள வேண்டிய தில்லை. ஆனால், விடயம் தெரிந்த அமைச்சர் ஒருவர் கூறியிருக்கின்றார். எனவே, இந்த விடயத்தைப் புறந்தள்ள முடியாது.

'வேலையற்ற பட்டதாரிகளில் நுண்கலை தவிர்ந்த ஏனைய பிரிவுகள் தொடர்பில் அனைவருக்கும் தெரியும். அது தொடர்பில் பாடசாலைகளிலும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. ஆனால், நுண்கலைப் பட்டதாரிகள் தொடர்பான தெளிவு பொதுமக்களுக்கும் இல்லை. அரசியல்வாதிகளுக்கும் இல்லை. குறிப்பாகக் கல்வி அதிகாரிகளுக்குக் கூட இல்லை என்பதுதான் கவலைக்குரிய விடயம்.

நுண்கலைக்குப் பாடசாலைகளிலும் அதிகமான மதிப்பு இருப்பதில்லை, பல்கலைக்கழகத்தில் கூட அதிகமான மதிப்பு இருப்பதில்லை. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியும், விபுலானந்தா அழகியல் கற்கை நிறுவகமும் நுண்கலையின் உயர் பீடங்களாகக் கருதப்படுகின்றன.

விபுலானந்தா அழகியல் கற்கை நிறுவகத்தில் இருந்து ஆண்டு தோறும் குறைந்தது 200 மாணவர்கள் பட்டம் பெற்றுச் செல்கின்றனர். இந்த மாணவர்களை எவ்வாறு வழி நடத்துவது, அவர்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பிலான திட்டங்கள் சமூகத்திடமும் இல்லை. அரசியல்வாதிகளிடமும் இல்லை. இது கவலைக்குரிய விடயமாகும். -என்றார். (ச)

## மரதன் ஓடிய மாணவன் மயக்கம் !

காத்தான்குடி,மே 13

காத்தான்குடி மஞ்சதொடுவாய் தொழில்நுட்பக் கல்லூரியால் நடத்தப்பட்ட மரதன் ஓட்டப்போட்டியில் கலந்து கொண்ட அக்கல்லூரி மாணவன் ஒருவர், மயங்கி விழுந்த நிலையில் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 7.30 மணியளவில் கல்லடி பிரதான வீதியில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு, உன்னிச்சை கிராமத்தைச் சேர்ந்த எம். வினோஜன் (வயது-20) என்ற மாணவனே மயங்கி விழுந்தவர் ஆவார்.

இந்த மரதன் ஓட்டப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்கள் அனைவரும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே, போட்டியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர் என கல்லூரி அதிபர் ஆர்.ரவிச்சந்திரன் தெரிவித்தார்.

இந்தச்சம்பவம் தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## 'கொமிக் ஆர்ட்' தொழில் நுட்பம் தொடர்பில் விபுலானந்தா நிறுவகத்தில் கலந்துரையாடல்!

வடக்கில் யுத்தகாலத்தில் பணியாற்றியவரும், இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற சம்பவங்களைத் தொகுத்து இலத்திரனியல் தன்மை கொண்ட 'கொமிக் ஆர்ட்' நூலைத் தயாரித்து வருபவருமான கலாநிதி பெஞ்சமின்டிக் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று கிழக்குப் பல்கலைக்கழக விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் நடைபெற்றது.





இந்தக் கலந்துரையாடலில், கொமிக் ஆர்ட் எனப்படுகிற சித்திரக்கதை முறையில் தற்போது பிரபலமாகிவரும் இலத்திரனியல் சித்திரக்கதை சொல் லல் தொழில் நுட்பம் தொடர்பில் கலாநிதி பெஞ்சமின் டிக் விளக்கங்களை வழங்கினார்.

இந்தக் கலந்துரையாடலில் கொமிக் ஆர்ட் எனப்படும் சித்திரக்கதை இலத்திரனியல் மயமாக்கப்படுதல் மற்றும் அதன் பயன்பாடு, அதன் தொழில்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

சுனாமி காலத்திலும் அதற்குப்பின்னரும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் பணியாற்றிய பெஞ்சமின் டிக், இறுதி யுத்த வேளையில் சர்வ தேச அரசசார்பற்ற நிறுவனங்கள் வெளியேற்றப்பட்ட வேளை நாட்டை விட்டுச் சென்றிருந்தார்.

இவர் இலங்கையின் இறுதி யுத்தக் கதையை 'கொமிக் ஆர்ட்' எனப்படுகின்ற இலத்திரனியல் தன்மை கொண்டதான 300 பக்கங்களைக் கொண்டு புத்தகமாக வெளியிடும் பணியில் ஈடுபட்டுள்ளார். இவருடன் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த 20 இற்கும் மேற்பட்ட ஒளிப்பதிவாளர்கள், ஓவியர்கள், கலைஞர்கள் ஆகியோர் கடந்த 5 வருடங்களாக இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அடுத்த வருடம் இலங்கையின்இறுதியுத்தம் தொடர்பாகத் தம்மால் தயாரிக்கப்பட்டு வரும் நூல் வெளியிடப்படும் என்று கலாநிதி பெஞ்சமின் டிக் தெரிவித்துள்ளார். (ச)

## வடிசாராயத்துடன் இருவர் கைது!

கந்தளாய், மே 13

திருகோணமலை கந்தளாயில் மூன்று போத்தல் வடிசாராயத்தை ஓட்டோவில் கொண்டுசென்ற சந்தேக நபர்கள் இருவரைக் கந்தளாய் பொலிஸார் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய்துள்ளனர்.

இவர்கள் இருவரும் 26, 28 வயதுகளை உடைய - கந்தளாய் வான்எல பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் எனப் பொலிஸாரின் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச)

## நீதிமன்றக் கட்டளை அவமதிப்பு: நால்வர் மீது வழக்குத் தாக்கல்!

மட்டக்களப்பு, மே 13

நீதிமன்றக் கட்டளையை அவமதித்த குற்றச்சாட்டில் மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் சங்கத் தலைவர் உட்பட நான்கு பேருக்கு எதிராக திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 25 ஆம் திகதி கிழக்கு மாகாண சபையை முற்றுகையிட்டு வேலையற்ற பட்டதாரிகள் நடத்திய போராட்டத்தின்போது, நீதிமன்றக் கட்டளை கிழித்தெறியப்பட்டமை தொடர்பிலேயே அவமதிப்பு வழக்கு பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



## அக்கரைப்பற்றில் வெசாக் அலங்காரம்!

அக்கரைப்பற்று,மே 13

அக்கரைப்பற்றுப் பகுதியில் சர்வதேச வெசாக் தினத்தை முன்னிட்டு வெசாக் வெளிச்சக்கூடுகள் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

இந்த வெசாக் அலங்காரம் அக்கரைப்பற்று பொலிஸ் அதிகாரிகளால் அமைக்கப்பட்டுள்ளது.

இதனைப் பார்வையிடுவதற்குப் பெருந்திரளான பொதுமக்கள் வருகை தருகின்றனர் என அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

# இலங்கையுடன் வர்த்தக உடன்படிக்கை; கலந்தாலோசித்து வருகிறது சீன அரசு!

## வர்த்தகத்துக்கான துணை அமைச்சர் தெரிவிக்கின்றார்




கொழும்பு, மே 13

இலங்கையுடன் புதிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்வது தொடர்பில் கலந்தாலோசித்து வருகிறோம் என சீனாவின் வர்த்தகத்துக்கான துணை அமைச்சர் கியான் கெமீங் தெரிவித்துள்ளார்.

சீன ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் அவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சீனா சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் தொடர்பாக 20 இற்கும் மேற்பட்ட நாடுகளுடன் பேச்சு நடத்தத் திட்டமிட்டுள்ளது. குறிப்பாகப் பட்டுப்பாதை மற்றும் வர்த்தக மார்க்கங்களின் மத்தியில் காணப்படும் நாடுகளுடனேயே இந்த ஒப்பந்தங்களுக்கான பேச்சு நடத்தப்படும். சீனா தற்போது வர்த்தக மார்க்கங்களை அதிகரிப்பது தொடர்பில் அதிக கவனம் செலுத்துகின்றது.

இதன் முதற்கட்டமாக ஜோர்ஜியாவுடன் புதிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம். இவ்வாரம் சீனாவில் நடைபெறவுள்ள பட்டுப்பாதை மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச மாநாட்டில் மொங்கோலியாவுடன் வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்வது தொடர்பிலான சாதக நிலைமைகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

அதுமட்டுமல்லாது நேபாளம், பங்களாதேஷ், மோல்டோவா ஆகிய நாடுகளுடனும் புதிய ஒப்பந்தங்கள் இவ்வருட இறுதிக்குள் மேற்கொள்ளத்திட்டமிட்டுள்ளோம். சிங்கப்பூர், பாகிஸ்தான் அரசுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் மேற்கொள்வது தொடர்பில் இருதரப்பு புரிந்துணர்வு பேச்சுகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.

மேலும், இலங்கை, இந்தியா பங்களாதேஷ், லாவோஸ் நாடுகளுடன் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள ஒப்பந்தங்களுக்கான நான்காம் கட்ட பேச்சு தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் 2014 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை சீனாவால் மேற்கொள்ளப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களின் மூலமாக சுமார் 20 ட்ரில்லியன் டொலர் வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது.

சீனா சர்வதேச நாடுகளுடனும் பிராந்திய நாடுகளுடனும் இணக்கப்பாட்டின் அடிப்படையிலான வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்கின்றது.

அதன்மூலமே சீனாவின் ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க முடியும். சீனக் கம்பனிகள் மற்றும் பிராந்திய நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தங்களின் தன்மை மற்றும் நிதிக்கொடுப்பனவுகள் தொடர்பிலேயே இருநாட்டு புரிந்துணர்வு பேச்சுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதுமட்டுமல்லாது, கட்டுமான வசதிகள் மற்றும் சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்காகவும் சீன வர்த்தக அமைச்சுகள் பல முதன்மையான திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

அதன்படி நிதிசார் பொருளாதார மார்க்கங்களில் 50 பில்லியன் அமெரிக்க டொலருக்கு மேற்பட்ட தொகையும் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள கம்பனிகளுக்கிடையிலான வர்த்தகம் மூலம் 304.9 பில்லியன் அமெரிக்க டொலர் வரையிலும் வருமானம் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கின்றோம்.- என்றும் தெரிவித்துள்ளார்.

# நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்ற மஹிந்த சதித்திட்டம் தீட்டவில்லையாம்!



கொழும்பு, மே 13

நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு கூட்டு எதிரணி சதித் திட்டம் எதையும் தீட்டவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டி தலதா மாளிகையில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களுடன் பேசும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாங்கள் தனியார் மயமாக்கலையும், நாட்டின் தேசிய வளங்கள் விற்கப்படுவதையும் மட்டுமே எதிர்க்கிறோம். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சில நாள்களின் முன்னர், நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான நேரம் வந்து விட்டது என்றும் பொருத்தமான நேரத்தில் அதனைச் செய்வோம் என்றும் மஹிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தாதியர் தினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு



வவுனியா, மே 13

சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு வஷனியா மாவட்ட பொது வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நேற்று வைத்தியசாலையின் பணிப்பாளர் அகிலேந்திரன் தலைமையில் தாதியர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி பவானி பசுபதிராஜா, வைத்தியசாலைப் ப்ணிப்பாளர் அகிலேந்திரன், பிரதிப் பணிப்பாளர் தமிழினி, சிரேஷ்ட வைத்திய அதிகாரி சுரேந்திரன், தாதிய பரிபாலகர் பாலநாதன், குமாரசிங்கம் மற்றும் வைத்திய அதிகாரிகள் சங்கத் தலைவர் வைத்தியர் அனாஸ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது புளோரன்ஸ் நைற்றிங்கேலின் படத்துக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் தாதிய உத்தியோகத்தர்களால் சத்திய பிரமாணமும் செய்யப்பட்டது. (ஐ)



# இந்திய ஆசிரியர்களை வரவழைப்பது பிரச்சினைக்கு உரிய தீர்வைத் தராது

## தெரிவிக்கிறார் மக்கள் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர்

மலையகப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ உயர்தரத்தில் கணித, விஞ்ஞானப்பாட ஆசிரிய வெற்றிடங்களை நிவர்த்தி செய்வதற்காக, இந்தியாவிலிருந்து ஆசிரியர்களை வரவழைக்கப்படுகின்றமை உரிய தீர்வை வழங்காது. உள்ள பிரச்சினையை மேலும் உக்கிரமடையவே செய்யும் என்று மக்கள் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் இரா.நெல்சன் மோகன்ராஜ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

எமது நாட்டின் உயர்தர கணித, விஞ்ஞான பாடத்திட்டம் இந்தியப் பாடத்திட்டத்திலிருந்து வேறுபட்டதாகவே காணப்படுகிறது. இந்தநிலையில், இந்திய ஆசிரியர்கள், எமது நாட்டின் உயர்தர கணித, விஞ்ஞான பாடத்திட்டத்துக்கமைய கற்பித்தலை மேற்கொள்வதில் பல குழப்பங்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகமாகும்.

இலங்கையுடன் ஒப்பிடுகையில் இந்தியாவில் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் மிக அதிகமானதாகும். இவ்வாறிருக்கையில், இந்தியாவிலிருந்து வரவழைக்கப்படுவதாகக் கூறப்படும் ஆசிரியர்கள், எமது நாட்டில் குறைந்த சம்பளத்துக்கு சேவையாற்ற வருவார்களா? அல்லது அவர்களுக்கு நம்நாட்டு ஆசிரியர்களை விட அதிகமான சம்பளம் வழங்கப்படுமா? எமது நாட்டு ஆசிரியர்களை விட அதிகமான சம்பளம் வழங்கப்படுமாயின் அது நம் நாட்டு ஆசிரியர்களுக்கும் இந்திய ஆசிரியர்களுக்கிடையேயான சம்பள முரண்பாட்டையும், அதனூடாக ஆசிரியர்களிடையே முரண்பாடுகளையும் உருவாக்ககூடியதாகும். இதனால் பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன.

தமிழ் மொழிமூலம் கணித, விஞ்ஞான ஆசிரிய வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது குறைந்த தொகையினரே அதற்கு விண்ணப்பித்துள்ளார்கள் என்று கல்வி அமைச்சு குறிப்பிடுகிறது. எனினும், அதற்கான ஆதாரங்கள் எதனையும் முன்வைக்கவில்லை.

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப்பிரதேசங்களிலுள்ள வேலையற்ற பட்டதாரிகள் தமக்கு வேலை வழங்கும்படி போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் கணிதம், விஞ்ஞான பாடப்பட்டதாரிகளும் கணிசமாக இருக்க வாய்ப்புள்ளது. அந்தவகையில், தற்போது தமிழ் மொழிமூலம் கணித, விஞ்ஞானபாட பட்டதாரி ஆசிரிய வெற்றிடத்துக்குத் தகுதியானவர்கள் எத்தனை பேர் உள்ளார்கள் என்பது அறியப்படல் வேண்டும். கல்வி அமைச்சு, அதனையே முதலில் செய்ய வேண்டும். எனவே, கணிதம், விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பங்களை கோருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்திய அரசு இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மக்களின் கல்வி உரிமையில் உண்மையில் அக்கறையாக இருப்பார்கள் எனில், அவர்கள் செய்ய வேண்டியது, அந்தமக்களில் பட்டப்படிப்புபெறத்தகுதியுடையவர்களுக்குப் புலமைப்பரிசில்களை வழங்கி, அங்குள்ள பல் கலைக்கழகங்களில் கல்வி பெற அனுமதிக்க வேண்டும். அதனையே கல்வி அமைச்சும் கோர வேண்டும். இவற்றை விடுத்து தீர்வு என்ற போர்வையில் எமது நாட்டில் கல்வி கற்றவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளை இந்தியாவில் உள்ளவர்களுக்கு வழங்கும் கல்வி அமைச்சின் நடவடிக்கை நிறுத்தப்படல் வேண்டும்.-என்றுள்ளது.

---

## தினசரி ராசி பலன் 13.05.2017

ஏவிளம்பி வருஷம் 2017 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 30 ஆம் நாள் துவிதியைத்திதி காலை 7.51 மணி வரை. பின்னர் திரிதியை. நட்சத்திரம் கேட்டை இரவு 11.11 மணி வரை. பின்னர் மூலம். சித்தயோகம் முழுவதும். ராகுகாலம் காலை 8.59 மணி முதல் 10.33 மணி வரை. சுபநேரம் மாலை 2.52 மணி முதல் 4.21 மணி வரை. திவசம் செய்ய வேண்டிய திதி: சித்திரை மாத தேய்பிறை திரிதியை. பிறந்த நட்சத்திர வழிபாடு: கேட்டை.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்:** யோசனையான நாள். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் உண்டாகும். சிலருக்குச் செய்யும் தொழிலை இழக்க நேரிடும்.

**ரிஷபம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வருவாய் இருப்பினும் வீண் விரயங்களால் கடன்பளு ஏறும்.

**மிதுனம்:** யோகமான நாள். தனலாபம் பெருகும். அசையாச் சொத்துக்களை வாங்கும் யோகம் உண்டாகும்.

**கடகம்:** ஆக்கபூர்வமானபலன்கள் காணப்படுகின்றன. தொழிலில் வேலைதேடுவோருக்கு வேலை கிடைக்கும்.

**சிம்மம்:** சஞ்சலமான நாள். வருமானம் குறையும். தொழிலில் பிரயாசை, அலைச்சல் அதிகமாகும்.

**கன்னி:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. செலவுகள் அதிகரிக்கும். இவர்கள் பல நெருக்கடிகளை பெரியவர்களின் உதவியால் சமாளித்து விடுவார்கள்.

**துலாம்:** மகிழ்ச்சியான நாள். பிரிந்திருந்த உறவினர்கள் மீண்டும் வலிய வருவார்கள்.

**விருச்சிகம்:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. வியாபாரத்தில் அபரிவிதமான வளர்ச்சியும், லாபமும் கிடைக்கும்.

**தனுசு:** கவலையான நாள். பொருளாதாரம் நலிவடையும். தொழிலில் கவனக்குறைவு ஏற்படும். கவனம் தேவை.

**மகரம்:** மேன்மையான நாள். பொருளாதாரம் மேன்மை அடையும். உத்தியோகத்தில் மேன்மை உண்டாகும்.

**கும்பம்:** விருத்தியான நாள். தனவிருத்தி உண்டாகும். வியாபாரத்தில் கணிசமான லாபம் கிடைக்கும்.

**மீனம்:** சுபீட்சமான நாள். குடும்பத்தில் சந்தோஷம் மிகுந்து காணப்படும். தொழில் விடயமாக அந்நியதேசம் செல்லும் வாய்ப்புக் கிடைக்கும்.

சந்திராட்டமநாள்: அச்சுவினி, பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருக சீரிடம் 1, 2 ஆம் நட்சத்திரங்களில் பிறந்தோர் அவசியம் சுபகருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

---

## 40 வருடங்களின் பின்னரே மாற்றத்தை அனுபவிக்கிறோம்

### மலையக மக்கள் முன்னணி உப தலைவர் கூறுகிறார்

தேர்தலில் வெற்றிபெற்ற பிரதான கட்சிகள் நாட்டை மாறி மாறி ஆட்சி செய்த போதிலும் மலையக மக்கள் 40 வருடத்தின்பின்னரே உண்மையான ஆட்சி மாற்றத்தை அனுபவிக்கின்றனர் என்று மலையக மக்கள் முன்னணியின் உப தலைவர் சுருபன் பெருமாள் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டைத் தொடர்ந்து பிரதான கட்சிகளான ஐ.தே.க மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகியன ஏனைய கட்சிகளுடன் இணைந்து அவ்வப்போது தனித்தனியாக ஆட்சி செய்துள்ளன. எனினும், இந்த இரு பிரதான கட்சிகளின் தனித்தனியான ஆட்சியின் போது மலையக மக்கள் ஆட்சி மாற்றத்தை அனுபவிக்கவில்லை.

தற்போது இந்த இருகட்சிகளும் ஒன்றிணைந்தமையால் தான் மலையக மக்கள் பல நன்மைகளை அனுபவித்து வருகின்றனர்.- என்றார்.

---

## கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு குடும்பஸ்தர் கொலை



மாத்தறை - பாதேகம பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற தான நிகழ்வுக்கு உதவியாக இருந்த போதே அவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் 36 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தை என்பதுடன், பாதேகம பகுதியைச் சேர்ந்தவர் என்றும் தெரிய வந்துள்ளது.

அந்த நபர் ஆயுதங்களுடன் வந்த குழுவினரால் தாக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

## இஸ்ரேலில் சட்டவிரோதமாகத் தங்கியிருக்கும் இலங்கையர்களுக்கு எதிராக நடவடிக்கை!

இஸ்ரேலில் சட்டவிரோதமாகத் தங்கியிருக்கும் இலங்கையர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.


அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இஸ்ரேலுக்கு தொழிலுக்காகச் செல்லும் இலங்கையர்கள் அவர்களது தொழிற்காலம் முடிவடைந்தும் தொடர்ந்து அங்கு சட்டவிரோதமாகத் தங்கியிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையர்களின் இவ்வாறான செயற்பாடுகளால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. எனவே, எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.- என்றார்.

---

## தேயிலைச் செய்கையின் 150 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள் நுவரெலியாவில்!




தேயிலை செய்கையின் 150 வருட நிறைவை முன்னிட்டு நுவரெலியா - ஸ்ரீ சீதை அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடு இடம்பெற்றது.

இலங்கை தேயிலை சபை சிரேஷ்ட பொது முகாமையாளர் லயனல், ஆர்.பி.விமலரத்ன ஆகியோர் தலைமையில் இந் நிகழ்வு இடம் பெற்றது.

இதன்போது, சுமார் 50 இற்கும் மேற்பட்டோர் நுவரெலியா கிறகரி வாவியில் இருந்து ஊர்வலமாகச் சென்று ஆலய வழிபாடுகளில் கலந்து கொண்டனர். களனிவெலி பெருந்தோட்டம், மத்துரட்ட பெருந்தோட்டம், பின்னேசியா, ஹேமாஸ், புஸல்லாவ, கொட்டகலை, ஹென்போல்ட், போர் டைஸ், டிக்கோயா மற்றும் தனியார் தோட்டமான கும்பல்கமுக ஆகிய தோட்ட மக்கள் இதில் கலந்து கொண்டனர்.

ஜேம்ஸ் டெய்லர் என்பவரால் 1867ஆம் ஆண்டு லூல்கந்துரை பெருந் தோட்டத்தில் 19 ஏக்கர் நிலப் பரப்பில் தேயிலை பயிரிடப் பட்டு தற்போது 150 வருடம் பூர்த்தியடைந்துள்ளது. மலையகத்தில் பெரும்பாலான மக்கள் தமது வாழ் வாதாரமாகத் தேயிலைத் தோட்ட தொழிலையே மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.



# எமக்காக வாழும் ஆத்மா அன்னை...!

**நாளை அன்னையர் தினம். அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

ஒவ்வொரு வருடமும் மே மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையை அன்னையர் தினமாகப் பெரும்பாலான நாடுகளில் கொண்டாடப்படுகின்றது. வயிற்றில் எம்மை சுமந்த கணம் தொட்டு எம்மைப் பற்றிய கனவுகளோடும், கவலையோடும் கருணையும், அன்பும் கலந்து எமக்காகவே வாழத் துடிக்கும் அந்த ஆத்மாவைப் பெருமைப்படுத்தும் ஒரு நாளாக இந்த நாளை உலகம் முழுவதும் ஒவ்வொரு மகனும், ஒவ்வொரு மகளும் தமது தாய்மாருடன் பரிசுகளையும், வாழ்த்துகளையும் குவித்து தமது அன்பை வெளிப்படுத்திக் கொள்கிறார்கள்.

ஒவ்வொரு நிகழ்வுகளும் வரலாறு ஆகா. ஆனால், சில விசேடமான குறிப்பிட்ட நிகழ்வுகள் சம்பிரதாயங்களாக - ஏதோ ஒரு வரலாற்றின் சுவடுகளாகத் தான் எம்மோடு கூடவே வருகின்றன. அதே போல் அன்னையர் தினத்துக்கென்றும் பல காரணங்களும் வரலாறும் பண்டை காலந்தொட்டு இருக்கத் தான் செய்கின்றது.

பண்டைக்காலங்களில் அன்னையர் தினம் என்பது பெண் கடவுள்களை அம்மாவாக போற்றிக் கொண்டாடப்பட்டிருக்கின்றன. உலகில் தோன்றிய எல்லா மதத்திலும் பெண் கடவுள் இன்றியமையாத ஒரு படைப்பாயிருக்கிறது. ஏன் நமது இந்து சமயமே அதற்கு பெரிய ஓர் உதாரணம். இயற்கையையும், நாமதேய சக்தியையும் பெண்ணின் வடிவாகப் போற்றியிருப்பது கண்கூடான விசயங்கள். நதியிலிருந்து விதி மகள் வரை பெண்ணின் வடிவம். பெண்ணைப் பெரும்பாலும் தாயின் வடிவாகவே போற்றினர்.

பண்டைய எகிப்தியர் தான் அநேகமாக உலகில் முதல் அன்னையர் தினத்தைக் கொண்டாடியவர்கள். இவர்கள் ஐஸிஸ் என்ற பெண் கடவுளை மேன்மைப்படுத்தும் வகையில் இந்த நாளைக் கொண்டாடினர். இந்த பெண் தெய்வமான ஐஸிஸ், இயற்கை அன்னையாகப் போற்றப்பட்ட தெய்வமாகும். இந்தப் பெண் தெய்வமானது அடிமைகளுக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும், நோய்வாய்ப்பட்டோருக்கும், சிநேக மானவளாயும், ஏழை எளியோரின் பிரார்த்தனைகளை செவி மடுப்பவளாயும் நம்பப்பட்ட தெய்வமாகும்.

இந்த பெண் தெய்வத்தைப் போற்றும் விழாவே உலகின் முதலாவது அன்னையர் தினமாகக் கொள்ளலாமாம். இந்த எகிப்து தெய்வமானது பின்னாளின் ரோமானியரின் சமயத்திலும், கிறிஸ்தவர்களின் பகானிஸித்திலும் கூட வணங்கப்படுபவளாக இருந்துள்ளது.

இந்த எகிப்திய பெண் தெய்வமான ஐஸிஸுக்கான விழாவை ரோமானியர்களும் கொண்டாடினர். பின்னாளில் ரோமானியர்களின் பிரத்தியேக தெய்வமான ஸீஸஸ் உட்பட பல தெய்வங்களுக்கும் சிரேஷ்ட தாயாக வணங்கப்பட்ட ரெஹா என்ற பெண் தெய்வத்தை அன்னையர் தினமாக மூன்று நாள் கொண்டாட்டமாக கொண்டாடி வந்தார்கள்.

இதே போல் கிரேக்கத்தின் பல பெண் தெய்வங்களுக்கும், ஆசியாவின் பெண் தெய்வங்களுக்கும் இத்தகைய விழாக்கள் கொண்டாடப்பட்டு வந்திருக்கின்றன.

பின்னாளில் பெண் தெய்வங்களை முன்னிறுத்தி கொண்டாடப்பட்ட அன்னையர் தினம் முதன் முதலாக மானுடத் தாய்மாருக்காக பரிமாணமெடுத்தது ஐரோப்பாவில் என்றுதான் சொல்ல வேண்டும். ஈஸ்டர் பெருநாளுக்காக 40 நாள்கள் விரதமிருக்கும் கிறிஸ்தவர்கள் அந்த மாதத்தின் 4 ஆவது ஞாயிற்றுக் கிழமையில் தாம் ஞானஸ்தானம் பெற்ற தேவாலயம் சென்று வழிபடுவார்கள். அந்த தேவாலயங்களில் தேவமாதாவுக்கு பரிசில் வழங்குவர்.

1600 களில் தான் இந்த உண்மையான அன்னையர் தினத்தை தம்மைப் பெற்றவளுக்காக ஒதுக்கினார்களாம் ஐரோப்பியர். பிரிட்டிஷ் அரசின் வேலையாள்களுக்கு மே மாதத்தின் 4 ஆவது ஞாயிற்றுக்கிழமையை தமது தாய்மாருடன் சென்று கழிக்க அனுமதி வழங்கப்படும். தாயை சந்திக்கச் செல்லும் வேலையாள்கள் அவளுக்காக மலர்கள், இனிப்பு வகைகள் மற்றும் கேக் வகைகள் மற்றும் தத்தமது வசதிக் கேற்ப பரிசுப் பொருள்களுடன் போய் தத்தமது தாய்மாரை சந்திக்கச் செல்வது வழக்கமாக இருந்தது. இதை அப்போது மதரிங் சண்டே என்று அழைத்தனர்.

அமெரிக்காவுக்கு இடம்பெயர்ந்த ஐரோப்பியர்கள் வாழ்வில் பிரிட்டிஷ் நாட்டில் வழக்கப்படுத்திக் கொண்ட 'மதரிங் சண்டே' பாரம்பரியம் நாளடைவில் மறைந்து போய் சில நூற்றாண்டு காலத்தில் அது மறைந்தே போய் விட்டது. அமெரிக்காவுக்கு இடம் பெயர்ந்த ஐரோப்பியரின் வாழ்வு மிகவும் நெருக்கடியும், நீண்ட நேர உழைப்புக்கு பலவந்தமாக உந்தப்பட்டவர்களாயுமிருந்ததாலும் அவர்களால் ஐரோப்பாவில் பின்பற்றிய பாரம்பரியங்களைத் தொடர முடியாமல் போனதன் காரணம்.

முதன் முதலாக வட அமெரிக்காவில் 1870 ஆம் ஆண்டில் ஜூலியா வார்ட் ஹோவ் என்ற தாயார் அன்னையர் தினத்தை பற்றி பிரகடனம் செய்தார். அமெரிக்காவில் நடந்த சிவில் யுத்தத்தில் இறந்தவர்களின் மறைவும், யுத்தம் கொடுத்த பேரழிவும் ஜூலியா வார்ட் மிகவும் பாதித்தது. ஒரு தாயின் மகன் இன்னொரு தாயின் மகனை கொல்லும் அடிப்படையிலான யுத்தங்களை எதிர்க்கும் நாளாக அன்னையர் தினத்தை முன்னிறுத்தி யுத்த களத்திலிருக்கும் வீரர்களுக்காக குரல் கொடுக்க அனைத்துலக தாய்மாரையும் ஒன்றிணையச் சொல்லி அழைப்பு விடுத்தார். உலகின் அமைதியையும் தாய்மையையும் பேணும் நாளாக அன்னையர் தினம் உலகளவில் கொண்டாடப்பட வேண்டும் என்று அந்த அம்மையார் விரும்பினார்.

அமெரிக்காவின் சுதந்திர தினமான ஜூலை 4 ஆம் திகதியைத்தான் அன்னையர் தினமாகக் கொண்டாடப்பட வேண்டுமென்று விரும்பினார். ஆனால் ஜூன் 2 ஆம் திகதியை வட அமெரிக்க மகளிர் சங்கங்கள் புதிய அன்னையர் தினமாக 1873 ஆம் ஆண்டு பிரகடனம் செய்தன. அன்னையர் தின கொண்டாட்டங்களுக்காக ஜூலியாதான் நிதியுதவி செய்தார். அவர் இறந்த பின்னும் போஸ்டன் நகரில் 10 வருடங்கள் கொண்டாடினார்கள். அதன் பின் அந்த அன்னையர் தினக் கொண்டாட்டமும் இடை நிறுத்தப்பட்டு விட்டது. அந்த அன்னை எடுத்த முயற்சி குறைந்த ஆயுளுடன் முடிந்துவிட்டாலும் அவர் அன்றைக்கு வித்திட்டமை தான் இன்று நாம் கொண்டாடும் அன்னையர் தினத்துக்கு வழிகாட்டலாக அமைந்திருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. அன்னையர் தினத்துக்கான அவருடைய நோக்கம் போற்றப்பட வேண்டியது. சமூக அக்கறையின் அடையாளமாக அன்னையர் தினம் இருக்க வேண்டுமென்று அவர் விரும்பியமை போற்றப்பட வேண்டியது.

பின்னாளில் அனா ரிவீஸ் ஜார்விஸ் என்ற பெண்மணி, தான் நடத்திக் கொண்டிருந்த அமெரிக்காவின் வெஸ்ட் வெர்ஜினியா மகளிர் அமைப்பின் மூலம் ஜூலியா வார்ட் ஹோவின் அன்னையர் தினத்தைத் தத்தெடுத்து நடத்த விரும்பினார். சிவில் யுத்தத்தால் பிரிந்த சொந்தங்களை ஒன்று சேர்க்கும் நாளாக அன்னையர் தினத்தை உபயோகிக்க அவர் விளைந்தார்.

அனா தன் மகளுடன் இரவு நேரப் பிராத்தனைகளின் போதெல்லாம் அன்னையருக்கென்று ஒரு தினம் கொண்டாடப்பட வேண்டும் என்பதை ஒரு வேண்டுதலாகவே வைப்பாராம். அதுவே அவர் மகள் அன்னா மேரி ஜார் விஸ் மனதில் ஆழப்பதிந்து விட்டது.

அன்னா மேரி தன் தாயின் மறைவுக்கு பின் உத்தியோக பூர்வமாக அன்னையர் தினத்தை உலகின் அமைதிக்காகவும் அன்னையரை பெருமைப் படுத்தும் முகமாகவும் நாட்டின் தேசிய நாள்களில் ஒன்றாக தேர்வு செய்ய வேண்டும் என்ற பிரேரணையை நிறைவேற்ற விண்ணப்பிக்கும் வேலைகளில் இறங்கினார்.

அன்னா மேரி, தனது தாய் 20 வருடங்களுக்கும் மேலாக ஞாயிற்றுக் கிழமைகளின் வேத பாடசாலை ஆசிரியையாக கடமையாற்றிய வெஸ்ட் வேர்ஜினியாவிலிருக்கும் ஆண்ட்ரூஸ் மெதடிஸ் சர்ச் நடத்துநரிடம் தனது விண்ணப்பத்தை முதலில் கையளித்தார். அவரது கோரிக்கையை அவர்கள் ஏற்றுக்கொள்ள உத்தி யோகபூர்வமாக மே மாதம் 10 ஆம் திகதி வெஸ்ட் வேர்ஜினியா ஆண்ட்ரூஸ் மெதடிஸ் தேவாலயத்திலும் பில டெல்பியா பென்ஸில் வேனியாவில் ஒரு தேவாலயத்திலும் அன்னையர் தினத்தைக் கொண்டாடினார்கள். அன்று அந்த விழாவில் கலந்து கொண்ட ஒவ்வோர் தாய்மாருக்கும் தனது தாயாருக்கு பிடித்த வெள்ளை நிற கார்னெஷன் மலரில் இவ்விரண்டு மலர்களை கொடுத்தார். அன்றிலிருந்து தொடங்கியதுதான் ஒவ்வொரு அன்னையர் தினத்துக்கும் கார்னேஷன் மலர்களை அம்மாக்களுக்கு கொடுக்கும் சம்பிரதாயம். அதன் பின் உயிருடன் இருக்கும் அன்னையருக்கு பிங் அல்லது சிவப்பு நிற கார்னேஷனையும், மறைந்துபோன தாய்மாரின் சமாதிகளில் வெள்ளை நிறக் கார்னேஷன் மலரையும் சமர்ப்பிப்பது சம்பிரதாயமாகியது.

1908 ஆம் ஆண்டில் நெபரஸ்கா நகரின் அமெரிக்க செனட்ரான எல்மர் பர்கெட் என்பவர் அன்னையர் தினத்தை தேசிய விடுமுறை நாளாக அறிவிக்கும்படி வை.எம்.சி.ஏ. வைத்த கோரிக்கையை காங்கிரஸிடம் முன் வைத்தார். அந்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டாலும் 1909 ஆம் ஆண்டு 46 மாநிலங்களிலும் கனடா, மெக்ஸிக்கோ நாடுகளிலும் கொண்டாடப்பட்டது.

அன்னா மேரி ஜார்விஸ் தனது வேலையை இராஜினாம செய்து விட்டு முழு மூச்சுடன் அன்னையர் தினத்தை உத்தியோக பூர்வமாக தேசிய நாளாக அறிவிக்கும் படி அரசை வற்புறுத்துகின்றமையைத் தனது கடமையாக்கிக் கொண்டு பல தொண்டு நிறுவனங்களையும், வியாபார தளங்களையும், மகளிர் அமைப்புகளையும், தேவாலயங்களையும் தனது முயற்சிக்கு ஆதரவு கேட்டு அலைந்தார்.

இறுதியில் உலக தேவபாடசாலை அமைப்பைத் தனது கோரிக்கைக்கு இணங்க வைத்தார். அதன் மூலம் 1912 ஆம் ஆண்டில் அமெரிக்கா காங்கிரஸ் வெஸ்ட் வெர்ஜினியா மாநிலம் உத்தியோகபூர்வமான அன்னையர் தினம் கொண்டாடப்பட்டது. 1912 ஆம் ஆண்டு அமெரிக்காவின் 28 ஆவது ஜனாதிபதியான வூட்ரோ வில்ஸான் தேசிய ரீதியில் அன்னையர் தினத்தை ஒவ்வொரு வருடமும் மே மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை அன்னையர்தினமாக கொண்டாடப்படும் என்ற பிரேரணையில் கைச் சாத்திட்டார்.

அதன்பின் அன்னையர் தினம் நாட்டின் மிகப் பிரபலமான தினமாகியது. படிப்படியாக வியாபார ரீதியில் அன்னையர் தினம் பெருமளவில் வியாபாரிகளுக்கு லாபம் ஈட்டிக் கொடுக்கும் ஒரு நாளாக மாறியது. இந்த மாற்றம் அன்னையர் தினத்தின் உண்மையான நோக்கை பங்கமாக்குவதாக அன்னா மேரி கருதினார். அதை அவர் எதிர்க்கவும் செய்தார். சமூக அக்கறையோடு உலகின் அமைதியையும், தாய்மையையும் மேன்மைப்படுத்தும் தினமாக அமைய வேண்டிய தினம் வெறுமனே பரிசுப் பொருள்களை வாங்கி கையளிப்பதோடு முடிந்துவிடுவதை அவரால் பொறுக்க முடியவில்லை. அதனால் 1930 இல் அன்னையர் தினத்தன்று கார்னேஷன் மலர்கள் விற்கும் இடத்தில் தனது ஆட்சேபனையை எதிர்ப்பாக காட்ட முற்பட்ட போது அமைதிக்கு பங்கம் விளைவிக்கிறார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

உலகம் முழுவதும் இன்று ஒவ்வொருவரும் தமது அன்னையரை போற்றும் தினமாக அன்னையர் தினத்தை போராடிப் பெற்றுத் தந்த அன்னா மேரி ஜார்வஸ் தன்னை நினைக்க வென்று ஒரு வாரிசேயில்லாமல், பார்வையிழந்தவராக, பரம ஏழையாக 1948 ஆம் ஆண்டு இவ்வுலகை விட்டு மறைந்தார்.

அவருக்கே தெரியாமல் இருந்த ஒரு விடயம் அவருடைய கடைசிக் காலங் களில் மலர் வியாபார நிலையம் ஒன்று தான் அவருக்கான செலவுகளைக் கவ னித்து வந்தது. அவர் மறைந்தாலும் அவ ரால் முன்னெடுக்கப்பட்ட அன்னையர் தினம் இன்று 40 இற்கும் மேலான நாடுகளில் கொண்டாடப்படுகிறது. ★




பொன்.வேணு கிருஷ்ணா

2001இல் ஜோர்ஜ் புஷ் பதவியேற்றதும் அணுகுமுறை மாறியது. ஜனவரி 2002இல், வடகொரியா, ஈரான், ஈராக் ஆகியவை 'தீமையின் அச்சில் சுழலும்' நாடுகள் என்று சாடினார் புஷ். வடகொரியாவுடனான எல்லா நேரடிப் பேச்சுகளும் நிறுத்தப்பட்டன. அவ்வாண்டு இறுதியில் போங்பியான் என்னுமிடத்திலுள்ள அணு உலையில் உற்பத்தி நடப்பது தெரியவந்தது. வடகொரியாவிற்கு எதிரான குற்றச்சாட்டுகள் அதிகரித்தபோது, அது சர்வதேச அணு ஆற்றல் நிறுவனத்தின் ஆய்வாளர்களை வெளியேற்றியது. அடுத்த கட்டமாக 2003இல் NPTயிலிருந்தும் வெளியேறியது. இதே ஆண்டு தென்கொரியாவிற்கும் ஜப்பானுக்கும் இடையிலான கடற்பரப்பில் இரண்டு ஏவுகணைகளைச் செலுத்தியது. இந்தச் சூழலில்தான் சீனாவின் முன் முயற்சியில் 2003 ஆகஸ்டில் ஆறு நாடுகளின் முதல் சுற்றுப் பேச்சு பெய்ஜிங்கில் நடந்தது. இடைவெளிகள் நீடித்தபோதும் இது புதிய தொடக்கத்தைக் குறித்தது. 2004 பெப்ரவரியில் இரண்டாம் சுற்றும் ஜூனில் மூன்றாம் சுற்றும் 2005 ஜூலையில் நான்காம் சுற்றும் செப்ரெம்பரில் ஐந்தாம் சுற்றும் தொடர்ந்தன. ஐந்தாம் சுற்றின் முடிவில் அணு ஆயுதங்களைக் கைவிட வட கொரியா ஒப்புக்கொண்டது. ஆனால் அடுத்த சில தினங்களிலேயே கிளின்டன் அரசு வாக்களித்த மென்னீர் உலைகள் நிறுவப்பட வேண்டும் என்பதை ஒரு நிபந்தனையாக வைத்தது. 2005 நவம்பரில் வடகொரியாவின் சில வெளிநாட்டு வங்கிக் கணக்குகளை அமெரிக்கா முடக்கியபோது பேச்சு முறிந்தது.

ஒக்ரோபர் 9ஆம் திகதி அன்று அணு ஆயுதச் சோதனையை 'வெற்றிகரமாக' நடத் தியது வடகொரியா. இப்போது சோதித்ததைப்போன்ற அணுகுண்டுகள் வடகொரியாவிடம் இன்னும் சில இருக்கலாம் என்று கருதுகின்றனர் ஆய்வாளர்கள். எனினும் அவற்றைச் செலுத்தவல்ல ஏவுகணைகள் அதனிடம் இல்லை. விமானங்களைப் பயன்படுத்தலாம். ஆனால், அவற்றை ஓரளவிற்கு முன்னதாகக் கண்டறிந்துவிட முடியும். ஆனால், இந்தத் தொழில் நுட்பத்தையும் ஆயுதங்களையும் வட கொரியா யாருக்கும் வழங்கலாம் என்னும் அச்சம் பல நாடுகளுக்கும் இருக்கிறது. அதுவே ஐ.நாவின் தண்டனைத் தடைகளுக்குக் காரணம் எனலாம். ஆனால், பொருளாதார வீழ்ச்சியின் விளிம்பில் இருக்கும் ஒரு தேசத்தை மேலும் நெருக்குவது மேலும் வீழ்ச்சியடையவே வழிவகுக்கும். இந்தத் தடைகள் வடகொரியா எதிர்பாராதவை அல்ல. இவை அதிக காலம் நீடிக்காது என்பது அதன் கணிப்பாக இருந்திருக்கலாம். முன்நிபந்தனையின்றி ஆறுநாடுகளின்பேச்சுக்குஅழைக்கப்பட்டிருக்கின்றமையை அது எதிர்பார்த்திருக்கலாம். இனி ஊக்கச் சலுகைகள் தாமே வரும் என்பதும் அதன் எதிர்பார்ப்பாக இருக்கலாம்.

### ஆறு நாடுகள்

இப்போதைக்கு அமெரிக்கா, வடகொரியாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை மட்டுப்படுத்திக்கொள்ளும் எனத் தெரிகிறது. ஜப்பான் தடைகள் இன்னும் அதிகரிக்கப்பட வேண்டும் என்றே சொல்லிவருகிறது. ரஷ்யாவிற்கு ஒரு காலத்தில் அதன் செல்வாக்குப் பகுதியாக இருந்த வடகொரியாவின் மீது அனுதாபம் தொடர்கிறது.

வடகொரியாவின் இராணுவத் துருப்புக்களின் எண்ணிக்கை 10 லட்சம். தென்கொரியா இந்தப் பலத்தில் பாதியையே பெற்றிருக்கிறது. ஆனால் தெற்கு, வடக்கைக் காட்டிலும் இரு மடங்கு மக்கள் தொகையும் 20 மடங்கு செல்வச் செழிப்பும் மிக்கது. ஜூலை மாதம் நிறுத்திவைத்த உணவுப் பொருள்களை, பேச்சுகள் நடைபெற உள்ள இந்தச் சூழலில் தென்கொரியா அனுப்பி வைக்கும் என்று தெரிகிறது. 'கொரியர்கள் அனைவரும் சகோதரர்கள், இந்தப் பிரிவினை வல்லரசுகளால் செயற்கையாக உருவாக்கப்பட்டது' எனும் கருத்து புதிய தலைமுறையிடம் நிலவுகிறது.

வடகொரியாவின் உணவுத் தேவைகளில் கணிசமான பகுதியையும் எரிபொருள்களையும் தொடர்ந்து வழங்கி வருகிறது சீனா. தனது அறிவுரையை மீறி வடகொரியா அணு ஆயுதச் சோதனை நிகழ்த்தியபோது சீனா வன்மையாகக் கண்டித்தது. ஆனால் வடகொரியாவைப் பேச்சுக்கு இணங்கச் செய்ததும் சீனாவேதான்.

### அணு ஆயுதப் பரவல்

வடகொரியாவின் சோதனை 137 நாடுகள் ஒப்பிட்டிருக்கும் NPTயின் மீது அறையப்பட்டிருக்கும் ஆணி என்று சில விமர்சகர்கள் கருதுகின்றனர். இரண்டாம் உலகப் போரின் முடிவில் அமெரிக்கா மட்டுமே அணு ஆயுத பாணியாக இருந்தது. பிற்பாடு சோவியத் யூனியன் (1949), பிரிட்டன் (1952), பிரான்ஸ் (1960), சீனா (1964) ஆகிய நாடுகளும் அணு ஆயுதம் தரித்தன. இந்த ஐந்து நாடுகளும் ஐ.நா. பாதுகாப்பு மன்றத்தின் வீட்டோ அதிகாரமுள்ள நிரந்தர உறுப்பினர்கள். NPT, இந்த ஐந்து நாடுகளையும் அணு ஆயுதங்கள் வைத்திருக்கவும் தங்களுக்குள் பரிமாறிக்கொள்ளவும் அனுமதிக்கிறது. தடை, மற்ற உறுப்பு நாடுகளுக்குத்தான். இந்தச் சமனற்ற உடன்பாட்டுக்கு இந்தியா ஒப்பவில்லை. 1974இலும் 1998இலும் இந்தியா சோதனைகள் நிகழ்த்தியது. அமெரிக்கா கண்டித்தது. ஆனால் 1967இலேயே அணு ஆயுதத்தைத் தயாரித்த இஸ்ரேலை அமெரிக்கா கண்டு கொள்ளவில்லை. 1998இல் பாகிஸ்தான் எட்டாம் அணு ஆயுத நாடானது. இப்போது வடகொரியா ஒன்பதாம் நாடாகியிருக்கிறது.

அணு ஆற்றல் ஆய்வாளர்கள் இன்னும் 40 நாடுகளேனும் அணு ஆயுதத்தைத் தயாரிக்கும் வல்லமை பெற்றவை என்கின்றனர். இந்த நாடுகள் தங்களது சிவில் அணு ஆற்றல் தொழில் நுட்பத்தை மேம்படுத்தி அணு ஆயுதத்தைத் தயாரிக்கும் திறன் கொண்டவை. இதைத் தவிர அணு ஆயுதக் கள்ளச் சந்தை வேறு. பாகிஸ்தான் அணு ஆயுதத் திட்டத்தின் தந்தை எனப்படும் அப்துல் காதிர்கானின் ஏற்பாட்டில் சென்ட்ரி ப்யூஜ் எனப்படும் சுழற்சிச் செறிவாக்கல் கருவிப் பகுதிகள், பாகிஸ்தானிலிருந்து லிபியா, ஈரான் மற்றும் வடகொரியாவிற்குக் கொண்டு செல்லப்பட்டன. இது 2004இல் அம்பலமானது. எகிப்து, நைஜர், நைஜீரியா, சூடான், சிரியா, சவுதி அரேபியா உள்ளிட்ட 18 நாடுகளுக்கு கான் பயணம் செய்திருந்தார் என்பதும் அப்போது தெரியவந்தது.


வடகொரியாவின் சோதனை, இனி ஜப்பானும் தென்கொரியாவும் அணு ஆயுதத்தை நாடுமோ என்னும் அச்சத்தைத் தோற்றுவித்திருக்கிறது. இவ்விரண்டு நாடுகளுக்கும் அணு ஆயுதங்களிலிருந்து பாதுகாப்பு எனும் குடையை விரித்துவைத்திருக்கிறது அமெரிக்கா. இந்தக் குடை அதிக காலம் வேண்டிவருமா என்னும் ஐயம் வடகிழக்கு ஆசியாவின் மீது பதிந்திருக்கிறது.

இந்தச் சோதனையை இந்தியா எதிர்கொண்ட விதம் வியப்பளித்தது. புதுடில்லியின் அறிக்கை குற்றச்சாட்டுக்களை அடுக்கியமை: ''சர்வதேசக் கட்டுப்பாட்டை மீறிய செயல், சமாதானத்திற்கான பேரபாயம், பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல், கள்ளத்தனமான அணு ஆயுதப் பரவல் ...'' ஏன் இத்தனை கோபம்? இந்தியா NPTயில் கையொப்பமிடவேயில்லை. வடகொரியா 2003இல் முறைப்படி பின்வாங்கிக்கொண்டது. இந்தியாவின் சோதனை சர்வதேசக் கட்டுப்பாடுகளை மீறவில்லையெனில், வடகொரியா மட்டும் எப்படி மீறியது எனச் சொல்ல முடியும்? வடகொரியா போன்ற ஒருநாடு பேரழிவு ஆயுதங்களை வைத்திருப்பதைக் குறித்து இந்தியா கவலை தெரிவித்திருந்தால் அதைப் புரிந்துகொள்ளலாம். இந்தியாவின் காட்டமான எதிர்வினைக்குப் பின்னால் இருப்பது இந்திய-அமெரிக்க சிவில் அணு ஆயுத ஒத்துழைப்பு ஒப்பந்தம் என்று தோன்றுகிறது. ஏற்கனவே கூடுதல் நிபந்தனைகளுடன் அமெரிக்காவில் விவாதிக்கப்பட்டுவரும் ஒப்பந்தம், இந்தச் சோதனையால் இனியும் தாமதமாகலாம். யாரையேனும் மகிழ்விக்க இந்தியா, தன் நிலைப்பாட்டிலிருந்து இறங்கி வரலாகாது.

### ஆறு நாடுகளின் பேச்சு

ஆறு நாடுகளின் பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு வடகொரியா விரும்புகிற பொருளாதாரச் சலுகைகள் அதற்குக் கிடைக்கலாம். தன்னை ஓர் அணு ஆயுத நாடாக எல்லோரும் அங்கீகரிக்க வேண்டுமென்றும் அது கோரலாம். அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதிலும் பிறருக்கு வழங்குவதிலும் அது அமெரிக்காவுடன் பேரம் பேசலாம். எவ்வாறாயினும் அது அணு ஆயுதங்களை இப்போதைக்குக் கைவிடப் போவதில்லை.

எனில், NPTயின் கதி? ஐந்து நாடுகள் மட்டும் அணு ஆயுதத்தை வைத்திருக்கும்; அவை சமாதானத்துக்கு மட்டும் அவற்றைப் பயன்படுத்தும்; NPTயின் மற்ற உறுப்பு நாடுகள் அவற்றைத் தயாரிக்கவோ பரிமாறிக் கொள்ளவோ கூடாது எனும் விதிகள் இனியும் செல்லுபடியாகாது. NPTயில் அங்கம் வகிக்காத நாடுகளை அமைப்பு எப்படிக் கட்டுப்படுத்தும் என்பதிலும் தெளிவில்லை. அதிகமான அணு ஆயுத நாடுகளை ஒப்புக் கொள்வதோ, அனைத்து நாடுகளும் அணு ஆயுதத்தை மறுதலிப்பதோதான் ஏற்கக்கூடிய வழிகளாக இருக்கும். இடைப்பட்ட வழிகளின் கதவுகள் கடந்த 40 ஆண்டுகளில் வரிசையாக அடைபட்டுவந்திருக்கின்றன. அணு ஆயுதங்கள் இல்லாத உலகம் கனவாகத் தோன்றலாம். ஆனால், அதுவே நீதியானது. அதற்கு அணு ஆயுதத்தை இப்போதைக்கு ஒன்பது நாடுகள் மட்டுமே கைவிட வேண்டும்.




(கேள்வி தொடரும்...)






# தமிழ்த் தேசிய எழுச்சி

ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




144

## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

### பிரபாகரனுடனான வன்னிச் சந்திப்பு

தாயக தேசத்தில் மீண்டும் நான், அதுவும் உயிரோடு; அடைந்த மகிழ்வுக்கு அளவேயில்லை. மிதவைப் படகு கரையை அடைந்தபோது ஓர் எதிர்பாராத ஆச்சரியம் எம்மைக் காத்திருந்தது. தலைவர் பிரபாகரனை அங்கு கண்டேன். அது பூரிப்பின் இரட்டிப்பு. கை கொடுத்து உதவி என்னைக் கரையேற்றினார். அவரோடு அவரது துணைவி மதிவதனி, ஏனைய மூத்த தோழர்கள், பழைய நண்பர்கள், எல்லோரும் காத்திருந்து எம்மை இன்முகத்தோடு வரவேற்றனர். எல்லோரையும் சந்தித்து வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்ட பின்னர், எமக்காக ஒழுங்குசெய்யப்பட்டிருந்த பிரத்தியேகத் தங்குமிடத்தை நோக்கி நாம் அழைத்துச்செல்லப்பட்டோம். அங்கே, பிரபாகரனும் நானும் மந்திரலோசனைகளை ஆரம்பித்தோம்.

மறுநாள், நோர்வேப் பிரதிநிதிகள் குழு பிரபாகரனைச் சந்தித்தது. எரிக் சொல்ஹெய்ம், ஜோன் வெஸ்ட்போர்க் ஆகியோருடன், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ரோண்ட் பூரகோவ்டேவும் கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த பின்லாந்து நாட்டு அலுவலர் ஒருவரும் அந்தக் குழுவில் இடம் பெற்றிருந்தனர். பிரபாகரனுக்கு உதவியாக, நானும் தமிழ்ச்செல்வனும், அடேலும் அந்தச் சந்திப்பில் கலந்து கொண்டோம்.

யாழ்ப்பாண நெடுஞ்சாலையின் வடமுனையை, ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதியிலிருந்து திறந்து விடுவதற்குச் சிறிலங்கா அரசு இணங்கியிருப்பதாக நோர்வேப் பிரதிநிதிகள் எமக்கு அறியத் தந்தனர். எனினும் போர் நிறுத்த உடன்படிக்கையில் இணக்கம் காணப்பட்ட விதிகளையும் கடப்பாடுகளையும் செயற்படுத்துவதில் காட்டப்பட்டு வந்த தாமதங்கள் குறித்துத் தனது ஆழமான விசனத்தை பிரபாகரன் அச்சந்திப்பின்போது வெளிப்படுத்தினார். உடன்படிக்கைவிதிகளைநடைமுறைப் படுத்தும் பிரச்சினைகள் நேரடிப் பேச்சுகளின்போது கலந்துரையாடித் தீர்வு காணப்பட வேண்டும் எனத் தெரிவித்த சொல்ஹெய்ம், நேரடிப் பேச்சுகள் விரைவாகத் தொடங்க வேண்டுமென வற்புறுத்தினார்.





சமாதானப் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர், தமது விடுதலை இயக்கம் மீது சிறிலங்கா அரசால் விதிக்கப்பட்ட தடைஅகற்றப்படவேண்டுமெனப் புலிகளின் பிரதிநிதிகள் முன்நிபந்தனை விதித்தனர். பேச்சுகளில் ஈடுபடுவதற்கு முன்னர் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து ரணில் விக்கிரமசிங்கவின் அரசு சாதகமாகப் பரிசீலனை செய்து வருவதாக நோர்வேத் தரப்பினர் தெரியப்படுத்தினர். புலிகள் மீதான தடையை நீக்குமாறு வலியுறுத்தவும், பேச்சுகளுக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிப்பது பற்றி இரு தரப்பினருடனும் கலந்துரையாடுவதற்கும் ஏப்ரல் மாதத்தில் நோர்வே உதவி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன் கொழும்புக்கும் கிளிநொச்சிக்கும் வருகை தர உள்ளார் என்றும் நோர்வேப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

வன்னிப் பெரு நிலப்பரப்பை யாழ் குடாநாட்டோடு இணைக்கும் யாழ்ப்பாண நெடுஞ்சாலையைத் திறக்கும் தனது வாக்குறுதியை அரசு நிறைவேற்றியது. யாழ். குடாநாட்டின் தென் கோடியிலிருந்த எல்லை நகரான முகமாலையில் நடந்த அந்த வைபவத்தில் ஜெனரல் பூரகோவ்டே இரண்டு தரப்புப் படைகளினது தளபதிகளையும் அறிமுகம் செய்து வைத்தார். கேணல் தீபன், கேணல் பானு ஆகியோர் புலிகள் இயகத்தைப் பிரதிநிதிப்படுத்த, மேஜர் ஜெனரல் விஜேசூரியா சிறிலங்காப் படையைப் பிரதிநிதித்துவப் படுத்தினார். பாதை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து, புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த 15 போராளிகள் வெற்றிப் பெருமிதத்தோடு கூடிய பெருந்திரளான மக்களின் ஆர்ப்பரித்த வரவேற்போடு, அரசின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ் குடாநாட்டுக்குள் நுழைந்தனர்.

நாங்கள் வன்னியில் தங்கியிருந்த காலத்தில் நடந்த, அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக, ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி அன்று பிரபாகரன் அனைத்துலக ஊடகவியலாளர்களைச் சந்தித்தார். பன்னிரெண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் புலிகளின் தலைவர் பங்கேற்ற அந்த முதலாவது ஊடகவியலாளர் மாநாட்டுக்கு, படப்பிடிப்பாளர் உட்பட 400 இற்கும் மேற்பட்ட செய்தியாளர்கள் வருகை தந்திருந்தனர். இந்த மாநாட்டில் பிரபாகரனிடம் கேட்கப்பட்ட கேள்விகளையும் அவற்றுக்கான அவரது பதில்களையும், ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கும் தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கும் நான் மொழியாக்கம் செய்தேன். அத்துடன், இயக்கத்தின் தத்துவ ஆசிரியர் என்ற வகையில் அவரது பதில்களை விரிவாக்கம் செய்து, தேவையானவற்றுக்குக் கூடுதல் விளக்கம் அளித்தேன்.



நோர்வே அரசு முன்னெடுத்த அமைதி முயற்சிகள் பற்றியும், சமரச முன்னெடுப்பில் தனது இயக்கத்தின் நிலைப்பாடு பற்றியும் தலைவர் பிரபாகரன் அங்கு விரிவாக விளக்கினார். சமாதானத்தை உருவாக்குவதில் புலிகள் இயக்கம் ஆத்மாத்தமான ஈடுபாடும், ஆணித்தரமான உறுதிப்பாடும் கொண்டுள்ளது என்று தெரிவித்த அவர், அமைதி முயற்சியில் ஏற்பட்டு வந்த முன்னேற்றங்கள் தொடர்பாகத் தனது திருப்தியையும் வெளிப்படுத்தினார். மேலும், தமிழ் மக்களிடத்தில் சுமுக நிலையையும், நல்லெண்ணத்தையும் ரணில் விக்கிரமசிங்க எடுத்து வந்த துணிவான நடவடிக்கைகளுக்காக அவரைப் பாராட்டினார். அதே வேளையில், ரணில் விக்கிரமசிங்கவின் நாடாளுமன்ற அரசு பலமற்றதாகவும் உறுதியற்றதாகவும் இருப்பதுடன், தமிழ்த் தேசிய இனச் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காணுவதற்குத் தேவையான நிறைவேற்று அதிகாரங்கள் அற்றனவாகவும் அது இருக்கின்றது பிரபாகரன் தெரிவித்தார்.

''தமிழரின் இனப் பிரச்சினைகளின் அடிப்படைகளை ஆழமாகப் பரிசீலனை செய்து, ஒரு நிரந்தர தீர்வை வழங்குவதற்கு ரணில் விக்கிரமசிங்கவால் முடியும் என நாம் கருதவில்லை. ஏனென்றால், முழுமையானநிறைவேற்று அதிகாரங்கள் அனைத்தும் ஜனாதிபதியிடம் முடங்கிப் போய்கிடக்கின்றன. அதன் காரணமாகவே, வடக்கு கிழக்குக்கென, விடுதலைப் புலிகள் பங்கேற்கக் கூடியதான ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை நிறுவ வேண்டும் என நாம் கேட்டுக்கொண்டோம்.'' என்றும் பிரபாகரன் விளக்கினார். மேலும், அரசியல் பேச்சுகள் மூலமாக அமைதித் தீர்வு ஒன்றைக் காண்பதில் புலிகளின் இயக்கம் இதயசுத்தியுடன் செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டையும், அமெரிக்கா தலைமையில் முன்னெடுக்கப்பட்டுவரும் 'பயங்கரவாதத்துக்கு எதிரான உலகப் போர்' காரணமாகப் புலிகள் அழுத்தத்துக்கு உள்ளாகி இருக்கின்றார்கள் என்ற வாதத்தையும் பிரபாகரன் அடியோடு நிராகரித்தார். அமெரிக்காவின் உலக வணிக மையக் கட்டடங்கள் தகர்த்தப்படுவதற்கு முன்னரே, அதாவது 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதிக்கு முன்னரே சமாதானத்துக்கான ஒரு அழைப்பாக, புலிகள் இயக்கம் ஒரு தலைப்பட் சமான போர் நிறுத்தத்தை அறிவித்து, அதனை நான்கு மாதங்கள் வரை நீடித்து அமைதி பேணியதை அவர் நினைவூட்டினார். நோர்வேயின் அமைதித்தூதுவர்எரிக்சொல்ஹெய்மை 2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் சந்தித்து, சமாதானத்தையும் சமரசத் தீர்வையும் புலிகள் இயக்கம் வேண்டி நிற்கின்றது என அவரிடம் பிரபாகரன் தெரிவித்தார். அத்தோடு, நோர்வேயின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படும் இந்தச் சமரச முயற்சிகள் வெற்றியடையும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

(தொடரும்...)

## பணிப்பெண்ணாக வெளிநாடு சென்றபோது தாக்கப்பட்ட இலங்கைப் பெண் உயிரிழப்பு!

கொழும்பு, மே 13

வெளிநாடு ஒன்றுக்கு பணிப்பெண்ணாகச் சென்ற இலங்கைப் பெண்ணொருவர் கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

முள்ளந்தண்டு உடைந்தமையால் எழுந்து நிற்க முடியாமல் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

நொச்சியாகம, கொக்கெனேவ பகுதியைச் சேர்ந்த சுஜானி ராஜபக்ஷ என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவர் இரண்டு பிள்ளைகளின் தாயாவார்.

அனுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த ஏழாம் திகதி உயிரிழந்துள்ளார்.

இந்தப் பெண் குவைத்துக்குப் பணிப் பெண்ணாக சென்ற நிலையில், அவர் பணியாற்றிய வீட்டில் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

பெண் மற்றும் ஆண் ஒருவர் மேற்கொண்ட தாக்குதல் காரணமாக 10 மாதங்கள் எழுந்து நிற்க முடியாத நிலையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார். (ஐ)

## போதைப் பொருள்கள் கடத்தல் முக்கிய புள்ளியொருவர் டுபாயில்

### பொலிஸ் விசாரணையில் தகவல் தெரிவிப்பு

கொழும்பு, மே 13

நீண்ட காலமாகப் போதைப் பொருள்களை கடத்தி வரும் முக்கியமான நபர் டுபாயில் உள்ளார் என்று பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

புத்தளத்தில் இருந்து கொழும்புக்கு நேற்று முன்தினம் போதைப் பொருளை எடுத்துச் செல்லும் போது சந்தேக நபர் ஒருவர் சிலாபத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், சிலாபம் பிரதேசத்தில் இருந்து மீட்கப்பட்ட போதைப் பொருள்களுக்கான உரிமையாளர் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முடுக்கி விட்டிருந்தனர்.

இந்த விசாரணைகளின் போது, போதைப் பொருள் வியாபாரம் நீண்ட காலமாக கடல் மார்க்கமாக செய்யப்பட்டு வருகிறது என்றும் இவற்றுடன் தொடர்பான முக்கிய புள்ளி ஒருவர் டுபாயில் உள்ளார் என்றும் தெரிய வந்துள்ளது என்று கூறப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நான்கு பிள்ளைகளின் தந்தையாவார்.

இந்தப் போதைப் பொருளை கொண்டு சென்று உரியவரிடம் ஒப்படைத்தால் தனக்கு 50 லட்சம் ரூபா தருவார்கள் என்று அவர் பொலிஸாரிடம் சாட்சியமளித்துள்ளார்.

இதேவேளை, சந்தேக நபரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட கையடக்கத் தொலைபேசிக்கு, போதைப் பொருள்களின் உரிமையாளர் என்று கூறப்படுபவர் தொடர்பு கொண்டிருந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

இந்த நிலையில் தாம் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று சிலாபம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

# மத வழிபாட்டுத் தலங்களை வலிந்து உருவாக்கக் கூடாது!

### டக்ளஸ் தேவானந்தா எம்.பி. தெரிவிப்பு

எமதுநாட்டில்பல்லினசமூகங்கள் வாழ்ந்துவரும் நிலையில், எவரும் தமக்கு விரும்பிய பகுதிகளில் வாழ்வதற்கு உரிமையுண்டு. இதனை எவரும் மறுக்க முடியாது. ஆனால், ஓர் இன சமூகத்தினர் பரம்பலாக வாழும் நிலையில் அந்தப் பகுதிகளை ஆக்கிரமிக்கக் கூடிய வகையில் இன்னொரு இன சமூகத்தினரை வலிந்து குடியேற்றும் திட்டங்களையே நாம் எதிர்க்கின்றோம். அதேபோன்று குறிப்பிட்ட ஒரு பகுதியில் குறிப்பிட்ட ஒரு மதத்தை வழிபடும் மக்கள் இல்லாத நிலையில் அந்த மதத்துக்கு உரிய வழிபாட்டுத் தலங்கள் வலிந்து புகுத்தப்படுவதையும் நாம் எதிர்க்கின்றோம்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சில காலமாகவே வழிபாட்டுத் தலங்கள் மற்றும் சிலை வைப்புச் சம்பவங்கள் என்பன வலிந்து புகுத்தப்படுகின்றன.

இந்த நிலையில், எமது மக்களிடையே பல்வேறு வகையிலான பிரச்சினைகள் தோன்றி வருகின்றன. ஒரு மதத்தை வழிபடக் கூடிய மக்கள் இருக்கும் நிலையில் அந்த மதத்துக்கு உரிய வழிபாட்டுத் தலங்கள் அமைக்கப்படுவதில் எவ்வித மான தவறும் இல்லை.

ஆனால், வழிபடக் கூடிய மக்களே இல்லாத இடங்களில் எல்லாம் இத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்ளுவது என்பது இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவதற்கோ அதனூடாக தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கோ உகந்த செயலாகாது.

தென் பகுதியில் இந்து மக்களின் வழிபாட்டுத் தலங்கள் இருக்கின்றன. அந்த மக்கள் தங்களது வழிபாடுகளை மேற்கொள்கின்றனர். இந்த நிலையில் வடக்கில் எமது வழிபாட்டு தலங்களை ஏன் அமைக்க முடியாது என்றொரு வாதத்தைஇன்று பெரும்பான்மை தரப்பில் சிலர் முன்வைக்கின்றனர்.

இது ஒரு வாதமே அன்றி இது யதார்த்தமானதொரு கூற்று அல்ல. தென் பகுதியில் பரவலாக இந்துக்கள் வாழ்ந்து வருகின்றனர். அதே நேரம், தென் பகுதியில் இந்து மக்களின் வழிபாட்டுத் தலங்கள் பெரும்பான்மை இன மக்களாலும் வழிபாடுகளுக்கென பயன்படுத்தப்படுகின்றன.

எனவே, அவை தொடர்பில் பெரும்பான்மையினருக்கு மத ரீதியாக ஒரு பிரச்சினையில்லை. ஆனால், முஸ்லிம் மக்களது வழிபாட்டுத் தலங்கள் பெரும்பான்மையினரின் தாக்குதல்களுக்கு உட்படுகின்ற நிலைகளை தென் பகுதியிலே காணக் கூடியதாக இருக்கின்றன.

இவ்வாறான செயற்பாடுகள் குறுகிய இனவாதக் கண்ணோட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும், அதன் பாதிப்பானது ஒட்டு மொத்தமாக எமது நாட்டின் முன்னேற்றத்தையே தாக்கக் கூடியதாக அமைந்திருப்பதை உரிய தரப்பினர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எனவே, தேசிய நல்லிணக்கம் கருதியதான செயற்பாடுகளுக்கு இந்நாட்டில் இனங்களுக்கிடையில் சுமுகமானதொரு சூழ்நிலையைத் தோற்றுவிக்கும் நோக்கில் இவ்வாறான மத வழிபாட்டு தலங்களை வலிந்து புகுத்தும் நிலைமைகள் அனைத்து இன சமூகங்களாலும் தவிர்க்கப்பட வேண்டும்.-என்றார். (ஐ)

## மின் தடை அறிவிப்பு

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக யாழ்.பிரதேசத்தில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை அல்லாரை, வெள்ளாம்பொக்கட்டி, கெற்பலி, கச்சாய், பாலாவி, பலாலி ஒருபகுதி, மயிலிட்டி ஒரு பகுதி, தையிட்டி ஒரு பகுதி, வறுத்தலைவிளான் ஒரு பகுதி, வீமன்காமம் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை அல்லாரை, வெள்ளாம் பொக்கட்டி, கெற்பலி, கச்சாய் பலாலி ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## நாடளாவிய ரீதியில் வறட்சியால் 10 லட்சத்துக்கு மேற்பட்டோர் பாதிப்பு!

கொழும்பு, மே 13

நாடளாவியரீதியில் 10 லட்சத்து 24 ஆயிரத்து 566 பேர் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

நாட்டில் தற்போது கிடைக்கப்பெற்றுள்ள பருவ மழை வீழ்ச்சிக்கு மத்தியிலும் நாடளாவிய ரீதியில் தொடரும் வறட்சியான சூழல் தொடர்பான கேள்வி எழுப்பிய போதே அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் ஊடகப் பேச்சாளர் பிரதிப் கொடிப்புலி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாடளாவிய ரீதியில் 8 மாவட்டங்களைச் சேர்ந்த 28 ஆயிரத்து 53 குடும்பங்களைச் சேர்ந்த 10 லட்சத்து 24 ஆயிரத்து 566 பேர் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கு, வடமேல் மாகாணங்களிலேயே அதிகளவானோர் இந்த வறட்சியால் கடுமையான பாதிப்புக்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

தற்போது, நாட்டில் ஆங்காங்கே மழை வீழ்ச்சி கிடைக்கப்பெற்றாலும் தொடர்ந்தும் வறட்சியான சூழ்நிலையே நீடித்து வருகின்றது.

இவ்வாறு, கடுமையான வறட்சிக்கு முகங்கொடுத்திருக்கும் மாவட்டங்களை சேர்ந்த மக்களுக்கு அரசால் தொடர்ந்தும் குடிநீர் உட்பட அத்தியாவசிய பொருள்களை நிவாரணமாக வழங்கி வருகின்றது.



இதேவேளை, நாட்டின் பல்வேறு பகுதிகளில் இனிவரும் நாள்களில் தொடர்ந்தும் பிற்பகல் 2 மணிக்கு பின்னரான காலப்பகுதியில் இடியுடன் கூடிய மழை பொழியக் கூடும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் மின்னல் தாக்கம் குறித்து மக்கள் மிகுந்த அவதானமாக செயற்படுமாறும் வளிமண்டல திணைக்களத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# 'தென்னருவி' வர்த்தகக் கண்காட்சி சாவகச்சேரியில் நேற்று ஆரம்பம்!

தென்மராட்சி, மே 13

தென்மராட்சி கல்வி வலயத்தின் அனுசரணையுடன் 'தெனருவி' வர்த்தகக் கண்காட்சி சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் ஆரம்பமாகி தொடர்ந்து இன்றும் இடம் பெற உள்ளது.

விருந்தினர்கள் சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் இருந்து பாண்ட் வாத்திய இசையுடன் டிறிபேர்க் கல்லூரிக்கு அழைத்து வரப்பட்டனர்.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கண்காட்சியைத் திறந்து வைத்து பின்னர் தென்மராட்சி பிரதேச மக்களின் உற்பத்திப் பொருள்களைப் பார்வையிட்டார்.

சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கே.சஜந்தனும் கௌரவ விருந்தினர்களாக வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன், ஓய்வு நிலை அதிபர் க.அருந்தவபாலன், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றச் செயலாளர் சிவராசா, வணிகர் கழகத் தலைவர் சிவபாலன் ஆகியோரும் கலந்து கொண்டு கண்காட்சியைப் பார்வையிட்டனர்.



காட்சிப்படுத்தப்பட்ட உற்பத்திப் பொருள்கள் வட பிராந்திய தென்னை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் தென்னம் பொருள்களால் உற்பத்தி செய்யப்பட்டவை.

நிகழ்வில் கலந்துகொண்ட விவசாய அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில் -

'அண்மைக் காலமாக பட்டதாரிகள் அரச வேலைக்காக போராட்டங்கள் நடத்தி வருகின்றனர். ஆனால் அரச வேலை கிடைத்தால்தான் வாழ்க்கையைச் சிறப்பாக கொண்டு நடத்த முடியும் என்ற யோசனையை நிறுத்த வேண்டும். நான் எனக்கு வந்த அரச உத்தியோகத்தை வெறுத்து ஒதுக்கினேன். எனது 60 வயதின் பின்னர் வடமாகாண சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னரே அரச கொடுப்பனவைப் பெறுகின்றேன். இலங்கையில் தொழிற் கல்விமுறை குறைவாகக்காணப்படுகின்றமையே வேலை இல்லாப் பிரச்சினைக்கு முக்கிய காரணம்'-என்றார்.





(எ-21)

# பனைமரங்களைக் கடத்த முயன்றவர் பொலிஸாரிடம் வசமாகச் சிக்கினார்!

மன்னார், மே 13

தலைமன்னார் பொலிஸ் பிரிவில் இருந்து பேசாலை பகுதிக்குள் சட்ட விரோதமான முறையில் பனை மரங்களைக் கடத்திச் சென்ற ஒருவர் பேசாலை பொலிஸாரிடம் கையும்மெய்யுமாக அகப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

நேற்றுமுன்தினம் நள்ளிரவு பேசாலையைச் சேர்ந்த ஒருவர் டிராக்டர் மூலம் தலைமன்னார் பொலிஸ் பிரிவிலிருந்து பேசாலை பகுதிக்குள் வெட்டப்பட்ட பனை மரங்களைக் கடத்திச் செல்ல முற்பட்டார்.

இந்நிலை யில் அவரை பேசாலை நடுக்குடாவுக்கும் பேசாலைக்கும் இடையில் அந்தப் பகுதி பொலிஸார் கையும் மெய்யுமாகக் கைது செய்தனர்.



பேசாலை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.டீ.எம்.சிறிலுக்கு கிடைக் கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து பேசாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.டீ.எம். சிறிலின் வழிகாட்டலில் பேசாலை சப் இன்ஸ்பெக்டர் பரிசோதகர் சீ.டீ.பிரியந்த தலைமையிலான குழு மேற்படி நபரைக் கைது செய்தது.

அதையடுத்து டிராக்டரிலிருந்த 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 17 அடி நீள முடைய சீவிய 45 பனை மரங்கள் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளன. (எ-112)

## யானைகளைக் கட்டுப்படுத்த சூரியசக்தியில் மின்வேலி அமைப்பு

அம்பாந்தோட்டை, சூரியவெள பிரதேசத்தில் காட்டு யானைகளின் அட்டகாசத்தைத் தவிர்ப்பதற்காக சூரிய சக்தியில் செயற்படும் மின்சார வேலியை இலங்கைக் கடற்படை நிர்மாணித்துள்ளது.


கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுனரத்ன பணிப்புரைக்கு அமைவாக இந்த செயற்திட்டம் இலங்கை கடற்படையின் ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான நிபுணத்துவ பிரிவால் முன்னெடுக்கப்பட்டது.

இந்த மின்சார வேலி நான்கு கிலோமீற்றர் தூரத்துக்கு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படையினரால் தொடர்ச்சியான சமூக நலத்திட்டங்களின் ஒருபகுதியாக முன்னெடுக் கப்பட்ட இந்தத்திட்டம் அந்தப்பகுதியில் நிலவிவரும் காட்டு யானைகள் மற்றும் கிராம வாசிகளிடையே நிலவிவரும் இடர்களைத் தவிர்க்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் காட்டு யானைகளின் அட்டகாசங்களில் இருந்து மனித உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்று கூறப்படுகின்றது.

## 15 குடும்பங்களுக்கு மண்டைதீவில் கோழிக்குஞ்சுகள் விநியோகம்



வடமாகாண விவசாய, கால்நடை அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டின் சுயதொழில் முயற்சி ஊக்குவிப்பு உதவித் திட்டத்தின் கீழ் யாழ்.மண்டைதீவுப் பகுதியில் அன்றாடம் வாழ்வாதாரத்துக்கு பெரும் சிரமப்படும் வறிய நிலையில் உள்ள 15 குடும்பங்களுக்கு தலா 4 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒருமாத கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு வேலணை பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி யூட் தலைமையில் மண்டைதீவு கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

பயனாளிகளுக்கான கோழிக் குஞ்சுகளை வடமாகாணசபை உறுப்பினர் கே. என். விந்தன் கனகரத்தினம் மற்றும் வேலணை கால்நடை திணைக்கள போதனாசிரியர், வேலணை பிரதேச கால் நடை வைத்திய அதிகாரி, கிராம உத்தியோகத்தர்கள் ஆகியோர் இணைந்து வழங்கினர்.


## போராட்டத்தில் ஈடுபட்டுவரும் சுகாதாரத் தொடர்களை சந்தித்துக் கலந்துரையாடினார் சிவசக்தி ஆனந்தன்

வவுனியா, மே 13

வவுனியாவில் நிரந்தர நியமனம் கோரி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சுகாதாரத் தொண்டர்களை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் நேரில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அவர்களைச் சந்தித்து சேவைக் காலம் மற்றும் நியமனம் வழங்குவதில் சுகாதார அமைச்சு கொண்டுள்ள நிலைப்பாடுகள் தொடர்பிலும் அவர் கேட்டறிந்துகொண்டார்.

இதேவேளை, சுகாதாரத் தொண்டர்கள் தமக்கு சேவைக் காலத் தின் அடிப்படையில் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நேற்று 9ஆவது நாளாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



வடக்கில் கடந்த 15 வருடங்களுக்கும் மேலாகப் பணியாற்றிய சுகாதார தொண்டர்களே இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இவ்வாறு தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளஅவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்-

"எமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் வரை நாம் போராட்டத்தைகைவிடப்போவதில்லை.

கஷ்டப் பிரதேசங்களிலும், இக்கட்டான சூழ்நிலைகளிலும் சேவையாற்றிய நாம், நியமனம் தொடர்பில் இதற்கு முன்னர் பல போராட்டங்களை முன்னெடுத்திருந்த போது எமக்கு வழங் கப்பட்ட வாக்குறுதிகள் எவையும் நிறை வேற்றப்படவில்லை. இம் முறை தமக்கு உறுதியான தீர்மானம் வழங்கப்படும் வரை எமது போராட்டம் தொடரும்." என்றார். (எ-100)

'நேஷனல் ஹெரால்ட்' பத்திரிகை விடயம்:

# சோனியாவிடம் விசாரணை நடத்த டில்லி உயர் நீதிமன்றம் அனுமதி!

'நெஷனல் ஹெரால்ட்' பத்திரிகை தொடர்பாக சோனியா காந்தி, ராகுல் காந்தி ஆகியோரிடம் வருமானவரித்துறை அதிகாரிகள் விசாரணை நடத்துவதற்கு டில்லி உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

'நெஷனல் ஹெரால்ட்' பத்திரிகை 1938 ஆம் ஆண்டு, ஜவஹர்லால் நேருவால் தொடங்கப்பட்டது.

'அசோசியேட் ஜேர்னல் லிமிடெட்' என்ற நிறுவனத்தின்கீழ், நெஷனல்ஹெரால்டு என்ற ஆங்கில பத்திரிகையும், குவாமி ஆவாஸ் என்ற உருதுப் பத்திரிகையும், நவ்ஜீவன் என்ற ஹிந்தி பத்திரிகையும் வெளிவந்தன. கடும் நிதி நெருக்கடியால் 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி இந்தப் பத்திரிகை வெளியீடுகள் நிறுத்தப்பட்டன.

இந்த நிலையில், காங்கிரஸ் கட்சியிடம் வாங்கிய, 90 கோடி ரூபா கடனால் திணறிய, அசோசியேட் ஜேர்னல் லிமிடெட் நிறுவனத்தின் பங்குகள், 'யங் இந்தியன் லிமிடெட்' என்ற நிறுவனத்துக்கு மாற்றப்பட்டன.

இதனை அடுத்து, அசோசியேட் ஜேர்னல் நிறுவனத்துக்குச் சொந்தமாக நாடு முழுவதும் உள்ள, 5 ஆயிரம் கோடி ரூபா மதிப்புள்ள சொத்துக்களைப் பறிக்கும் வகையிலேயே இந்த நிறுவன பங்குகள் கைம்மாற்றப்பட்டன எனப் பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்பிரமணியசுவாமி வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கை வருமான வரித்துறை அதிகாரிகளை விசாரிக்க டில்லி பாட்டியாலா நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனை எதிர்த்து டில்லி உயர்நீதிமன்றத்தில் சோனியா காந்தி, ராகுல் காந்தி இருவரும் மனுத்தாக்கல் செய்தனர். இதனை விசாரித்த உயர்நீதிமன்றம், இது தொடர்பாக வருமான வரித்துறை அதிகாரிகள் விசாரணை நடத்த அனுமதி வழங்கியுள்ளது. (ச)

# தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழருக்கு குடியுரிமை வழங்கப்படல் வேண்டும்!

## நாம் தமிழர் கட்சி சீமான் வேண்டுகோள்



திபெத், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் அகதிகளுக்கு வழங்கப்படுகின்றமைபோலவே எல்லாச் சலுகைகளும் ஈழ உறவுகளுக்கும் வழங்கப்பட்டு, அவர்களுக்குக்குடியுரிமை வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய மத்திய, மாநில அரசுகள் முன்வர வேண்டும்.

-இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கேட்டுக் கொண்டுள்ளார்.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு:-

இந்தியாவில் 6 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்கின்ற பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்காளதேசம் முதலான நாடுகளைச் சேர்ந்த அகதிகளுக்கெல்லாம் குடியுரிமை வழங்கும் இந்திய அரசு, 20 ஆண்டுகளுக்கு மேலாக இங்கு வாழ்கின்ற ஈழ உறவுகளுக்கு அடிப்படை உரிமைகளையும், அடிப்படை வசதிகளையும் கூட ஏற்படுத்திக் கொடுக்க மறுக்கிறது.

தமிழகத்துக்கு தஞ்சம் தேடி வந்திருக்கின்ற ஈழத்தமிழ் சொந்தங்கள் இங்கு சந்திக்கும் துன்ப துயரங்கள் எண்ணிலடங்காதவை. இங்கு ஈழத் தமிழில் பேசினால் பயங்கரவாதி என்று முத்திரை குத்தப்படுகிறது. அண்மையில் மண்டபம் முகாமிலுள்ள ஈழத்தமிழர்கள் காவல்துறையினரால் தாக்கப்பட்டமை கண்டனத்துக்குரிய செயலாகும். போரில் உறவுகளை இழந்து, தாய்நிலத்தைப் பிரிந்து, ஆதரவற்றவர்களாய் தமிழகத்துக்கு வந்திருக்கும் ஈழ உறவுகள் மீதான தாக்குதலை மனசாட்சியுள்ள எவராலும் ஏற்க முடியாது.

வந்தாரையெல்லாம் வாழ வைக்கும் நிலத்தில் சொந்த இனத்தவர் அடித்து, உதைத்து தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுகின்றமை சகித்துக்கொள்ள முடியாத பெருங்கொடுமை. அதிகார வர்க்கத்தின் அத்துமீறல்களையும், எளிய மக்கள் மீதான கோரத் தாக்குதல்களையும் இனிமேலும் அனுமதிக்க முடியாது. -என்றுள்ளது. (ச)

# இரட்டை இலைச் சின்னம் விவகாரம்:

## பன்னீர் அணி கூடுதல் ஆவணம் தாக்கல்!

புதுடில்லி,மே 13

இரட்டை இலைச் சின்னத்தைப் பெறுவதற்காக தேர்தல் ஆணையகத்தில் ஓ. பன்னீர் செல்வம் அணியினர் (அ.தி.மு.க. புரட்சித்தலைவி அம்மா) கூடுதல் ஆவணங்களைத் தாக்கல் செய்துள்ளர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே ஓ.பன்னீர் செல்வம் அணி சார்பில் 20 ஆயிரம் பக்கங்கள் கொண்ட பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், நேற்றுக் கூடுதலாக 12 ஆயிரத்து 600 பக்கங்கள் கொண்ட பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழக முதலமைச்சராகவும், அ.தி.மு.க. பொதுச் செயலாளராகவும் இருந்த ஜெயலலிதா மரணம் அடைந்தமையால், அந்தக் கட்சி இரண்டாக உடைந்தது. அ.தி.மு.க. அம்மா, அ.தி.மு.க. புரட்சி தலைவி அம்மா என இரு அணிகளாகக் கட்சி பிளவுபட்டுள்ளது.

இந்நிலையில், அ.தி.மு.க. கட்சி தங்கள் பக்கம்தான் உள்ளது என்பதை தேர்தல் ஆணையத்தில் நிரூபிக்கும் முயற்சியில் இரு அணிகளும் மும்முரமாக ஈடுபட்டுள்ளன. இதற்கிடையில் பிளவுபட்ட அணிகளை இணைப்பதற்காக இரு தரப்பிலும் குழுக்கள் அமைக்கப்பட்டன. ஆனாலும் இரு தரப்பினரும் முரண்பாடான கருத்துகளை கூறி வருகின்றமையால் அணிகள் இணைவதில் தொடர்ந்தும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. (ச)

# 6 தடவைகள் மாரடைப்பு; உயிர் பிழைத்தது குழந்தை!



மும்பை, மே 13

மும்பையில் இதயத்தில் பாதிப்புடன் பிறந்த 4 மாத குழந்தை ஒன்றுக்கு சிகிச்சை அளிக்கும்போது 6 தடவைகள் மாரடைப்பு ஏற்பட்டது. இந்நிலையில், மருத்துவர்களின் பல மணிநேர போராட்டத்துக்குப் பின்னர், அந்தக் குழந்தை அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கல்யாண் பகுதியைச் சேர்ந்த விசாகா மற்றும் வினோத் தம்பதியினருக்கு கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் குழந்தை ஒன்று பிறந்துள்ளது. மருத்துவமனையில் இருந்து வீட்டுக்குச் சென்ற 45 ஆவது நாளில் குழந்தைக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மேற்படி குழந்தையை மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு குழந்தைக்கு பரிசோதனை செய்ததில், இதயப் பாதிப்பு ஏற்பட்டுள்ளமை தெரியவந்தது. இதையடுத்து, அறுவை சிகிச்சை மேற்கொண்டனர். சுமார் 12 மணித்தியாலம் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இந்த அறுவை சிகிச்சையை அடுத்து இதயம் சீரானது. ஆனால் நுரையீரல் செயற்படவில்லை.

தொடர்ந்து குழந்தையின் ரத்தத்தில் ஒட்சிசன் அளவு தொடர்ச்சியாகக் குறைந்து கொண்டே வந்தது. அதனால் நுரையீரல் சரியாக இயங்கவில்லை.இதனால் அந்தக் குழந்தைக்கு 6 முறை மாரடைப்பு ஏற்பட்டது. மருத்துவர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

அதனைத் தொடர்ந்து அந்தக் குழந்தைக்கு மேலும் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. நுரையீரலைச் செயற்பாட்டுக்கு கொண்டுவர வென்டிலேட்டர் பயன்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அந்தக் குழந்தையின் நுரையீரல் சரியாக இயங்கியது. இதனால் மருத்துவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். குழந்தையின் பெற்றோர் அது உயிர் பிழைத்ததைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் விட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# மோடிக்கு எதிராக அவதூறு: 'கூகுள்' மீது வழக்குப் பதிவு!

பிரதமர் நரேந்திர மோடி தொடர்பில் அவதூறான தகவலைத் தெரிவித்துள்ளது என்ற குற்றச்சாட்டில் கூகுள் இணையத் தளத்துக்கு எதிராக உத்தரப் பிரதேசப் பொலிஸ் வழக்குப்பதிவு செய்துள்ளது.

இது தொடர்பில் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் நந்தகிஷோர் என்பவர் ஷாஜகான்பூர் பொலிஸ் நிலையத்தில் கடந்த புதன்கிழமை முறைப்பாடு ஒன்றை அளித்தார்.

முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நான் கடந்த 2015 ஆம் ஆண்டு கூகுள் இணையத்தளத்தில் தேசிய செய்திகளைத் தேடிக் கொண்டிருந்தேன். அப்போது அதில் இடம்பெற்றிருந்த ஒரு பட்டியலில் அவதூறான வகையில் பிரதமர் மோடியைப் பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தக் கருத்து எனக்கும் மற்றவர்களுக்கும் மனக் காயத்தை ஏற்படுத்தியது. எனவே, அவதூறான தகவலுக்காக கூகுள் இணையத் தளத்தின் மீது தகவல் தொழில் நுட்பச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் .

-என்றுள்ளது.

இது தொடர்பாக ஷாஜகான் பூர் பொலிஸ் கண்காணிப்பாளர் கமல் கிஷோர் கூறுகையில்-

'வழக்கறிஞர் நந்தகிஷோரின் முறைப்பாட்டின் அடிப்படையில் தகவல் தொழில் நுட்பச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின் கீழ் கூகுள் இணையதளம் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது'- என்றார். (ச)

# தினகரனின் குரல் பதிவை ஆய்வு செய்வதற்கு டில்லி நீதிமன்றில் பொலிஸார் மனுத் தாக்கல்!

அ.தி.மு.கவின் இரட்டை இலைச் சின்னத்தைப் பெறுவதற்காக தேர்தல் ஆணையகத்துக்கு லஞ்சம் கொடுக்க முயன்ற வழக்கில் கைதான டி.டி.வி. தினகரன் மற்றும் பெங்களூரைச் சேர்ந்த சுகேஷ் சந்திரசேகர் ஆகியோரின் குரல் பதிவுகளை, மத்திய புலனாய்வுத் தடயவியல் மையத்துக்கு அனுப்பி ஆய்வு செய்வதற்கு அனுமதி வழங்கக்கோரி நீதிமன்றத்தில் டில்லி பொலிஸ் குற்றப்பிரிவு மனுத்தாக்கல் செய்துள்ளது.

பொலிஸாரிடம் இருக்கும் தொலைபேசிக் குரல் பதிவுகளின் உண்மைத் தன்மையை கண்டறியவேண்டும். மேலும், அந்தக் குரல் பதிவுகள்டி.டி.வி. தினகரன் மற்றும் சுகேஷ் சந்திரசேகர் ஆகியோருடையனவா என்பதையும் ஆய்வு செய்ய வேண்டும். எனவே, அதனை மத்திய புலனாய்வுத் தடயவியல் சோதனைக்குஅனுப்புவதற்கு அனுமதிக்க வேண்டும் என அந்த மனுவில் கேட்டுக் கொள் எப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த மனுவுக்குப் பதிலளிக்க அவகாசம் அளிக்க வேண்டும் என்று சுகேஷ் சந்திரசேகர், டி.டி.வி. தினகரன் தரப்பில் அவர்களின் வழக்கறிஞர் கோரிக்கை ஒன்றை முன்வைத்தமையை அடுத்து, மனு மீதான விசாரணையை எதிர்வரும் திங்கட்கிழமைக்கு சிறப்பு நீதிபதி பூணம் சௌத்ரி ஒத்திவைத்துள்ளார். (ச)

## ஜெயலலிதாவின் புடைவைகளோடு சசி!

ஜெயலலிதா நினைவாக வைத்துக் கொள்ள அவர் அணிந்த பச்சை நிற புடைவைகளை சசிகலாவுக்கு, இளவரசியின் மகன் விவேக் எடுத்துக் கொண்டு போய் கொடுத்துள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

சொத்துக் குவிப்பு வழக்கில் 4 வருடங்கள் சிறைத்தண்டனை பெற்று, பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள சசிகலா, சிறையில் சசிகலாவை வந்து அடிக்கடி பார்க்கும் விவேக்கிடம் ஜெயலலிதாவின் புடைவைகளை எடுத்து வருமாறு கூறியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# தென்கொரிய ஜனாதிபதி மாளிகையை அழிப்பது போல் வெளிவந்த புகைப்படம்


## உலக நாடுகளிடையே பதற்றம்


சியோல், மே 13


தென்கொரியாவின் ஜனாதிபதி மாளிகையை அழிப்பது போன்ற புகைப் படத்தை பிரபல ஆங்கில நாளிதழ் ஒன்று வெளியிட்டுள்ளது. இதனால் உலக நாடுகளிடையே பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

வடகொரியா தொடர்ந்து அணு குண்டு மற்றும் ஏவுகணைச் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றது. வடகொரியாவின் இந்தச் செயற்பாடு உலகநாடுகளை அச்சுறுத்தும் வகையில் உள்ளது.

வடகொரியாவின் இந்த செயலால் அமெரிக்காவுக்கும், வடகொரியாவுக்கும் போர் ஏற்படும் நிலை ஏற்பட்டது. அப்போது வடகொரியா அமெரிக்காவின் வெள்ளை மாளிகையைத் தாக்குவது போன்ற காணொலியை வெளியிட்டு







பரபரப்பை ஏற்படுத்தியது.

அதைத் தொடர்ந்து வடகொரியாவின் இந்தச் செயலுக்கு ஜனாதிபதி கிங்-ஜோங்-உன் தான் காரணம். இதனால் அவரைக் கொலை செய்து விட்டால் பிரச்சினை தீர்ந்து விடும் என்று எண்ணி, அமெரிக்காவும்- தென் கொரியாவும் இணைந்து சதித் திட்டம் தீட்டி வருகின்றன என்று தகவல்கள் வெளியாகின.

இந்த நிலையில் தென்கொரியாவின் ஜனாதிபதி மாளிகையை முற்றிலும் அழிப்பது போன்ற புகைப்படம் வெளியாகியுள்ளது. இதை பிரபல ஆங்கில நாளிதழ் வெளியிட்டுள்ளது.

அந்தப் புகைப்படம் செய்மதியில் இருந்து எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது வடகொரியாவின் செயற்பாடாக இருக்கக்கூடும் என்று கூறப்படுகிறது.

கடந்த வருடம் வடகொரிய இராணுவ வீரர்கள் அதிரடிப் பயிற்சியில் ஈடுபட்டனர். அப்போது அவர்கள் தென் கொரியாவின் 'புளூ ஹவுஸ்' என்று அழைக்கப்படும் பகுதியைத் தாக்குவது போன்ற புகைப் படம் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சிரியப்படையின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் 'டப்கா' நகர்

ஐ.எஸ். தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த சிரியாவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த டப்கா நகரை குர்திஷ் படையினர் மற்றும் அரபு படையினரின் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.எஸ். தீவிரவாதிகளின் முக்கிய பிடிமானமாக விளங்கிய டப்கா நகரும் அதற்கு அருகிலுள்ள சிரியாவின் மிகப்பெரிய அணையும் நேற்று முன்தினம் முழுமையாகக் கைப்பற்றப் பட்டன என்று சிரிய படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த வெற்றியை சிரிய படையினர் ஆடல் பாடல்களுடன் கொண்டாடி வருகின்றனர்.

அமெரிக்கா தலைமையிலான சிறப்புக் கூட்டணிப் படையின் விமானத் தாக்குதல்களுடன் ராக்கா நகருக்குள் நுழைந்த சிரியப்படை டப்கா நகரை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது.

டப்கா நகர் சிரியாவில் இஸ்லாமிய அரசு நடவடிக்கைகளின் தளமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அமெ.சி.ஐ.ஏ.அதிகாரி பதவி நீக்கம்: துணை சட்டமா அதிபர் ராஜிநாமா!

வொஷிங்டன், மே 13

அமெரிக்காவின் மத்திய புலனாய்வுப் பிரிவின் (சி.ஐ.ஏ) தலைமை அதிகாரியை திடீரென பதவியிலிருந்து நீக்கிய சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் கருதப்படும் துணை சட்டமா அதிபர் ரொட் ரொஷென்ஸ்டீன் பதவி விலகியுள்ளார்.

எவ்.பி.ஐ. தலைமை அதிகாரியை பதவியிலிருந்து நீக்கும் உத்தரவை ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விடுப்பதற்கு முன்னர் துணை சட்டமா அதிபர் அவரை பதவி விலகுமாறு அச்சுறுத்தியுள்ளார் என்று குற்றம்சாட்டப்



பட்டுள்ளது.

எனினும் இந்த அச்சுறுத்தல் தொடர்பில் தாம் எதனையும் அறிந்திருக்கவில்லை என்று வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் எவ்.பி.ஐ. தலைமை அதிகாரியான ஜேம்ஸ் கோமேயை நேற்று முன்தினம் டொனால்ட் ட்ரம்ப் அதிரடியாக பதவியிலிருந்து நீக்கியிருந்தார்.

கோமே பெரிய தவறை இழைத்தமையை அடுத்தே அவரைப் பதவியிலிருந்து நீக்கத் தாம் தீர்மானித்தார் என பதவி நீக்கம் தொடர்பில் ட்ரம்ப் வெளியிட்ட உத்தரவுக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் கோமே பதவி விலகுவதற்கு முன்னர் அவரைப் பதவியை ராஜிநாமா செய்யுமாறு ட்ரம்பின் துணை சட்டமா அதிபர் ரொட் அச்சுறுத்தினார் என்று வெளியாகியுள்ள தகவலால் புதிய சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

## வடகொரியாவை கண்காணிக்க அமெ. சிறப்புப் பிரிவு

வடகொரியாவை கண்காணிப்பதற்காக அமெரிக்கா உளவு அமைப்பான சி.ஐ.ஏயில் சிறப்புப் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாடுகளின் எதிர்ப்பையும் மீறி வடகொரியா அணு ஆயுத சோதனை மற்றும் ஏவுகணை சோதனைகளை நடத்திவருகிறது.

இந்த நிலையில் வடகொரியாவைக் கண்காணிப்பதற்காக அமெரிக்காவின் உளவு அமைப்பான சி.ஐ.ஏ.யில் சிறப்புப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கும், அதன் நட்பு நாடுகளுக்கும் வடகொரியாவால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. வடகொரியாவைக் கண்காணிக்கவே தனிப்படை உருவாக்கப் பட்டுள்ளது எனவும் சி.ஐ.ஏ. இயக்குநர் மைக் பாம்பே தெரிவித்துள்ளார்.

## தண்டவாளத்தில் விழுந்த வயோதிபப் பெண்ணை மீட்க 100 தொன் எடையுடைய ரயிலைத் தள்ளிய பயணிகள்



பீஜிங், மே 13

சீனாவில் 100 தொன் ரயிலை தள்ளி தண்டவாளத்தில் தவறி விழுந்த வயோதிபப் பெண்ணைப் பயணிகள் காப்பாற்றியுள்ளனர். இவ்வாறு அந்தப் பெண் உயிருடன் மீட்கப் பட்டமையை அனைவரும் பாராட்டியுள்ளனர்.

சீனாவில் குவாங்ஷு மாகாணத்தில் சுரங்க ரயில் ஒன்று ரயில் நிலையம் ஒன்றில் நின்றது. அப்போது அதில் இருந்து இறங்கிய 72 வயது வயோதிபப் பெண் ஒருவர் தவறி விழுந்தார்.

அவர் ரயிலுக்கும், பிளாட் பாரத்துக்கும் இடையில் சிக்கிக் கொண்டார். இதனால் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டன. உடனே ரயில் பயணிகள் விரைந்து சென்று ரயிலைப் புறப்படாமல் தடுத்து நிறுத்தினர்.

பின்னர் அந்த வயோதிபப் பெண்ணை வெளியே இழுத்து தூக்க முயன்றனர். ஆனால் முடியவில்லை. எனவே ரயில் பயணிகள் அனைவரும் பெட்டிகளில் இருந்து கீழே இறங்கினர்.

பெண் சிக்கியிருந்த ரயில் பெட்டியை அனைவரும் ஒன்று சேர்ந்து பக்க வாட்டில் கீழே தள்ளிச் சாய்த்தனர். அந்த ரயில் பெட்டி 100 தொன் எடை உடையது. ஒரு வழியாக ரயில் பெட்டியைச் சாய்த்த பின் சிக்கிக் கிடந்த பெண்ணை பத்திரமாக உயிருடன் மீட்டனர்.

அது கைபேசியில் காணொலியாக எடுக்கப்பட்டு பின்னர் சமூக வலைத் தளங்களில் பரவியது. அதை ஏராளமானவர்கள் பார்த்து ஆச்சரியப்பட்டனர். பெண் உயிருடன் மீட்கப்பட்டமையைப் பாராட்டினர்.

## ஐக்கிய அரபு எமிரேட்டுக்கு ஏவுகணைகளை வழங்க இணங்கியது அமெரிக்கா

ஐக்கிய அரபு எமிரேட்டுக்கு 200 கோடி அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான ஏவுகணைகளை விற்பனை செய்ய அமெரிக்கா ஒப்புதல் வழங்குவதாக பென்டகன் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் பென்டகனின் அறிக்கையில், ஐக்கிய அரபு எமிரேட் அரசு சார்பில் 60 பேட்ரியாட் ஏவுகணைகள், 100 பேட்ரியாட் வழிகாட்டு அதிநவீன ஏவுகணைகள் மற்றும் இதர இராணுவ உபகரணங்கள் உள்ளிட்டவை அமெரிக்காவிடம் கோரப்பட்டிருந்தன-என்றுள்ளது.

இதேவேளை, அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட் இடையேயான ஒப்பந்தம் வெளிநாட்டு உறவு, தேசிய பாதுகாப்பு உள்ளிட்டவற்றை மேம்படுத்த வழி செய்வதாக அமையும் என்று தெரிவிக்கப்படுகின்றது.


காலைக்கதிர்


## ஐ.சி.சி சம்பியன் கிண்ணத் தொடர்:

# ஓய்விலிருந்த வீரர்கள் அணிக்குத் திரும்பினர்!







கொழும்பு, மே 12

சர்வதேச கிரிக்கெட் சபை பலத்த எதிர்பார்ப்புகளுடன் இங்கிலாந்தில் எதிர்வரும் ஜூன் 1 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஐ.சி.சி சம்பியன் கிண்ணத்தில் பங்குகொள்ளும் 8 நாடுகளின் அணியை நேற்று முன்தினம் ஊர்ஜிதம் செய்துள்ளது.

இத்தொடரில் விளையாட ஒவ்வொரு நாடுகளிலும், ஓய்விலிருந்த சில வீரர்கள் அணிக்குத் திரும்பி இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இதற்கு எடுத்துக் காட்டாக, தனது ஆறாவது வெற்றிகரமான சம்பியன் கிண்ணத் தொடரில் விளையாட பாகிஸ்தான் அணியின் சொஹைப் மலிக் தேர்வு செய்யப்பட்டுள்ளார் என்பதைக் குறிப்பிட முடியும்.

இதுவரையில், ஏனைய எட்டு வீரர்கள் மாத்திரமே சம்பியன் கிண்ணத் தொடரில் ஆறு தடவைகள் வரையில் பங்கேற்றுள்ளனர். ரிக்கி பொன்டிங் (ஆஸ்திரேலியா), ராஹுல் ட்ராவிட் (இந்தியா), டேனியல் வெட்டோரி (நியூஸிலாந்து), மார்க் பவுச்சர் மற்றும் ஜெக் கல்லிஸ் (தென்னாபிரிக்கா), சனத் ஜயசூரிய, மஹேல ஜயவர்தன மற்றும் குமார் சங்கக்கார (இலங்கை) ஆகியவர்களே அந்த வீரர்களாவர்.

சொஹைப் மலிக் போன்று, இந்திய அணியின் யுவராஜ் சிங்கும் கிட்டத்தட்ட 11 வருடங்களின் பின்னர் இத்தொடரில் பங்கேற்கின்றார்.

கடந்த 2002ஆம் ஆண்டு நடைபெற்ற சம்பியன்ஸ் கிண்ணத் தொடரிலிருந்து 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற தொடர் வரை யுவராஜ் தொடராக பங்கேற்றிருந்தார். அதற்கு பின்னைய வருடங்களில் இடம்பெற்ற தொடர்களில் விளையாடும் சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்திருக்கவில்லை.

ஆஸ்திரேலிய அணியின் தலைவரான ஸ்டீவ் ஸ்மித்திற்கு நடைபெறப்போகும் தொடர் கன்னி சம்பியன்ஸ் கிண்ணமாக அமையவுள்ளது. ஸ்மித்தோடு சேர்த்து இறுதியாக 2013 இல் இடம்பெற்ற சம்பியன்ஸ் கிண்ண தொடரில் விளையாடியிருந்த கிளேன் மக்ஸ்வெல், மிச்செல் ஸ்டார்க், மெத்திவ் வேட் மற்றும் டேவிட் வோர்னர் ஆகியோரும் ஆஸ்திரேலிய அணியில் இடம்பிடித்துள்ளனர்.

இந்தத் தொடர் மூலமாக மக்ஸ்வெல் ஒரு நாள் போட்டிகளில் 2000 ஓட்டங்களை (43 ஓட்டங்களே குறைவாக இருப்பதால்) வார்னர் 4 ஆயிரம் ஓட்டங்களையும் (54 ஓட்டங்களே குறைவாக இருப்பதால்) எட்டுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஐ.சி.சி உலகக் கிண்ணத்தில் காலிறுதிப் போட்டிக்கு தெரிவாகியிருந்த பங்களாதேஷ் அணியில், 2006 ஆம் ஆண்டிற்கான சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இடம்பிடித்திருந்த மஷ்ரபி மொர்தஸா மற்றும் சகீப் அல் ஹஸன் ஆகியோர் இடம்பிடித்திருந்தனர். இவர்கள் இருவரும் இம்முறைக்கான தொடரிலும் இடம்பிடித்துள்ளனர்.

பங்களாதேஷ் அணிக்கு மொர்தஸா தலைமை தாங்குவார் என்பதுடன், சகலதுறை ஆட்டக்காரர்கள் வரிசையில் உலகில் முதல் இடத்தைப் பெற்றிருக்கும் வீரர் என்கிற பெருமையோடு சகீப் அல் ஹஸன் இத்தொடரில் ஆட விருக்கின்றார்.

இதுவரை இரண்டு தடவைகள் சம்பியன்ஸ் கிண்ணத்தை நடத்திய (2004 - 2013) நாடாக காணப்பட்டிருக்கும் இங்கிலாந்து அணியில், கடந்த சம்பியன் கிண்ணத் தொடரில் ஆடியிருந்த வீரர்களான ஜொன்னி பேயிர்ஸ்டோவ், ஜோஸ் பட்லர், இயோன் மோர்கன், ஜோ ரூட் மற்றும் கிரிஸ் வோக்ஸ் ஆகியோர் இந்த வருடத்திற்கான தொடரிலும் இடம் பிடித்திருக்கின்றனர்.

இத்தொடரின், நடப்புச் சம்பியனாக காணப்படும் இந்திய அணியில் கடந்த தொடரில் விளையாடியிருந்த எட்டு வீரர்கள் நீடிக்கின்றனர். சிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான விராட் கோஹ்லி ஐ.சி.சி நடத்தும் பெரிய தொடர் ஒன்றில் இந்திய அணியை முதற்தடவையாக தலைமை தாங்குகின்றார்.

இந்திய அணி ரவிச்சந்திரன் அஸ்வின், சிக்கர் தவான், மஹேந்திர சிங் டோனி, ரவிந்திர ஜடேஜா, புவனேஸ்வர் குமார், ரோஹித் சர்மா மற்றும் உமேஷ் யாதவ் ஆகியோருடன் இத்தொடரில் களமிறங்கவுள்ளது.

இந்திய அணி போன்று கடந்த தொடரில் விளையாடியிருந்த ஏழு வீரர்களுடன் நியூஸிலாந்து அணியானது இம்முறைக்கான கிண்ணத்திற்காக மோத விருக்கின்றது.

ட்ரென்ட் போல்ட், மார்ட்டின் குப்டில், மிச்செல் மெக்லெனகன், லூக் ரோன்ச்சி, ரோஸ் டெய்லர், டிம் சௌத்தி மற்றும் அணித்தலைவர் கேன் வில்லியம்சன் ஆகிய அந்த ஏழு வீரர்களும் அணிக்கு இம்முறையும் பலம் சேர்ப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் டெய்லர் மற்றும் குப்டில் ஆகியோர் 2009 ஆம் ஆண்டு சம்பியன் கிண்ண இறுதிப்போட்டியில் ஆடியிருந்த நியூஸிலாந்து அணியில் காணப்பட்ட வீரர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் அணியின் தலைவரான சர்ப்ராஸ் அஹமட் இவ்வருட சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் மூலம் முதல் தடவையாக இத் தொடரில் விளையாடுகின்றார். இவருடன் சேர்த்து பாகிஸ்தான் அணி மேலும் ஒன்பது புதிய வீரர்களுடன் கிண்ணத்திற்காக பலப்பரீட்சை நடத்த உள்ளது. பாகிஸ்தான் அணியில் இடம்பிடித்துள்ள மொஹமட் ஹபீசுக்கு இது மூன்றாவது தொடராகும்.

அதேபோன்று 2013 ஆம் ஆண்டின் தொடரில் ஆடியிருந்த ஜுனைட் கான், உமர் அக்மல் மற்றும் வஹாப் ரியாஸ் ஆகியோர் இத்தொடரிலும் தொடர்ந்து ஆடவுள்ளனர்.

2009 ஆம் ஆண்டின் தொடரில் பங்கேற்றிருந்த மொஹமட் அமீர் மீண்டும் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரொன்றில் விளையாடும் சந்தர்ப்பத்தை பெற்றிருக்கின்றார்.

ஒரு நாள் தரவரிசையில் முதல் இடத்திலுள்ள தென்னாபிரிக்க அணி கடந்த தொடரில், விளையாடியிருந்த ஏழு வீரர்களுடன் இம்முறைக்கான தொடரிலும் களம் காணவுள்ளது.

அவ்வீரர்களில் ஏ.பி.டி வில்லியர்ஸ் தென்னாபிரிக்காவின் தலைவராக உள்ளார். ஹஷிம் அம்லா, பர்ஹான் பெஹர்டீன், ஜே.பி டுமினி, டு ப்லெசிஸ், டேவிட் மில்லர் மற்றும் மோர்னே மோர்க்கல் ஆகியோர் அவ்வணிக்கு மேலதிக வலுவினைச் சேர்க்கக் காத்திருக்கின்றனர்.

மேலும், 2013 ஆம் ஆண்டு தொடரில் ஆடியிருந்த ஆறு வீரர்களான அணித்தலைவர் அஞ்செலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால், நுவான் குலசேகர, லசித் மலிங்க, குசல் பெரேரா மற்றும் திசர பெரேரா ஆகியோருடன் இலங்கை அணி இவ்வருட சம்பியன்ஸ் கிண்ணத்தில் களமிறங்கிப் போராடவுள்ளது.

நான்காவது தடவையாக சம்பியன் கிண்ணத்தில் பங்கேற்கும் இலங்கையின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கவிற்கு, ஒரு நாள் போட்டிகளில் 300 விக்கெட்டுக்களை சாய்க்க இன்னும் ஒன்பது விக்கெட்டுக்கள் மாத்திரமே தேவையாக உள்ளன.

மலிங்க ஒன்பது விக்கெட்டுகளை கைப்பற்றி இச்சாதனையை செய்வாராயின் உலகில் இச்சாதனையை புரிந்த 13 ஆவது வீராக மாறுவதோடு, இலங்கை சார்பான நான்காவது வீரராக மாறுவார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இலங்கை அணியில்முத்தையா முரளிதரன் (534 விக்கெட்டுகள்), சமிந்தவாஸ் (400 விக்கெட்டுகள்) மற்றும் சனத் ஜயசூரிய (323 விக்கெட்டுகள்) ஆகிய வீரர்களே இந்தச் சாதனையை முன்னர் நிலை நாட்டியிருந்தனர்.


# மாட்ரிட் ஓபன் டென்னிஸ்: காலிறுதியில் ஜோகோவிச்!

மாட்ரிட், மே 13

மாட்ரிட் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டியின் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டத்தில் ஜோகோவிச் ஸ்பெயின் வீரர் பெலிசியானோ லோபெஸ்ஸை தோற்கடித்து காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மாட்ரிட் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி ஸ்பெயினில் இடம்பெற்று வருகிறது.

இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 3 ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் உலக தரவரிசையில் 2 ஆவது இடத்தில் இருக்கும் ஜோகோவிச் (செர்பியா) 6-4, 7-5 என்ற



நேர்செட்டில் ஸ்பெயின் வீரர் பெலிசியானோ லோபெஸ்ஸை தோற்கடித்து காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மற்றொர் ஆட்டத்தில் ஜப்பான் வீரர் நிஷிகோரி 6-4, 6-3 என்ற நேர் செட்டில் ஸ்பெயின் வீரர் டேவிட் பெரரை தோற்கடித்து காலிறுதிக்குள் நுழைந்துள்ளார்.

இன்னொர் ஆட்டத்தில் பெல்ஜியம் வீரர் டேவிட் கோபின் 6-4, 6-2 என்ற நேர்செட்டில் கனடாவின் மிலோஸ் ராவ்னிச்சை வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பஞ்சாப்பின் சிக்ஸர் மழையில் வீழ்ந்தது மும்பை இந்தியன்ஸ்!



மும்பை, மே 13

10 ஆவது ஐ.பி.எல். தொடரில் சிக்ஸர் மழை பொழிந்த போட்டியாக நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டம் அமைந்திருந்தது.

மும்பை வான்கடே மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் மற்றும் கிங்ஸ் லெவன் பஞ்சாப் ஆகிய அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

அனைவரதும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் இடம் பெற்ற இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி, முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக மார்ட்டின் குப்தில், சகா ஆகியோர் களம் இறங்கினர்.

இருவரும் ஆரம்பம் முதலே அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர். குப்தில் 18 பந்துகளில் 36 ஓட்டங்கள் குவித்து ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த மக்ஸ்வெல் அசுர வேகத்தில் ஓட்டங்களை குவித்தார். அவர் 21 பந்துகளில் இரண்டு பவுண்டரிகள், 5 சிக்ஸர்களுடன் 47 ஓட்டங்களைக் குவித்தார்.

ஒருபுறம் முக்கியமான இரண்டு விக்கெட்டுக்கள் வீழ்ந்தாலும் மறுமுனையில் சகா தொடர்ந்து அதிரடி காட்டினார். அவருக்குத் துணையாக ஷோன் மார்ஷ் 16 பந்தில் 25 ஓட்டங்களையும், அக்சர் பட்டேல் ஆட்டமிழக்காமல் 13 பந்துகளில் 19 ஓட்டங்களையும் சேர்த்தனர்.

சகா 55 பந்துகளில் 11 பவுண்டரிகள் மற்றும் 3 சிக்ஸர்களுடன் இறுதிவரை ஆட்டமிழப்பின்றி 93 ஓட்டங்களைக் குவித்தார். இதன் காரணமாக கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 20 ஓவர் நிறைவில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 230 ஓட்டங்களைக் குவித்தது. மும்பை அணி சார்பில் மெக்கிளெனகன் 4 ஓவரில் 54 ஓட்டங்களை விட்டுக் கொடுத்தார்.

இதனைத் தொடர்ந்து 231 என்ற கடின இலக்கை துரத்திய மும்பை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான சிம்மன்ஸ் மற்றும் பி.ஏ. படேல் ஜோடி இணைந்து அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

சிம்மன்ஸ் 32 பந்துகளில் 59 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, பி.ஏ. படேல் 23 பந்துகளில் 38 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார்.

இதனைத் தொடர்ந்து களமிறங்கிய ராணா 12 ஓட்டங்களுடனும், ரோகித் ஷர்மா 5 ஓட்டங்கள் எடுத்தும் ஆட்டமிழக்க, பொல்லார்ட், ஹர்பஜன் ஆகியோர் இறுதி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

கடைசி ஓவரில் 16 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் பொல்லார்ட் ஆட்டத்தைத் தொடர்ந்தார்.

கடைசி ஓவரின் முதல் மூன்று பந்துகளில் ஒரு சிக்ஸர் மட்டும் விளாசிய பொல்லார்ட், அடுத்தடுத்த பந்துகளில் ஓட்டங்களை குவிக்க தடுமாறினார். இதன் காரணமாக கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 'பிளே ஓவ்' சுற்றுக்கான வாய்ப்பை கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி அதிகரித்துக் கொண்டாலும். அடுத்த போட்டியிலும் வெற்றிபெற வேண்டிய இக்கட்டான சூழல் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மே.தீவுகளுக்கு எதிரான டெஸ்ட்: பாகிஸ்தான் வீரர் அசார் அலி சதம்!



டோமினிகா, மே 13

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியின் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டத்தில் அசார் அலி 122 ஓட்டங்கள் எடுத்து சதம் கடந்துள்ளார்.

பாகிஸ்தான் - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான 3 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி டோமினிகாவில் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகியது. டெஸ்ட் தொடர் யாருக்கு என்பதை நிர்ணயிக்கும் இந்தப் போட்டியில் முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி முதல் நாள் மதிய உணவு இடைவேளையின் போது ஒரு விக்கெட் இழப்புக்கு 70 ஓட்டங்கள் எடுத்து இருந்தது.

இடைவேளையின் போது மழை பெய்ததால் ஆட்டம் சிறிது நேரம் பாதிக்கப்பட்டது.

பின்னர் தொடர்ந்து ஆடிய பாகிஸ்தான் அணி, முதல் நாள் ஆட்டம் முடிவில் முதல் இன்னிங்ஸில் 69 ஓவர்களில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 169 ஓட்டங்களை எடுத்தது.

ஷான் மசூத் 9 ஓட்டங்களும், பாபர் அசாம் 55 ஓட்டங்களுடன் அடுத்தடுத்து ஆட்டம் இழந்தனர்.

தொடக்க ஆட்டக்காரர் அசார் அலி 85 ஓட்டங்களுடனும், யூனிஸ்கான் 10 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்றுமுன்தினம் 2 ஆவது நாள் ஆட்டம் இடம் பெற்றது. தொடர்ந்து ஆடிய யூனிஸ்கான் 18 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார். இதனை அடுத்து அணித் தலைவர் மிஸ்பா உல்-ஹக், அசார் அலியுடன் இணைந்தார். நிலைத்து நின்று ஆடிய அசார் அலி சதம் அடித்தார். அவர் அடித்த 14 ஆவது சதம் இதுவாகும்.

நேற்றுமுன்தினம் மதிய உணவு இடைவேளையின் போது பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 227 ஓட்டங்கள் எடுத்து இருந்தது. அசார் அலி 122 ஓட்டங்களுடனும், மிஸ்பா உல்-ஹக் 18 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

தொடர்ந்து விளையாடிய பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 376 ஓட்டங்களைப் பெற்றது.

# ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டம்: ரியல் மாட்ரிட் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி!

மாட்ரிட், மே 13

சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டத் தொடரின் அரையிறுதியில் 4:2 என அத்லெடிகோ மாட்ரிட் அணியை தோற்கடித்து ரியல் மாட்ரிட் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

ஐரோப்பிய உதைபந்து 'கிளப்' அணிகள் பங்கேற்கும் சம்பியன்ஸ் லீக் தொடர் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

ஸ்பெயினில் உள்ள மாட்ரிட் நகரில் இடம் பெற்ற அரையிறுதிக்கான 2 ஆவது சுற்றுப் போட்டியில், ஸ்பெயினை சேர்ந்த ரியல் மாட்ரிட், அத்லெடிகோ மாட்ரிட் அணிகள் மோதின.

இதில் அபாரமாக ஆடிய அத்லெடிகோ மாட்ரிட் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அத்லெடிகோ அணி சார்பில் சால் (12 ஆவது நிமிடம்), கிரீஸ்மன் (16 ஆவது நிமிடம்) தலா ஒரு கோல் அடித்தனர். ரியல் மாட்ரிட் அணிக்கு இஸ்கோ (42 ஆவது நிமிடம்) ஆறுதல் தந்தார்.

முன்னதாக நடந்த அரையிறுதிக்கான முதல் சுற்றில், ரியல் மாட்ரிட் அணி



3:0 என வெற்றி பெற்றிருந்தது. இதனையடுத்து ரியல் மாட்ரிட் அணி 4:2 என்ற (3:0, 1:2) கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இதன்மூலம் சம்பியன்ஸ் லீக் தொடரில் ரியல் மாட்ரிட் அணி, 15 ஆவது தடவையாக இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

முன்னதாக விளையாடிய 14 இறுதிப் போட்டிகளில், 11 முறை வெற்றி பெற்று கிண்ணத்தை வென்றது. மூன்று முறை தோல்வி அடைந்து இரண்டாவது இடம் பிடித்தது.

**ஜுவென்டஸ் அபாரம்:**

மற்றோர் அரையிறுதியில் இத்தாலியின் ஜுவென்டஸ் அணி 4:1 (2:0, 2:1) என்ற கணக்கில் பிரான்ஸின் மொனாகோ அணியை தோற்கடித்து, 9 ஆவது முறையாக இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

முன்னதாக விளையாடிய 8 இறுதிப் போட்டிகளில், இரண்டு தடவைகள் வெற்றி பெற்று கிண்ணத்தை வென்றது. ஆறு தடவைகள் தோல்வி அடைந்து இரண்டாவது இடம் பிடித்தது.

அடுத்த மாதம் 10 ஆம் திகதி இங்கிலாந்தின் கார்டிப் நகரில் நடக்கவுள்ள இறுதிப் போட்டியில் 'நடப்பு சம்பியன்' ரியல் மாட்ரிட், ஜுவென்டஸ் அணிகள் மோதுகின்றன.

காலைக்கதிர்



## டிக்கோயா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று மாடிகளைக் கொண்ட இந்த மருத்துவமனை 150 கட்டில்களைக் கொண்ட விடுதித் தொகுதி, வைத்திய உபகரணப் பிரிவு, வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு, விசேட வைத்திய நிபுணர்களின் சிகிச்சைப் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, உரிய உபகரணங்களுடன் கூடிய மகப்பேற்று அறை மற்றும் மகப்பேற்றுப் பிரிவு, தீவிர சிகிச்சைப் பிரிவு, இரண்டுசத்திர சிகிச்சைக் கூடங்கள்என்பவற்றைக்கொண்டதாக அமைந்துள்ளது.

மேலும் இரத்த வங்கி, தீயணைப்புஉபகரணக்கட்டமைப்பு மற்றும் இரண்டு உத்தியோக பூர்வ விடுதிகள் என்பவற்றோடு ஆதார மருத்துவமனைக்குரிய அனைத்து வசதிகளையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும்பிரதமர்ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் அழைப்பில் இந்தியப் பிரதமரினால் புதிய கட்டடத் தொகுதி மக்களிடம் கையளிக்கப்பட்டது.

இதன் பின்னர் ஹட்டன் நோர்வூட் விளையாட்டரங்கில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றிய ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேன, சிங்கள, தமிழ், முஸ்லிம் கள்ஆகிய அனைத்து மக்களினதும்பிரச்சினைகளும் சமூக சமத்துவத்துடன் தீர்க்கப்படல் வேண்டும் எனத் தமது அரசு ஏற்றுக் கொண்டுள்ளது என்று தெரிவித்தார்.

தேசிய சமாதானத்தைக் கட்டியெழுப்பி நல்லிணக்கத்தைப் பலப்படுத்துதல் அரசின் முக்கிய பணியாகும் என்பதுடன், இதன்பொருட்டுதமது அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது எனத் தெரிவித்த ஜனாதிபதி, சகல இன மக்களுக்கும்சமூகசமத்துவத்தைவழங்கி தேசியநல்லிணக்கத்தைப்பலப்படுத்தி உலகில் சிறந்த நாடாக எமதுதாய்நாட்டைமுன்னோக்கி கொண்டு செல்வதே தற்போதைய அரசின் குறிக்கோளாகும். – என்றும் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் உரையாற்றினார்.

பிரதமர்ரணில்விக்கிரமசிங்க, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, அமைச்சர்களான அர்ஜுன ரணதுங்க, பீ.திகாம்பரம், மனோகணேசன்ஆகியோரும், இராஜாங்க அமைச்சர் வீ. இராதாகிருஷ்ணன், முன்னாள் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் ஆகியோர் உள்ளிட்ட மாகாணத்தின் மக்கள் பிரதிநிதிகள் பலரும் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## சம்பந்தனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் நரேந்திர மோடி.

"எல்லா விடயங்களிலும் நீங்கள்தமிழ்மக்களுக்குவழங்கும் பொறுப்பான தலைமைத்துவத்தையும் அணுகுமுறையையும் நாம் பெரிதும் பாராட்டி மெச்சுகிறோம்.வரவேற்கிறோம்.

"குறிப்பாக அரசமைப்புதயாரிப்புத் தொடர்பான விடயங்களில் உங்களின் அணுகுமுறை, அரசியல்மேதாவிசாலம் போன்றவற்றை நாம் பாராட்டுகிறோம்.

"உங்கள் உடல் நிலையைச் சற்றுக் கவனித்துக் கொள்ளுங்கள். அதுவும் மிகவும் முக்கியமானது." -என்றுமிகவும்அன்னியோன்னியமாகக் கூறினார் பிரதமர் மோடி.

நேற்றுக் கட்டுநாயக்காவில் தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர்களைச் சந்தித்த சமயமே எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனை இவ்வளவு நெருக்கமாக உரையாடி, அவர் தொடர்பில் தமது கரிசனையை வெளிப்படுத்தினார் பிரதமர் மோடி. (உ)

## மோடியுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில், அது தொடர்பாக முதலமைச்சரிடம் கருத்துக் கேட்டபோது தான் வேண்டப்படாத ஆள்தானே என வடக்கு முதலமைச்சர் சிரித்தவாறு தெரிவித்தார்.

இலங்கைக்கு வருகை தந்த இந்தியப்பிரதமர்நரேந்திரமோடியுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று மாலை கட்டுநாயக்கா விமான நிலை யத்தில் சந்தித்துக் கலந்துரையாடியது.

இந்தச்சந்திப்பில்கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமானஇரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், மாவை. சேனாதிராசா, த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆனால், இச்சந்திப்புக்கு வடக்கு முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

சர்வதேசநீர்மையத்தின் அதிகாரிகளுடனானசந்திப்புஒன்றுநேற்று வடமாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தச்சந்திப்புமுடிவில், இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புநடத்திய சந்திப்புதொடர்பாககருத்துக்கேட்டபோது அவர் மேற்கண்டவாறுபதில்கூறினார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவிக்கையில் –

இந்தியபிரதமருடன்சந்திப்பு இடம்பெறவில்லை. கைலாகு மட்டுமேகொடுக்கப்பட்டது. இருப்பினும் சென்றமுறை வந்த போது என்னைச் சந்தித்த ஞாபகம் உள்ளது என இந்திய பிரதமர் தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜெய்சங்கரிடம் வடமாகாணத்தில் மேலும் அதிகமான காணிகளை மக்களிடம் இருந்து பெறாமல் தற்போது இருக்கும்விமானநிலையத்தை பிராந்திய ரீதியில் வர்த்தகவிமான நிலையமாக மாற்றியமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என நான் கூறினேன். –எனவடக்குமுதலமைச்சர் தெரிவித்தார்.

மேலும், காங்கேசன்துறை துறைமுகம் தொடர்பாகவும் தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடிக்கான கப்பல் சேவை ஆரம்பிப்பது தொடர்பாகவும்தான்எடுத்துக்கூறினார் எனவும்முதலமைச்சர்தெரிவித்தார். (ம)

## காங்கேசன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரோந்துப்பணியில்ஈடுபட்டிருந்த கடற் படையினர் சந்தேகத்திற்கிடமானமுறையில்மிதந்து வந்தபொதிஒன்றைக்கைப்பற்றி, பிரித்துச்சோதனையிட்டபோதே ஹெரோயின்போதைப்பொருள் இருந்தமை தெரிய வந்தது.

அதைக் கடற்படைத்தளத்திற்குக் கொண்டுசென்று மேலதிக பரிசோதனைகள்மேற்கொண்ட போது அது ஹெரோயின் போதைப்பொருள் எனக் கண்டறியப்பட்டது.

மேற்படி ஹெரோயின் வடக்கு கடற்பரப்பு ஊடாக் கொழும்பிற்குக் கொண்டுசெல்வதற்கு எடுத்து வரப்பட்டிருக்கலாம்எனவும்போதைப்பொருள் கடத்தல் கும்பல் கடற்படையினரைக் கண்டதும் அதை கடலில் வீசிவிட்டு தப்பிச்சென்றிருக்கலாம் எனவும் கடற்படையினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ம)

## பஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில்பெந்திவெவ என்ற இடத்தில் நேற்று இச்சம்பவம் இடம் பெற்றது. விபத்தில் படுகாயமுற்ற நால்வரும் பொலன்னறுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர்.

பஸ்சாரதிபொலன்னறுவை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

## தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு இரண்டு நாள் விஜயமாக வருகை தந்திருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று மாலை 5.45 மணியளவில் கொழும்பு, கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களை சுமார் இருபத்தியைந்து நிமிட நேரம் சந்தித்துத் துப் பேசினார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், எம்.பிக்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், ரி.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோர் பங்குபற்றினர்.

அங்கு கூட்டமைப்பு சார்பில் இரா.சம்பந்தன் வலியுறுத்திய கருத்துக்களை செவிமடுத்த பின்னர் அதற்குப் பதிலளிக்கையிலேயே பிரதமர்மோடிமேற்படி விடயத்தைக் கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு :-

நீங்கள் குறிப்பிட்டமை போலவே தீர்வை உள்ளடக்கிய அரசமைப்பு விரைந்து வரும் என நாம் எதிர்பார்த்தோம். விடயங்கள் தாமதிப்பதை நாமும் அவதானித்துள்ளோம்.

நீங்கள் வலியுறுத்திய மக்களின் உடனடிப் பிரச்சினைகள் தொடர்பான விடயங்களும் உடன் தீர்க்கப்பட வேண்டும். அரசமைப்பு ஏற்பாடுகளும் கொண்டு வரப்பட வேண்டும்.

இவை குறித்துகொழும்புக்கு ஏற்கனவே நாம் எடுத்துக் கூறியுள்ளோம். அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை புதுடில்லியில் சந்தித்தபோதும் இதனையே அவரிடமும் கூறியிருந்தோம். இப்போதும் கொழும்பில் இலங்கை அரசுத் தலைவர்களிடம் இதனையே எடுத்துரைத்துள்ளோம்.

விவகாரங்கள்தாமதமானால் தேவையற்றசர்வதேசஅழுத்தங்கள் வரும் என்பதை கொழும்புக்கு உணர்த்தியுள்ளோம். – என்ற சாரப்பட அச்சந்திப்பில் கருத்து வெளியிட்டார் இந்தியப் பிரதமர்.

இலங்கையில் விசேட அபிவிருத்தித் திட்டங்களில் இந்தியா முனைப்புடன் ஈடுபடவிருக்கின்றது என்ற தகவலையும் அவர் அங்கு வெளியிட்டார். (உ)

## மோடியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என. அதன்போது பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இச்சம்பவத்தில் காயமடைந்த பெண் மோடி நேற்றுத் திறந்து வைத்த புதிய வைத்தியசாலையில் முதலாவது நோயாளிகாகச் சேர்க்கப்பட்டார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிஇலங்கைக்குவிஜயம்செய்த போது அவரது போக்கு வரத்துக்காகவும் பாதுகாப்பு நடவடிக்கைக்காகவும் இந்திய விமானப் படையின்அதிநவீன3ஹெலிகொப்டர்கள் இலங்கைக்கு வந்தன.

மலையகத்தில் இந்திய அரசின் நிதிபுதவியுடன் அமைக்கப்பட்டபுதியவைத்தியசாலையைத் திறந்து வைப்பதற்காக நேற்று நண்பகல் 12.15 மணியளவில் மோடி அங்கு சென்றார். அவர் சென்ற ஹெலிகொப்டர் உட்பட மூன்று ஹெலிகொப்டர்களும் நேற்று நண்பகல் 12.15 மணியளவில் ஹட்டன்டன்பார் விளையாட்டு மைதானத்தில் தரையிறக்கும் போதே இந்த அனர்த்தம் ஏற்பட்டது. ஹெலி கொப்டரின் காற்றாடிகளில் இருந்து வந்த காற்றமுத்தமே வீடுகள் சேதமடையக் காரணம் எனக் கூறப்பட்டது.

இதேவேளை, நேற்று முன்தினம் குறித்த விமானங்கள் ஒத்திகையில் ஈடுபட்டபோதும் அப்பகுதியில் இருந்த சில வீடுகள் சேதமடைந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

## காலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முழுமையாகச் செல்லு படியற்றது என அறிவிக் குமாறு கோரி ஐக்கிய தேசிய கட்சி விரைவில் மேன்முறையீட்டுநீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல்செய்ய உள்ளதாம்.

ஐக்கிய தேசியக் கட் சியின் தென் மாகாண சபை உறுப்பினரும்கரந்தெனியதொகுதிஅமைப்பாளருமானசட்டத்தரணிஜயந்த ஜயவீரஇத்தகவலைத்தெரிவித்தார்.

இரட்டைக் குடியுரிமை கொண்ட கீதா குமாரசிங்க நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டமை தவறு என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்றது.

அத்தகையவரை உள்ளடக்கிய வேட்பாளர் பட்டியலும் சட்ட முறையற்றதுஎன்பதால்அந்தப் பட்டியலை செல்லுபடியற்றது என அறிவிக்குமாறு நீதிமன்றத்திடம் கோருவது குறித்தே தற்போது ஆராயப்படுவதாகக் கூறப்பட்டது.

காலி மாவட்டத்தில் கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள்சுதந்திரமுன்னணிசார்பில் 6 பேரும், ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் 4 பேரும் நாடாளுமன்றுக்குத் தெரிவாகியிருந்தனர்.

ஐக்கியமக்கள்சுதந்திரமுன்னணிசார்பில்தெரிவாகிய அறுவரில் ஒருவரான கீதா குமாரசிங்கவின் தெரிவையே முறையற்றது என மேன்முறையீட்டு நீதிமன்றம் முன்னர் தீர்ப்பளித்திருந்தது. (உ)

## கீதா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்தி உத்தரவு பிறப்பித்திருக்கின்றது.

மீண்டும் இந்த விடயத்தை திங்களன்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் வரை நடைமுறையில் இருக்கத்தக்கதாக இந்த இடைநிறுத்த உத்தரவு நேற்று பிறப்பிக்கப்பட்டது.

தமக்கு எதிரான தீர்ப்பை ஆட்சேபித்து கீதா குமாரசிங்க சார்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்டமேன்முறையீட்டு மனு நேற்று நீதியரசர்கள் வி.பி. அலுவிகாரை, பிரியங்க ஜெயவர்த்தனா, அனில் குணரட்ண ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிர் மனுதாரர்களுக்கு உரிய அழைப்புக்கட்டளைகிடைக்காத காரணத்தால் இந்த மனுவைத் திங்களன்று பரிசீலிக்க நீதிமன்று முடிவு செய்தது.

அதுவரை, மனுதாரரின் கோரிக்கைக்கு அமைய மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை இடைநிறுத்த உயர் நீதிமன்றம் நேற்று விசேட அனுமதி வழங்கியது. (உ)

## பின்னிரவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த ராஜபக்ஷவின் கோரிக்கையின் பேரில் இந்தச் சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டதாகக்கூறப்பட்டது. கொழும்பில் உள்ள இந்தியத்தூதுவரின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

நேற்று முன்தினம் மாலையில்கொழும்புவந்தடைந்த இந்தியப்பிரதமர்அன்றுமுன்னிரவு வரைதமக்குஒதுக்கப்பட்டநிகழச்சிகள் அனைத்திலும் பங்குபற்றினார்.

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கிய இரவுவிருந்தில்கலந்துகொண்ட அவர், அதன்பின்னர்தாம்தங்க வேண்டிய தாஜ் சமுத்திரா ஹோட்டலுக்குச் செல்ல முன்னர், கொழும்பில் உள்ள இந்தியத்தூதுவரின்உத்தியோகபூர்வ இல்லமான 'இந்திய ஹவுஸு'க்குச்சென்றார். அங்குமுன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித் துப் பேசினார்.

இந்தப்பேச்சுக்களின்போது இந்தியப் பிரதமருடன் அவரின் தேசியப்பாதுகாப்பு ஆலோசகர் அஜித்டோவல்மற்றும்கொழும்புக்கான இந்தியத்தூதுவர்தரஞ்சித் சிங் சிந்து ஆகியோரும் –

மஹிந்த தரப்பில் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரும் பங்குபற்றினர். (உ)

## மலையகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டுஉரையாற்றும்போதே இவ்வாறு தமிழிலும் அவர் கருத்துரைத்தார்

"முதலில் உங்களிடம் பேசக் கிடைத்த வாய்ப்பினை பெரிய பாக்கியமாகநினைக்கின்றேன்" என ஆரம்பித்தார் மோடி.

2000 ஆண்டுகளுக்கு முன் தமிழ் அறிஞர் கனியன் பூங்குன்றனார் பாடிய 'யாதும் ஊரே.. யாவரும் கேளீர்..' என்ற பாடல் வரிகளை படித்துக்காட்டினார்.

நீங்கள் அனைவரும் தமிழ் தாயின்பிள்ளைகள், தமிழ்தாய் என தமிழின் பெருமையைப் பற்றி கூறினார்.

ஜாதக கதைகள் உட்பட பல்வேறு பௌத்த நூல்கள் தமிழ் மொழியின்தந்தையாக அகத்தியரை குறிப்பிடுகின்றன. கண்டியைச்சேர்ந்தநாயக்க அரசபரம்பரையினர் மதுரை மற்றும் தஞ்சாவூர் நாயக்க மன்னர்களிடம் பெண் கொடுத்து பெண் எடுத்தார்கள் என்றும் நினைவூட்டினார்.

திருவள்ளுவர் கூறிய 'ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா ஊக்கம் உடையான் நுழை' என்ற திருக்குறளையும் இதன்போது மோடி கூறி இறுதியாக நன்றி தெரிவித்து தனது உரையை முடித்தார்.

எனினும்மோடிக்குமுன்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் உரையாற்றினார்கள். ஆனால் தமிழில் ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

தமிழ் மக்கள் கூடியிருந்த அந்த இடத்தில் இலங்கை பிரதமரும், ஜனாதிபதியும் கூட தமிழில் பேசாத நிலையில், இந்தியப்பிரதமர்தமிழின்பெருமை பற்றியும், இந்து சமயம் பற்றியும், இலக்கியக்கதைகள், பாடல்கள் மற்றும் திருக்குறள் என அனைத்தும் தமிழில் பேசியமை மலையக மக்களிடத்தில் பெரும் வரவேற்பை பெற்றது.

இந்தியாவின் தேசிய தலைவரே புரட்சித்தலைவர் எம்.ஜி. ஆர். இவர் பிறந்தது இலங்கையில். சிறந்த பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரனை தந்ததும் இந்த மண்ணே என்றும் அவர் புகழாரம் சூட்டினார்.

புலம்பெயர்ந்து இருக்கின்ற இந்திய வம்சாவளி மக்களின் வளர்ச்சியில் இந்தியா எப்பொழுதும்உறுதியாக இருக்கின்றது. இங்குள்ளவர்களின் படிப்பு, பொருளாதாரம் என அனைத்திலும் இந்தியா உடனிருக்கும்.

இந்திய கலாச்சாரம், இந்தியப்பண்டிகைகள் என அனைத்தையும் இலங்கை மலையக மக்களும் கொண்டாடுகின்றனர். இதன் மூலம் நாம் அனைவரும்ஒன்றுஎன்பதைக் காட்டுகின்றோம்.

இந்திய வம்சாவளியினர் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

தற்போது இந்திய வீட்டுத்திட்டத்தின் உதவியுடன் மலையக மக்களுக்கு, 4000 வீடுகள் அமைக்கப்படுகின்றன. அதே போல் 10,000 வீட்டுத்திட்டமும் விரைவில் முன்னெடுக்கப்படும் – எனவும் இந்திய பிரதமர் உறுதியளித்துள்ளார்.

## இணைப்பும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியிடம் விளக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

நேற்றுக் கட்டுநாயக்காவில் இந்தியப் பிரதமரைச் சந்தித்துப் பேசிய சமயமே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பக்கம் 03 >>>

# அமெரிக்கக் குடியுரிமையை நீக்க தீர்மானித்துள்ளாராம் கோட்டாபய!

## தகவல் வெளியிட்டது கொழும்பு ஊடகம்

கொழும்பு, மே 13

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தனது அமெரிக்க குடியுரிமையை நீக்கிக் கொள்வதற்குத் தீர்மானித்துள்ளார் என்று கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நோக்கில் கோட்டாபய இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கடந்த முதலாம் திகதி நடைபெற்ற மேதினப் பேரணியில், மஹிந்த அணிக்குப் பெரும் திரளான மக்கள் பங்கேற்றிருந்தனர். இரண்டு பிரதான கட்சிகளையும் விட மஹிந்த தலைமையில் நடைபெற்ற பேரணியில் லட்சக் கணக்கான மக்கள் பங்கேற்றனர்.

இதன் காரணமாக வீழ்ச்சியடைந்திருந்த ராஜபக்ஷர்களின் அரசியல் பயணம் பிரகாசமாக மாறியுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு 2020 இல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய போட்டியிடுவது உறுதி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவுக்கு கட்சிக்குள் ஆதரவு குறைந்து வருகிறது என்றும் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பலர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவர் என்பது உறுதி என்றும் கோட்டாபய தரப்பு மதிப்பிட்டுள்ளது.

எப்படியிருப்பினும் 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதி வேட்பாளராக கோட்டாபய ராஜபக்ஷ போட்டியிடுகின்றமை தொடர்பில் கூட்டு எதிர்க் கட்சியில் இணக்கப்பாடு இது வரை எட்டப்படவில்லை. இருந்த போதிலும் மிகவும் தகுதியான வேட்பாளர் பட்டியலில் முன்னணியில் கோட்டாபயவே உள்ளார்.

இதேவேளை, அமெரிக்க குடியுரிமையை நீக்கிக் கொள்வதற்காக தற்போது அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தில் அறிவிக்கப்பட்டாலும், சட்ட ரீதியான செயற்பாட்டுக்கு இரண்டு மூன்று வருடங்கள் அவசியமாகும்.

அதற்கமைய, அந்த நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்வதற்கு இலங்கை மற்றும் அமெரிக்காவில் கோட்டாபயவுக்கு நெருக்கமான வர்த்தகர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது வரையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் மகள் இவன்கா, ட்ரம்பிடம் கலந்துரையாடல் மேற்கொள்கிறார்.

இலங்கையின் அபிவிருத்தி மற்றும் அரசியல் தொடர்பில் சீன அரசு தீர்மானமிக்க அழுத்தம் ஒன்றை தற்போது வரையில் பிரயோகித்து வருகின்றது.

இந்நிலையில் இலங்கையை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டிய அவசியம் அமெரிக்காவுக்கு ஏற்பட்டுள்ளது. இதற்காக அமெரிக்காவுக்கு நெருங்கிய தரப்பினர் இலங்கையில் செயற்பட வேண்டும் என்பது அவர்களின் நோக்கமாகும்.

இந்த விடயத்தை இவன்கா ட்ரம்பின் அவதானத்துக்குக் கொண்டு செல்வதற்காக இந்த வர்த்தகர்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ராஜபக்ஷ ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு அமெரிக்கா கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் போது சீனாவுடன் இலங்கை மிகவும் நெருக்கமாக செயற்பட்டமையே இதற்கான காரணமாகும்.

தற்போது மைத்திரி அரசிலும் இதே நடைமுறை முன்னெடுக்கப்படுகின்றமையால் அமெரிக்காவின் எதிர்பார்ப்பு மேலும் சரிந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.-என்றுள்ளது. (ஐ)

## முள்ளிவாய்க்காலில் வெடிக்காத நிலையில் துப்பாக்கி ரவைகள்

முல்லைத்தீவு, மே 13

இறுதி யுத்தம் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில் வெடிக்காத நிலையில் விடுதலைப் புலிகளின் துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

யுத்தம் முடிவடைந்து எட்டு வருடங்கள் கடந்த நிலையிலும் யுத்தத்தின் அடையாளங்களையும் வடுக்களையும் அந்தப் பகுதியில் பரவலாகக் காண முடிகின்றது.



இந்த நிலையில் முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில் மண்ணில்புதையுண்ட நிலையில் விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்பட்டவை என்று நம்பப்படும் துப்பாக்கி ரவைகள் ஏராளமாக கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

இவற்றில் பல ரவைகள் வெடித்த நிலையிலும், இன்னும் பல ரவைகள் வெடிக்காத நிலையிலும் காணப்படுகின்றன என்று கூறப்பட்டது. (ஐ)

## குருநாகல் வைத்தியசாலையில் ஊழியர்கள் 80 பேருக்கு டெங்கு!

கொழும்பு, மே 13

குருநாகல் மாவட்ட வைத்தியசாலையில் பணிபுரியும் மருத்துவர்கள், தாதியர்கள், சிற்றூழியர்கள் உட்பட 80 பேருக்கு டெங்கு நோய் தொற்றியிருக்கின்றது என்று அந்த வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஒரு மாத காலத்தில் குருநாகல் வைத்தியசாலையில் நூற்றுக் கணக்கான வெளிநோயாளர்கள் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த வைத்தியசாலையை அண்மித்த பகுதியில் பல கட்டட நிர்மாண வேலைகள் நடை பெற்றுவருவதால் அங்கு டெங்கு நுளம்புகளின்பெருக்கம்அதிகரித்திருக்கின்றது எனவும் வைத்தியசாலை நிர்வாகம் மேலும் கூறியுள்ளது.

அண்மைக் காலமாக இலங்கையின் பெரும்பாலான இடங்களில் டெங்கின் தாக்கத்துக்கு இலக்காகி பலர் பாதிக்கப்பட்டிருந்தனர். டெங்கு நோயின் தாக்கத்தால் பலர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நேர்முகப் பரீட்சை

கலைமாணிப் பட்டப் படிப்புக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 23 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் இடம்பெற உள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பிதழ் கடிதங்கள், தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. விண்ணப்பித்தும் அழைப்பிதழ் கடிதங்கள்கிடைக்கப் பெறாதோர், மேற்படி நிலையத்துடன் எதிர்வரும் 18 ஆம் திகதி முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இலங்கைவேந்தன் கலையரங்கத்தில் இயல், இசை, நாடக அரங்கு

### நான்காம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 12

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி நடத்தும் இயல், இசை, நாடக அரங்கு கடந்த புதன் கிழமை ஆரம்பமானது. இந்த நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை வரை இடம்பெறும்.

யாழ்ப்பாணம், நீராவியடி கல்லூரி வீதியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி கலையரங்கத்தில் நாளாந்தம் நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

இன்றைய நான்காம் நாள் நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட உதவிப்பதிவாளர் இ.சர்வேஸ்வரா தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கிழக்குப்பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் த.ஜெயசிங்கம் கலந்து கொள்வார்.

பி.எஸ். பிச்சையப்பா ரஜீந்தன் குழுவினரின் மங்கல இசையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

நாதஸ்வரம்: பி.எஸ். சுரசாகித்தியன் ,எம்.சாரகேசவன், தவில்: சூலூர் கே. ராமகிருஷ்ணா, திருச்செங்கோடு எஸ். அஜய்.

தொடர்ந்து கிழக்குப்பல் கலைக்கழகத் தற்காலிக விரிவுரையாளர் கஸ்தூரி கணேசமூர்த்தியின் திருமுறை ஓதல் இடம்பெறும்.

அடுத்து ஆசியுரையை வீணாகான குருபீட நிறுவுநர் சிவஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்கள், வாழ்த்துரையைக் காலைக் கதிர் ஆசிரியர் ந. வித்தியாதரன் ஆகியோர் நிழ்த்துவர்.

தொடர்ந்து சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவனத்தின் தயாரிப்பில், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஷர்மிளா ரஞ்சித்குமாரின் நெறியாள்கையில் 'மல்லாரி காளி கௌத்தும்' நடனம் இடம்பெறும்.

அடுத்து 'லய நாதம் கதம்பம்' இசை அரங்கத்தில் விரிவுரையாளர் திருமதி பிரவீனா மாதவன் மற்றும் விரிவுரையாளர் பிரிசில்லா ஜோர்ஜ் ஆகியோரின் வயலினும், விரிவுரையாளர் நாகரட்ணம் மாதவன் மற்றும் விரிவுரையாளர் திருமலை ப.திவ்ய ரூபசர்மா ஆகியோரின்மிருதங்கமும்இடம்பெறும்.

தொடர்ந்து, சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி உஷாந்தி நேசகாந்தன் நெறியாள்கையில் கீர்த்தனை விரிவுரையாளர்களான தெட்சணாமூர்த்தி பிரதீபன், திருமதி நிர்மலேஸ்வரி பிரஷாந்த் ஆகியோரின் குரலிசை, விரிவுரையாளர் கணேசராஜா துவாஸ்கரின் நெறியாள்கையில் தில்லானா என்பன இடம்பெறும்.

கலைஞர் கௌரவிப்பு, பிரதம விருந்தினர் உரையைத் தொடர்ந்து, விரிவுரையாளர் த. விவானந்தராஜா நெறியாள்கையில் 'சவால்' என்னும் நாடகம் இடம் பெறும். (இ-ச)

காலைக்கதிர்



## சர்வதேச வெசாக் நிகழ்வு கொழும்பில்

United Nations Day of VESAK 2561 B.E./2017 SRI LANKA

கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற சர்வதேச வெசாக் நிகழ்வுகளில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பிர தம அதிதியாகக் கலந்து கொண்டார். அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.










## அமெரிக்கக் குடியுரிமையை ரத்துச் செய்ய முடிவெடுக்கவில்லை என்கிறார் கோட்டாபய

பகிரங்க அரசியலில் ஈடுபடத்தான் தீர்மானிக்கவில்லை என்பதால் தனது அமெரிக்கக் குடியுரிமையை இரத்து செய்து கொள்ளும் அவசியம் தனக்கில்லை என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக கோட்டாபய ராஜபக்ஷ தனது அமெரிக்கக் குடியுரிமையை இரத்து செய்ய உள்ளார். எனக் கொழும்பு ஊடகம் ஒன்றை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியிருந்தன. (அச்செய்தி 19ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது).

இதற்காக கோட்டாபயவுக்கு நெருக்கமான சில வர்த்தகர்கள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் புதல்வியான இவன்கா ட்ரம்புடன் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர் எனவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இது குறித்து தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட கோட்டாபய –

எனது மகன், மனைவியின் தாய், சகோதரர்கள் அமெரிக்காவில் வசித்து வருகின்றனர். இதனால் நான் அடிக்கடி அமெரிக்காவுக்குச் சென்று வர வேண்டும். அதேபோல் பகிரங்க அரசியலுக்குவர நான் இன்னும் தீர்மானிக்கவில்லை. இதனால் எனது அமெரிக்க குடியுரிமையை இரத்து செய்து கொள்ளும் தேவை எனக்கு இல்லை.

அமெரிக்கக் குடியுரிமையை இரத்து செய்து கொள்ள நீண்ட காலம் எடுக்கும் என்பதும் பொய்யானது. குடியுரிமையை இரத்து செய்துகொள்ள வேண்டுமாயின் அமெரிக்கத் தூதரகத்தில் கோரிக்கை மனுவைச் சமர்ப்பித்தால் இரண்டு வாரங்களில் அதனை இரத்து செய்து கொள்ள முடியும் – என்றார்.

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ போட்டியிட உள்ளார் எனக் கூட்டு எதிர்க்கட்சியின் அரசியல்வாதிகள் கூறி வந்தனர். கோட்டாபயவும் அப்படியான உள் அர்த்தங்களைக் கொண்ட கருத்துக்களை வெளியிட்டு வந்தார்.

இந்த நிலையில் கோட்டாபய தனது முடிவை மாற்றிக் கொண்டுள்ளார் என அரசியல் தரப்பில் தகவல்கள் கூறுகின்றன. (உ)

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்தும்
திருவள்ளுவர் விழா



அழைப்பிதழ்
காலம்:
இன்று சனிக்கிழமை
பிற்பகல் 4 மணி
இடம்:
நல்லூர் ஸ்ரீ
துர்க்காதேவி
மணிமண்டபம்
தலைவர்:
பேராசிரியர் மனோன்மணி
சண்முகதாஸ் (தலைவர்,
யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிகழ்வு அனுசரணையாளர்:
சிவகணேசன் டெக்ஸ்டைல்ஸ்
இல. 41, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

ரூபி ஜுவல்லறி
அதிஷ்ட சீட்டிழுப்பு விவரம்

| சீட்டை இல. | பெயர் | இடம் | |
|---|---|---|---|
| 01) 504 | K.புஸ்பராஜா | இணுவில் | 1ம் பரிசு |
| 02) 776 | U.குமுதினி | சங்குவேலி | 2ம் பரிசு |
| 03) 801 | Mrs.பரமலிங்கம் | மட்டுவில் | 3ம் பரிசு |
| 04) 765 | மகிழினி | கொழும்புத்துறை | |
| 05) 770 | T.கவிதா | சுன்னாகம் | |
| 06) 816 | தமிழினி | நாயன்மார்கட்டு | |
| 07) 813 | ரஜிபன் | வட்டுக்கோட்டை | |
| 08) 783 | பாலகாந்தன் | தெல்லிப்பழை | |
| 09) 766 | பெ.யோகராசா | | |
| 10) 785 | மோகன் | | |

உரிமையாளர்,
ரூபி ஜுவல்லர்ஸ்,
227-229, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 6919







யாழ்ப்பாணம், இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி நீராவியடியில் உள்ள அதன் கலையரங்கத்தில் வருடாந்தம் நடத்தும் ஐந்து நாள் இயல், இசை, நாடக அரங்கு நிகழ்வு கடந்த புதனன்று ஆரம்பமாகியது. இரண்டாம் நாள் நிகழ்வின்போது பிடிக்கப்பட்ட படங்கள் இவை.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல. 30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாரித்து 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அச்சகத்தில் 13.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது